# ஞானச்சுடர்

## சந்நிதியான் ஆச்சிரமம்

தை 2013




வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை



# குறள்வழி

**அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை**
**ஆரிருள் உய்த்து விடும்.**

**பொருள் :** அடக்கமாகிய குணம்; ஒருவனைத் தேவர் மத்தியில் கொண்டுபோய்விடும்; அடங்காமை என்னும் குணம் அவனை நரகத்தில் தள்ளிவிடும். (121)

**காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்**
**அதனினூ உங்(கு) இல்லை உயிர்க்கு.**

**பொருள் :** உயிர்க்கு அடக்கத்தின் மேலான செல்வம் இல்லை; ஆதலால், அடக்கத்தைச் சிறந்த பொருளாகக் கொண்டு காக்க வேண்டும். (122)



# நற்சிந்தனை

## மறப்பேனோ குருநாதன் தன்னை

### திருவாய்மொழி

குறள் வெண்பா

சென்றன வாணாட்கள் என்றுநீ தேம்பாதே
என்றென்று முள்ளா யிணங்கு 19

பாலகற்குப் பாற்கடலைப் பாரி லழைத்தபிரான்
கோலமே யாவுங் குறி 20

காலனைக்கா லாலுதைத்தான் காமனையுந் தானெரித்தான்
ஆலமுண்ட கண்ட னறி 21

எல்லாமாய் அன்றி இயங்கா தியங்குகின்ற
வல்லபத்தை யாரறிவார் மன் 22

எங்கேநாம் அங்கே யிறைவன் எனவுணர்ந்தார்
சங்கையின்றிச் சொல்லுவார் தாம் 23

மந்திரமுந் தந்திரமும் வேண்டா மகத்துக்கள்
சுந்தரத் தாளே துணை 24

# ஞானச்சுடர்



வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை



# ஞானச்சுடர்

வெளியீடு— 2 சுடர்— 181



## பொருளடக்கம்

2013 தை


| | | |
|---|---|---|
| வேலும் மயிலும் சேவலும்... | க.ந. பாலசுப்பிரமணியம் | 01 –02 |
| எவ்வினையும் வேரறுக்கும்... | த. பால்ராஜ் | 03 –04 |
| திருவண்டப்பகுதி | சு. அருளம்பலவனார் | 05 –06 |
| எளிமையாகப் பிறந்திடு... | கே.எஸ் சிவஞானராஜா | –07 |
| படையல் | முருகவே. பரமநாதன் | 08 –09 |
| கந்தரநுபூதி | வாரியார் சுவாமிகள் | 10 –11 |
| ஞானத் தாயாகிய... | திருமதி பா. சிவனேஸ்வரி | 12 –14 |
| ஸ்ரீ ரமண நினைவலைகள் | – | 15 –16 |
| ஆன்மீகத்தின்... | கு. சோமசுந்தரம் | 17 –19 |
| சிறுவர் கதைகள் | – | 20 –21 |
| சைவசமய வினாவிடை | ஆறுமுகநாவலர் | 22 –23 |
| சான்றோர் யார்? | ஐ.கோ. சந்திரசேகரம் | 24 –26 |
| நித்திய அன்னப்பணி | – | 27 –28 |
| நம்பிக்கை | காரை எம்.பி. அருளானந்தன் | 29 –30 |
| திருமந்திரக் கதைகள் | கே.வி. குணசேகரம் | 31 –32 |
| தமிழர் வரலாற்றில்... | வாகரைவாணன் | 33 –35 |
| சைவத் திருக்கோயிற்... | கா. கைலாசநாதக் குருக்கள் | 36 –38 |
| நுண்ணிய நூல்பல... | சிவ. சண்முகவடிவேல் | 39 –41 |
| ஆலய தரிசனமும்... | நா. நல்லதம்பி | 42 –44 |
| காளமேகம்... | – | 45 –47 |
| யார் எமது பகைவர்கள்? | செல்வி பா. வேலுப்பிள்ளை | 48 –49 |
| வாசகர் போட்டிக்கான... | – | 50 –51 |
| தமிழகத் திருக்கோயில்... | வல்வையூர் அப்பாண்ணா | 52 –60 |


அன்பளிப்பு: மலர் ஒன்று 30/= ரூபா

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இலக்கம்: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

### ஆவரங்கால்

## நடராஜா இராமலிங்க தேவஸ்தானத்தின் பிரதிஷ்டா வித்தகர் பிரம்மஸ்ரீ வே. நடராசக் குருக்களின்

# ஆசி உரை



சந்நிதியான் ஆச்சிரமம் நடாத்திவரும் நித்திய அன்னதானப் பணியுடன் சமுதாயப் பணிகளும் செய்து வருவதோடு இந்த மலரை வெளியிட்டு மக்களின் அறிவுப் பசியினையும் பசித்து வரும் அடியார்கள் பசியினையும் போக்கும் பணியினையும் ஆற்றி வருகின்றது.

இம்மலர் அழகான அட்டைப்படத்துடனும் கட்டுரைகள், கவிதைகள் பாடல்கள், பொன்மொழிகள் எனப் பலதரப்பட்ட சமய விடயங்கள் தாங்கி வெளிவருகிறது. உலக மக்கள் மத்தியிலும் பிற மதத்தவர்கள் சமயத்தவர்கள் வரவேற்பிலும் நிகழ்கின்றது.

வாராந்த நிகழ்வு என்று அட்டையில் குறிக்கப்படும் விடயத்தின்மூலம் வெள்ளிதோறும் நடாத்தப்படும் நிகழ்வில் இலைமறை காயாக இருப்பவர்களின் ஆற்றல் வெளிக்கொண்டு வரப்படுகிறது. அவர்களது கட்டுரைகள், கவிதைகள், பாடல்கள் அனைத்து மக்களையும் சமய அறிவுள்ளவர்களாக்கி நல்வழிப் படுத்துகிறது. எனவே நாம் எல்லோரும் எல்லா நன்மையும் பெறவேண்டுமென நடராச இராமலிங்கப் பெருமானதும் கடப்பமலர் மாலை அணிந்த கலியுக வரதனும் ஆகிய முருகப்பெருமானதும் திருமலர் தாள்களை வணங்கி தைமாத நன்நாளில் 181ஆவது மலர் சிறக்க வேண்டுமென நல்லாசிகூறி வணங்கி அருளாசி நல்குகிறேன்.

"சுப மஸ்து லோக சாமதா சுகினே பவந்து"

# இந்துமத பீடாதிபதியின் நல்ஆசி



சந்நிதியான் ஆச்சிரமத்தின் வெளியீடாகிய ஞானச்சுடர் தமது 15 வயதினை நிறைவு செய்து 16 வயதில் காலடி எடுத்து வைப்பதில் இந்து மதத்தவர்கள் அனைவருமே பெருமையடைகிறார்கள்.

ஆச்சிரமத்தின் பணிகள் மிகவும் சிறப்பானதாகவும் அனைவராலும் பாராட்டிப் போற்றிப் பேசும்படியாக இருப்பதனை நாம் இன்று கண்கூடாகப் பார்க்கின்றோம்.

ஆச்சிரமப் பணிகளில் முக்கியமான அன்னதானப் பணி ஒன்றுடன் நின்றுவிடாது அறுகுபோல் வேரூன்றி ஆல்போல் தழைத்து பல சமய சமூகப் பணிகளுடன் மாதாந்த சஞ்சிகையாக ஞானச்சுடர் மென்மேலும் அரிய சமயக் கருத்துக்களுடன் தொடர்ந்தும் வெளிவர வேண்டும். இத்தகைய பணிகளை சிறப்புடன் செய்வதற்கு சந்நிதிவேற் பெருமான் ஆச்சிரமத்தின் சுவாமிகளுக்கு சகல வளங்களையும் கொடுக்கவேண்டும் என்று வேற்பெருமானை பிரார்த்திப்பதோடு, நல் ஆசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

"லோகா சமஸ் தாசுகினோபவந்து"

"வாழ்க ஞானச்சுடர் வளர்க அதன்பணி"

**சிவஸ்ரீ பரமேஸ்வர மனோகரக்குருக்கள்**

**பிரதமகுரு**

**வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தானம்**

**வல்வெட்டித்துறை.**

**போஷகர், சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

**சந்நிதியான் ஆச்சிரமம்.**

# அகில உலக சைவக்குருமார் சம்மேளனம் இந்துமத குரு பீடாதிபதியின்

# ஆசிச்செய்தி



சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் மாதந்தோறும் வெளியிடப்படும் ஞானச்சுடர் தனது 15ஆவது ஆண்டுகளைப் பூர்த்தி செய்து 16ஆவது ஆண்டில் தடம் பதிப்பதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

கடந்த 15 ஆண்டுகளில் ஞானச்சுடரின் வளர்ச்சி அபரிதமானது என்பதை எவரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. பல சோதனை களையும் தாண்டி சாதனையுடன் வீறுநடை போடுகின்றது. பதினாறாம் ஆண்டில் தடம்பதிக்கும் ஞானச்சுடர் "என்றும் பதினாறு" என்ற பெருமை யுடன் நீடூழி வாழ எல்லாம் வல்ல அன்னை ஸ்ரீ முத்துமாரி அம்மனை இறைஞ்சி வேண்டிப் பிரார்த் தித்து எனது பாராட்டுக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்து அமைகின்றேன்.

"சர்வோ ஜனகா சுகினோ பவந்து"
"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"
"அன்பே சிவம்"

**சிவஸ்ரீ சோமாஸ்கந்த, தண்டபாணிக தேசிகர் J.P**
**பிரதமகுரு வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்**
**வல்வெட்டித்துறை.**
**போஷகர்; சைவ கலை பண்பாட்டுப் பேரவை.**
**சந்நிதியான் ஆச்சிரமம்.**

# ஞானச்சுடர் பல்லாண்டு வாழ வளர எமது வாழ்த்துக்கள்



கலியுகவரதனாம் கந்தன் அருளினால் அன்னப்பசியுடன், அறிவுப் பசியும்போக்கும் சந்நிதியான் ஆச்சிரமத்தின் பல்துறைப்பட்ட அறப்பணிகளும் சிறப்புடன் வளர மனநிறைவுடன் வாழ்த்துகின்றோம். படிக்க விரும்பும் மாணவரிடம் புத்தகம், கொப்பி, பென்சில் யாவும் இருந்தாலும் அவரை வழிநடத்த நல்லதொரு ஆசான் இருப்பது அவசியமானதாகும். அந்த விதத்திலே சந்நிதியான் ஆச்சிரமப் பணிகளை நல்லமுறையில் முன்னின்று வழிநடாத்திவரும் மோகனதாஸ் சுவாமிகளின் தனித்துவமான திறமையை பாராட்டி வாழ்த்துகின்றோம். மோகனதாஸ் சுவாமிகளின் வழிநடத்தலில் அறிவுப்பசி போக்கும் ஞானச்சுடர் மலர்வதும், நித்திய அன்னதானப் பணியுடன் பல்வேறு அறப் பணிகளும், மருத்துவப் பணிகளும் தொடர்வதும் பெருமையுடன் போற்றுதற்குரியதாகும்.

தொண்டர் தம்பெருமை சொல்லுவதுமரிதே எனும்படி சந்நிதியான் ஆச்சிரமத்தின் வியத்தகு வளர்ச்சி எல்லோர்க்கும் பெருமை தருவதாக உள்ளது. எல்லாம் அவன் செயலேயாகும்.

தாங்கள் நற்பணிகள் வாழ்க! வளர்க!! என மனப்பூர்வமாக வாழ்த்துகின்றோம்.

அன்புடன்

**சிவஸ்ரீ கு. தியாகராஜக்குருக்கள்**
**(நீர்வை மணி)**

# வாழ்த்துரை

ஈழவள நாட்டின் வடபால் அமைவுற்ற திருமுருக ஆலயங்களுள் சைவத் திராவிடர் மரபுவழி, பூசைகளும், வழிபாடுகளும் இடம்பெறும் திருக்கோவில் செல்வச்சந்நிதியாகும். திராவிடப் பாரம்பரியத்திற்கே உரிய மணியும், சங்கும் சேமக்கலமும், பறையும் மங்கள வாத்தியங்களாய் முழங்க, மௌனமொழிப் பிரார்த்தனையுடன் பவ்வியமாக தீபாராதனைகள் இங்கு இடம்பெறும் இதுவே சங்ககாலம் முதற்கொண்டு நிலவிவரும் தமிழர் வழிபாட்டு முறைமையாகும்.

சந்நிதியான் சந்நிதிக்கு வருகை தரும் அடியவர்கள், ஆலயத்தை ஒட்டி ஓடிக்கொண்டிருக்கும் ஆற்றுநீரில் நீராடி, தூய உடை தரித்து எம்பெருமானைத் தரிசிப்பர். உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்கிற பாகுபாடு வழிபட வருவோரிடமும் காணமுடியாது. அர்ச்சகர்களது பணிகளிலும் கண்டுகொள்ள முடியாது.

வழிபாட்டினை நிறைவு செய்த அடியவர்கள் ஓய்வுக்காகவும் செவி இன்பம் துய்ப்பதற்காகவும், ஆகுதிக்காகவும் பேதமின்றிச் சென்று சேருமிடம் சந்நிதியான் ஆச்சிரமமாகும். வானளாவிய மரங்கள்சூழ, இளம் தென்றல் தாலாட்டி நிற்க எளிமைமிகு கட்டிடங்களுடன் தூய்மையாகக் காட்சிப்படும் இடமே சந்நிதியான் ஆச்சிரமமாகும்.

இங்கிதங்களை இனிதே நிறையப் பெற்ற இவ் ஆச்சிரமம் மேற்கொள்ளும் பணிகள் இன்று பல் பரிமாணம் கொண்டவை. ஆரம்ப காலத்தில் குருபூசையையும் மகேசுவர பூசையையும் மையப்படுத்திச் செயற்பட்ட ஆச்சிரமம், காலக்கிரமத்தில் கலை பண்பாட்டுப் பேரவையினை அங்குரார்ப்பணம் செய்து கொண்டதன் வழியாய், பணி விருத்தி கண்டது.

சைவத்தின் மேன்மையையும் தமிழர்தம் பண்பாட்டின் பெருமையையும் வெளிக்கொண்டு பலவாய நிகழ்ச்சித் திட்டங்களை தினந்தோறும் நிறைவேற்றும் செயலரங்காய் செயற்பட்டு வருவது பாராட்டுதற்குரியது. இவை யாவற்றுக்கும் மகுடம்போல் சைவ நற்சிந்தனைகளையும், சைவ சமயச் செய்திகளையும் தாங்கியவாறாய் "ஞானச்சுடர்" என்னும் அறிவார்ந்த மாதாந்தச் சஞ்சிகையை பதினைந்து ஆண்டுகளாக வெளியிட்டு வருகின்றது என்கிற செய்தி பிரமிப்புக்குரியதாகும்.

நூலொன்றினை வெளியிடுதலில் எதிர்ப்படும் எண்ணற்ற கடின நிலைகளை அனுபவ வழி நான் நன்கறிவேன். சைவத்தமிழ் பண்பாட்டைப் பறைசாற்ற அரசு சார்பாகச் செயற்படுத்தப்படும் திணைக்களங்கள்கூட சில சமயங்களில் ஒருசில சஞ்சிகைகளை வெளியிட்டிருந்தும்கூட, தொடர்ந்தும் தொடர முடியாமல் தோல்வி கண்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

எத்துணை இடர்வரினும் எதிர்கொண்டு தளராது தொடர்ந்து 15 ஆண்டுகளாக, மாத வெளியீடாக சைவ கலை பண்பாட்டுச் செய்திகளை தாங்கியவாறாய், தமிழ்ச் சைவ நல்லுலகெங்கும் வலம்வரும் "ஞானச்சுடரினை" வெளியிட்டுக் கொண்டிருக்கும், ஆச்சிரமச் சமூகம் பாராட்டுதற்குரியது. சைவ கலை பண்பாட்டுப் பேரவை பாராட்டுக்குரியது. ஆச்சிரமத்து அனைத்து நற்பணிகளுக்கும் "அச்சாணியாய்" விளங்கும் எனது பெருமதிப்பிற்குரிய மோகனதாஸ் சுவாமிகள் பாராட்டுக்குரியவர்.

தமிழ்வேதம் திருக்குறள் உரைத்த நல் அறங்கள் இங்கு உயிர்ப்பினைப் பெறுகின்றன.

நல்தாள் தொழும் பணியும், வசை ஒழிய வாழும் வழியும் ஈதலும் இசைபட வாழ்தல் நெறியும் தினமும் இங்கு உபதேசிக்கப்படுகின்றன.

"அற்றார் அழிபசி தீர்த்தல், அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி"

ஞானச்சுடர் வனப்புடன் வளர்கிறது.
வளரட்டும் நற்பணிகள்
நற்பணிகள் தொடர
பணிபுரிவோர் நலம்பெற,
சந்நிதியான் பாதங்களைப் பணிந்து பிரார்த்திப்போம்.

**க. சிவானந்தமூர்த்தி**
**மெய்யியல்துறை**
**யாழ். பல்கலைக் கழகம்**
**யாழ்ப்பாணம்.**

## கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் செந்தமிழ்ச் சொல்லருவி ச. லலீசன் அவர்கள் வழங்கிய

# வாழ்த்துரை



ஆன்மீக சஞ்சிகையாக எம்மண்ணில் தொடர்ச்சியாகப் பதினைந்து ஆண்டுகளாக வெளிவருகின்ற சாதனையை "ஞானச்சுடர்" நிலை நிறுத்தியிருப்பது மகிழ்ச்சியைத் தருகின்றது.

சஞ்சிகை வெளியீட்டிற்கு வாய்ப்பான சூழ்நிலை இன்று யாழ் மண்ணில் நிலவினாலும் ஆன்மீக சஞ்சிகை வெளியிட முயற்சிப்பவர்கள் அதனை விஷப் பரீட்சையாகவே கருதுவர். பொருத்தமான ஆக்கங்களைப் பெறல், சந்தைப் படுத்துதல் என்பன ஆன்மீக சஞ்சிகை வெளியீட்டில் எதிர்கொள்ளப்படுகின்ற பாரிய சவால்களாகும். இவ்விரு காரணிகளும் ஞானச்சுடர் வெளியீட்டினைப் பொறுத்தவரையில் சவால்களாகக் கொள்ளப்படுவதில்லை. ஆக்கங்களை வழங்குவதற்கு முண்டியடிக்கும் ஆன்மீகச் செல்வர்களும் சஞ்சிகையைப் பெற்று வாசித்துவிடத் துடிக்கும் ஆன்மீக அன்பர்களும் சந்நிதியான் நல்கிய பேரருளின் திறமே. இதனால் சஞ்சிகை வெளியீடு தடங்கலின்றித் தழைக்கின்றது.

சந்நிதியான் ஆச்சிரமப் பணிகள் ஈழத்துச் சைவ எழுச்சிக்கு அடிநாதமாக விளங்கிக் கொண்டிருக்கின்றன. ஆன்மீகப் பணிகள் என்றால் அவை கோயிற்கிரியைகளே என்ற சிந்தனைகளில் இருந்து விடுபட்டு, சமூகத்தை மையப்படுத்தி, மனித சேவையே தெய்வ வழிபாடு என்ற உயரிய போதனையை ஆச்சிரம அன்பர்கள் மெய்ப்பித்து வருகின்றனர்.

ஆன்மீகம் சார்ந்த பணிகளில் சிறியேனாகிய நானும் ஈடுபட 1998ஆம் ஆண்டிலிருந்து சந்நிதியான் ஆச்சிரம சுவாமி அவர்கள் களம் நல்கி வருகின்றார். நான் அறிந்தவற்றைப் பிறருடன் பகிர்ந்து கொள்வதில் என்னுள்ளும் ஓர் ஆத்ம திருப்தி ஏற்படுகின்றது. இவற்றிற்கெல்லாம் ஞானச்சுடரே பிரதான களமாக விளங்கி வருகின்றது.

ஆற்றங்கரையானின் அருளாசி என்ற தோன்றாத் துணையுடன் துணிந்து பயணிக்கும் ஞானச்சுடர் சூரிய சந்திரரின் இருப்பு உள்ளவரை எம்மவர்க்கு ஆன்மீகச் செல்வத்தை அள்ளி வழங்கவேண்டும். அகவை பதினைந்தில் கட்டிளமைப் பருவத்திற்குரிய வனப்புக்களுடன் காட்சிதரும் ஞானச்சுடருக்கு எனது நல்வாழ்த்துக்களை நவில்வதில் மனமகிழ்வடைகின்றேன்.

"யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே"

# எம் இனிய ஞானச்சுடரே!

## பல்லாண்டு வாழியவே!!

கண்ணியமான நல்ல கருத்துள்ள கட்டுரைகள்
காலத்தின் தேவை கருதி நல்ல நல்ல கவிதைகள்
எண்ணிலாப் பொருள்மிக்க ஏற்றமிகு விடயங்கள்
இத்தனையும் தாங்கி வரும் எம் இனிய ஞானச்சுடரே!
மண்ணிலே நீ என்றும் நல்ல மாண்புடன் திகழ்ந்து
மக்களை மகிழ்விக்க பல்லாண்டு வாழ்ந்துநிதம்
புண்ணியமே செய்து புகழோடு வெளிவந்து மலர
உளமார வாழ்த்துகின்றோம் நல்லபடி வாழியவே!

சிந்தனையிலினித்திடும் சிறப்பான பல கட்டுரைகள்
சீர் திருத்தம் செய்து நிற்கும் கருத்தான கவிதைகள்
வந்தனை செய்கின்றோம் நீ வளமோடு பிரகாசித்து
வாழ்க்கை வளம்பெற இவ்வையகத்தில் ஒளிவீசி
கந்தனைக் கரங்குவித்துக் கச்சிதமாய் வெளிவந்து
காலமெல்லாம் நீ நல்லபணியாற்றிட வேண்டுமென
உந்தனை வாழ்த்துவதில் உவகையே கொள்கிறோம்
ஊர் போற்றப் பார் மகிழப் பல்லாண்டு வாழியவே!

-இராசையா ஸ்ரீதரன்-




## வெளியீட்டுரை:-

மார்கழிமாத ஞானச்சுடருக்கான வெளியீட்டுரையை குப்பிளானில் கிராம அலுவலராகப் பணிபுரியும் திரு சோ. பரமநாதன் அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தனது உரையில் ஆற்றங்கரை வேலவனது அருளாசியோடு ஆச்சிரமத்தில் நடைபெறுகின்ற சமய, சமூகப் பணிகளையும், அப்பணிகளின் சிறப்புக்களையும் எடுத்துரைத்தார். அப்பணிகளின் தலையாய பணியாகத் திகழ்வது ஞானச்சுடர் வெளியீடாகும் என்று கூறியதோடு, இம்மலரில் இடம்பெறும் கட்டுரைகள், கவிதைகள் யாவும் எளிமையான சொற்பிரயோகங்களையும் நிறைந்த கருத்துக்களையும் கொண்டு சிறந்து விளங்குகின்றது.

நாட்டில் ஏற்பட்ட பலவித இடர்பாடுகள் மத்தியிலும் எவ்வித தடங்கலும் அற்ற முறையில் கடந்த பதினைந்து வருடங்களாக இம்மலர் வெளிவருவதென்பது இலேசான காரியமல்ல. இவற்றுக்கெல்லாம் மூலகாரணனான சந்நிதியான், தன்னையும் ஒவ்வொரு வருடமும் இம்மாத வெளியீட்டினில் பங்குபெற வைப்பதுவும் அவன் இறையருளே என்றார். இனிவருங் காலங்களில் இம்மலர் மென்மேலும் சிறந்து விளங்கவேண்டும் எனக் கூறியதோடு, தன் கருத்தினில் உருவான பாடல் ஒன்றினையும் சபையோர் மத்தியில் பாடி சபையினைக் கலகலப்பாக்கினார்.

## மதிப்பீட்டுரை:-

180ஆவது ஞானச்சுடர் மலருக்கான மதிப்பீட்டுரையை திருமதி குககுமாரி விஜயரகுநாதன் (அதிபர் நல்லூர் விக்னேஸ்வரா) அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தனது ஆரம்ப உரையில், ஞானச்சுடர் மலரானது தன்னகத்தே திருக்குறள், பொன்மொழிகள், பாடல்கள், கவிதைகள் எனப்பல அம்சங்களைத் தன்னகத்தே கொண்டு பலதரப்பட்ட வயதினருக்கும் பயன்தரக்கூடிய வகையில் நல்ல சமய சமூகக் கருத்துக்களையும் தாங்கி வருகின்றது எனவும், இற்றைவரையும் எதுவித இடர்பாடுமின்றி கிரமம் தவறாது வெளியிடப்பட்டு வருகின்றது என்று சபையோருக்குக் கூறினார்.

தொடர்ந்து கூறுகையில் ஞானச்சுடர் மலரானது சைவர்கள் மத்தியில் அறிவைப் பரப்புகின்ற ஒரு சுடராக அமையவேண்டும் என்று கூறினார். அத்தோடு இந்நூலானது காலப்போக்கில் சுடர்விட்டு அகில உலகம் முழுவதும் பிரகாசிக்க வேண்டும் என்று கூறியதோடு, 2013இல் தடம் பதிக்கும் ஞானச்சுடர் மலரானது புதுப்பொலிவுடன் மலரும் என்பதை சபையோருக்குக் கூறி தனது மலரில் இடம்பெற்றிருந்த கட்டுரைகளின் சிறப்பை எடுத்துரைத்த வகையானது மலரினைப் பெற்றுவரும் அடியார்களின் ஆவலைத் தூண்டும் வகையில் அமைந்திருந்தது. இறுதியில் சிறப்புப்பிரதி பெறுதல் நிகழ்வுடன் முற்றுப்பெற்றது.

# சுடர் தரும் தகவல்

# 16ஆவது வயதினில்

2013 - தைமாத "ஞானச்சுடர்", (புதிய முகப்பு அட்டையுடன்) சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினரின் 181ஆவது மாதாந்த வெளியீடாகும். 1998 தை மாதத்தில் வெளியான முதற்பிரதி பழைய அச்சுமுறையில் பதிப்பிக்கப்பட்டு வெளியாகி, சில வருடங்களில் - காலத்திற்கு ஏற்ற வகையில் - கணனி அச்சினில் பதிவாகிப் பதினைந்து வருடங்கள் கடந்த நிலையில் தொடர்ந்து வெளிவருவது சைவ உலகம் நன்கறிந்ததே.

விளம்பரம் எதுவுமின்றி, எந்த விற்பனை நிலையங்களிலும் பெற்றுக்கொள்ள முடியாத தனிச்சிறப்புடன், "ஆன்மீக சிந்தனை" ஒன்றையே நோக்கமாகக் கொண்டு வெளிவருவதுதான் "ஞானச்சுடர்".

இடைக்காலத்தில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையிலும்கூட சில மாதங்களில் பிரதிகள் வெளியிடுவதில் தாமதம் இருந்ததே தவிர, எக்காலமும் பிரதிகள் வெளிவராமற் தடைப்பட்டதில்லை. பல்வேறு இடர்பாடுகளுக்கு மத்தியிலும் "ஞானச்சுடர்" தொடர்ந்து வெளிவருவது செல்வச்சந்நிதி வேலவன் கொடுத்த வரம் - அநுக்கிரகம் - திருக்கருணையே ஆகும்.

அநுபவமுள்ள எழுத்தாளர்களுடன் ஆரம்ப எழுத்தாளர்களையும் ஊக்குவித்து- எழுதத் தூண்டி - உற்சாகப்படுத்துவது ஞானச்சுடரின் தனிப் பண்பு.

ஞானச்சுடருக்கு ஆக்கங்கள் வழங்கிவரும் அன்பர்கள், மாதாந்தம் வெளியீட்டுரை- மதிப்பீட்டுரை நிகழ்த்தவரும் பெரியவர்கள்- பிரமுகர்கள், சிறப்புப் பிரதி பெறுவதற்காகத் தொலைதூரத்திலிருந்தும் (வேலை நாளிலும்கூட) வருகைதரும் ஆர்வலர்கள், வருட சந்தா செலுத்தி மாதம் தவறாது பிரதியினைப் பெற்றுக்கொள்ளும் (வெளிநாடுகள் உட்பட) அன்பர்கள், வாராந்த வெள்ளி நிகழ்வினில் விடயதானம் அளிக்கும் பெரியோர்கள், அதனைச் செவிமடுக்க வருகை தரும் அடியார் கூட்டத்தினர் அனைவருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர் சிரம் தாழ்த்தி கரம் குவித்து நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

மேலும் இம்மலரான்து தொடர்ந்தும் வெளிவர எல்லாம்வல்ல வேற்பெருமானை வேண்டி நிற்கின்றோம்.

# அகில உலகமெல்லாம் அருள்மழை பொழியும் அன்னக் கந்தன் சந்நிதியான்



ஆற்றங்கரை யோரத்திலே அலைகடலின் தீரத்திலே
வீற்றிருக்குஞ் சந்நிதிக் கந்தன் - கிளியே
வெற்றிவேல் கையனெடி - அடியார்கள்
வேண்டும் வரம் கொடுப்பா னெடி

வார்த்தையினா லவன்புகழை வாரிக் கூற முடியாது
கீர்த்தியான அற்புதனெடி - கிளியே
கிடைத்தனவோ கோடியெடி - கச்சியப்பன்
கிடைத்தற் கரும் புராணம் பாரெடி

மூர்த்தி தலம் தீர்த்தம் மூன்றும் முறையா யமைந்திருக்கும்
பாக்கியமாஞ் செல்லச் சந்நிதியை - கிளியே
பத்தியோடு சென்று பணிந்திடெடி - அருள்மலர்ப்
பாதன் முத்துக் குமரனெடி

அகிலத்தில் கோயிலெல்லாம் அருள்முருகன் காட்சியோல
திருவானை சந்நிதியிலும் - கிளியே
தினந்தினம் காட்சி காட்டுவான்- அன்பரெல்லாம்
தேடிக் காண ஓடிவருவானெடி

அடியாராம் மோகனதாஸ் அவனருளே கண்ணாக
பணியாக ஆச்சிரமத்திலே - கிளியே
பத்தர்க்கெல்லாம் அன்னம் பாலிக்கிறார் - சந்நிதியான்
பாதமலர் பணியது வென்றே.

*முதுபெரும் புலவர், கலாபூஷணம் வை.க. சிற்றம்பலம் அவர்கள்*

# தைமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**திரு. அ. தவக்குமார்**
(லண்டன்)
**திரு. S. பத்மநாதன்**
(பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்)
**திருமதி யோ. சிவப்பிரகாசம்**
(இளை. முகாமையாளர், மக்கள் வங்கி)
**திரு. வ். சண்முகநாதமுதலி**
(இளை. முகாமையாளர், மக்கள் வங்கி)
**திருமதி S. விஜயகுமார்**
(மக்கள் வங்கி, மேற்குவலயம் I)
**திரு. T. சிவராஜ்**
(உதவி முகாமையாளர், தேசிய சேமிப்பு வங்கி, கிளிநொச்சி)
**திரு. N. சிவஞானசுந்தரம்பிள்ளை**
(இளை. முகாமையாளர், மக்கள் வங்கி)
**திரு. தி. சிவகுமாரன்**
(முகாமையாளர், மக்கள் வங்கி, சங்கானை)
**திரு. இ. யோகராசா**
(இளை. முகாமையாளர், மக்கள் வங்கி)
**திரு. நா. நாகேஸ்வரன்**
(உதவிப் பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்)
**திரு. கி. அமிர்தலிங்கம்**
(மக்கள் வங்கி, நெல்லியடி)
**திரு. க. ஸ்ரீதரன்**
(முகாமையாளர்,. மக்கள் வங்கி, கொடிகாமம்)
**செல்வி ச. சுகன்ஜா**
(மக்கள் வங்கி, சங்கானை)
**திரு. த. சிவகுமார்**
(உதவி முகாமையாளர், மக்கள் வங்கி பிரதான வீதி, யாழ்ப்பாணம்)
**திருமதி இ. கிருஷாந்தி**
(உதவி முகாமையாளர், மக்கள்வங்கி, காங்கேசன்துறை)
**திருமதி கா. பால்ராஜ்**
(பிரதி முகாமையாளர், மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்)

**திருமதி இ. பத்மகலா**
(மக்கள் வங்கி, பிரதேச அலுவலகம், யாழ்ப்பாணம்)
**திரு. பொ. பாலசிங்கம்**
(காசாளர், இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்)
**திருமதி கஸ்தூரி பீஸ்மன்**
(உதவி முகாமையாளர், மக்கள் வங்கி, பிரதேச காரியாலயம்)
**திருமதி நீரஜா சத்தியசீலன்**
(உதவி முகாமையாளர், மக்கள் வங்கி, கன்னாதிட்டி)
**திரு த. கணேசமூர்த்தி**
(இளநிலை அதிகாரி, இலங்கை வங்கி)
**செல்வி வ. கனகசபை**
(முகாமையாளர், மக்கள் வங்கி, பிரதேச அலுவலகம் மட்டக்களப்பு)
**திரு. கு. கோடீஸ்வரன்**
((முகாமையாளர், மக்கள் வங்கி, வவுனியா)
**திரு. ப. பார்த்தீபன்**
((முகாமையாளர், ம.வங்கி, சுன்னாகம்)
**திரு. K. ஐங்கரன்**
(உதவி முகாமையாளர், மக்கள் வங்கி நகரக்கிளை, திருகோணமலை)
**திரு. ஆ. சசிகரன்**
(உதவி முகாமையாளர், மக்கள் வங்கி நகரக்கிளை, திருகோணமலை)
**திருமதி வை. ஜெயந்தி குலேந்திரராஜா**
(உதவி முகாமையாளர், மக்கள் வங்கி நகரக்கிளை, திருகோணமலை)
**திரு. ம. பிறேம்குமார்**
(மக்கள் வங்கி, பிராந்தியக் காரியாலயம், திருகோணமலை)
**திரு. க. மதிவதனன்**
(மக்கள் வங்கி, சேனுவரா)
**திரு. வே. பார்த்தீபன்**
(மக்கள் வங்கி, பிராந்தியக் காரியாலயம், திருகோணமலை)
**திருமதி செ. உசாந்திகா**
(மக்கள் வங்கி, சுன்னாகம்)
**திருமதி வனஜா சுரேஸ்குமார்**
(பிரதி முகாமையாளர், மக்கள் வங்கி, ஸ்ரான்லிறோட்)
**திருமதி ரம்மியா பரந்தாமன்**
(உதவி முகாமையாளர் பிராந்திய அலுவலகம், யாழ்ப்பாணம்)
**செல்வி சிந்துலா கணேஸ்வரன்**
(உதவி முகாமையாளர், ம.வ. பல்கலைக்கழக கிளை)
**திரு. S. சிவஞானராஜா**
((முகாமையாளர் மக்கள் வங்கி, செங்கலடி)

**திரு. ஏகாம்பரம் செல்வேஸ்வரன்**
(திருகோணமலை)
**செல்வி தயானந்தன் சசிதேவி**
(மக்கள் வங்கி, மானிப்பாய்)
**திரு S. நித்தியானந்தன்**
(முகாமையாளர், மக்கள் வங்கி, ஸ்ரான்லி றோட்)
**செல்வி கைலாசனி கைலாயநாதன்**
(மக்கள் வங்கி, நகரக் கிளை, திருகோணமலை)
**செல்வி சுலக்சினி ஸ்ரீஸ்கந்தராஜா**
(மக்கள் வங்கி, நகரக் கிளை, திருகோணமலை)
**செல்வி சிந்துஜா விவேகானந்தன்**
(மக்கள் வங்கி, நகரக் கிளை, திருகோணமலை)
**திரு. சௌந்தரலிங்கம் துசாந்தன்**
(மக்கள் வங்கி, நகரக் கிளை, திருகோணமலை)
**திருமதி ஸ்ரீகாந்தநிர்மலா நிமலேந்திரன்**
(மக்கள் வங்கி, வல்வெட்டித்துறை)
**திரு கந்தப்பு கலையரசன்**
(மக்கள் வங்கி, வல்வெட்டித்துறை)
**செல்வி இராஜன் பிரசாந்தினி**
(மக்கள் வங்கி, வல்வெட்டித்துறை)
**திருமதி மீரா அஜந்தன்**
(மக்கள் வங்கி, வல்வெட்டித்துறை)
**திரு செல்லன் சற்சொருபன்**
(மக்கள் வங்கி, வல்வெட்டித்துறை)
**செல்வி பாலசுந்தரம் உதயசாந்தி**
(மக்கள் வங்கி, வல்வெட்டித்துறை)
**திருமதி ராதிகா ஸ்ரீபாஸ்கரன்**
(மக்கள் வங்கி, வல்வெட்டித்துறை)
**செல்வி ராதாகிருஷ்ணன் வாகினி**
(மக்கள் வங்கி, வல்வெட்டித்துறை)
**தில்லைநாதன் கார்த்திகா**
(மக்கள் வங்கி, வல்வெட்டித்துறை)
**வைத்திலிங்கம் வினோத்**
(மக்கள் வங்கி, நெல்லியடி)
**திரு விஜயராசா பிரகாஷ்**
(மக்கள் வங்கி, வல்வெட்டித்துறை)

**செல்வி கணேசமூர்த்தி கார்த்திகா**
(மக்கள் வங்கி, வல்வெட்டித்துறை)

**P. கிருஸ்ணானந்தன்**
(மக்கள் வங்கி, பருத்தித்துறை)

**திரு த. றஜிந்தன்**
(மக்கள் வங்கி, சாவகச்சேரி)

**திருமதி H. சிந்துஜா**
(மக்கள் வங்கி, உரும்பராய்)

**திரு சி. ராஜீவன்**
(மக்கள் வங்கி, பிரதான வீதி, யாழ்ப்பாணம்)

**திரு தம்பையா புவனேந்திரன்**
((முகாமையாளர், இலங்கை வங்கி, அச்சுவேலி)

**திரு கந்தசாமி சுசீந்திரன்**
(உதவி பிராந்திய முகாமையாளர், ம.வ., பிரதேச காரியாலயம், யாழ்ப்பாணம்)

**திரு மகேந்திரன் மாலவன்**
(உதவி முகாமையாளர், பிரதேச காரியாலயம், யாழ்ப்பாணம்)

**தெ. கர்சன்**
(பிராந்திய அலுவலகம், மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்)

**S. சர்வானந்தன்**
((முகாமையாளர், மக்கள் வங்கி, வல்வெட்டித்துறை)

**பு. சவுந்தரராசா**
(உதவி முகாமையாளர், மக்கள் வங்கி, பிரதான வீதி)

**மு. சிவசுப்பிரமணியம்**
(பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி, சாவகச்சேரி)

**திரு S. சண்முகலிங்கம்**
((முகாமையாளர், மக்கள்வங்கி, சாவகச்சேரி)

**ம. லம்போதரன்**
(மக்கள் வங்கி, சுன்னாகம்)

**திரு த. ரஜிந்தன்**
(மக்கள் வங்கி, சாவகச்சேரி)

**திரு க. ஞானச்சந்திரன்**
(மக்கள் வங்கி, சாவகச்சேரி)

**சு. சுமணா**
(மக்கள் வங்கி, சாவகச்சேரி)

**திரு க. ஸ்ரீதரன்**
(மக்கள் வங்கி, சாவகச்சேரி)

**நா. கிருஷிகா**
(மக்கள் வங்கி, சாவகச்சேரி)

**ஞா. அனோஜா**
(மக்கள் வங்கி, சாவகச்சேரி)
**க. ஜனனி**
(மக்கள் வங்கி, சாவகச்சேரி)
**சி. பானுஜா**
(மக்கள் வங்கி; சாவகச்சேரி)
**தி. வானதி**
(மக்கள் வங்கி, பிரதானவீதி, யாழ்ப்பாணம்)
**த. உஷா**
(மக்கள் வங்கி, சாவகச்சேரி)
**திரு மு. தெய்வேந்திரம்**
(மக்கள் வங்கி, சாவகச்சேரி)
**திரு கா. தவராஜா**
(மக்கள் வங்கி, கொடிகாமம்)
**திரு ந. தனேஷ்**
(பிரதேச காரியாலயம், மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்)
**ப. பிரதீபா**
(பிரதேச காரியாலயம், யாழ்ப்பாணம்)
**திரு K. ரமேஷ்நேசன்**
(முகாமையாளர், கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்)
**திருமதி கோ. ரஜீவி**
(பிரதி முகாமையாளர், மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்)
**திரு இ. ஜெயகாந்தன்**
(பிரதேச காரியாலயம் மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்)
**திருமதி அனுஜா**
(பிரதான வீதி, யாழ்ப்பாணம்)
**செல்வி வி. சிந்துஜா**
(மக்கள் வங்கி, பிரதான வீதி, யாழ்ப்பாணம்)
**திரும்தி க. மீரா**
(உதவி முகாமையாளர், மக்கள் வங்கி, சாவகச்சேரி)
**செல்வி ரம்யாழினி புஸ்பராஜா**
(பிராந்திய அலுவலகம்- மக்கள் வங்கி, திருகோணமலை)
**திருமதி விஜேந்திரன் நிதர்ஷினி**
(மக்கள் வங்கி, பிரதான வீதி, திருகோணமலை)
**திருமதி மணிவண்ணன் கிருஸ்ணானந்தி**
(மக்கள் வங்கி, பிராதன வீதிக் கிளை, திருகோணமலை)
**செல்வி தாரணி ஆனந்தராஜா**
(மக்கள் வங்கி பிரதான வீதிக்கிளை, திருகோணமலை)

**திரு ச.சு. ஜெஜன்**
(மக்கள் வங்கி, சுன்னாகம்)
**திரு சி. பகீரதன்**
(மக்கள் வங்கி, சுன்னாகம்)
**திரு R. சந்திரகோபன்**
(மக்கள் வங்கி, சுன்னாகம்)
**செல்வி த. தர்ஷிகா**
(மக்கள் வங்கி, சுன்னாகம்)
**ந. ஜிறானு**
(மக்கள் வங்கி, சுன்னாகம்)
**க. சரண்யா**
(மக்கள் வங்கி, சுன்னாகம்)
**திரு உ. டிலாகிதன்**
(மக்கள் வங்கி, சுன்னாகம்)
**திருமதி ஞா. சுரேஸ்குமார்**
((முகாமையாளர், மானிப்பாய்)
**செல்வி சி. உஷாநந்தினி**
(மக்கள் வங்கி, மானிப்பாய்)
**திரு. பா. இராசேந்திரம்**
(இளை. கி. சேவகர், உடுப்பிட்டி)
**திரு. செ. மதியாபரணம்**
(வளர்மதி புடவை அகம், கே.கே.எஸ். வீதி)
**திரு. நீ. சுப்பிரமணியன்**
(இளை. உத்தியோகத்தர், ப.நோ.கூ.ச, உடுப்பிட்டி)
**செல்வி தட்சாயிணி செல்வமாணிக்கம்**
(நாவலடி, உடுப்பிட்டி)
**திரு. வே. இரத்தினசிங்கம்**
(சிவசக்தி மோட்டோர்ஸ், பருத்தித்துறை)
**திரு. சி. கணேசலிங்கம்**
(தமிழ்ப்பூங்கா, நெல்லியடி)
**திரு E.A. ஏகநாதன்**
(இளைப்பாறிய நீதிபதி, யாழ்ப்பாணம்)
**உரிமையாளர்**
(பெசன் ஹவுஸ், யாழ்ப்பாணம்)
**உரிமையாளர்**
(பெற்றா ஏசென்ஸ் விநியோகத்தர், யாழ்ப்பாணம்)

**திரு. சிவஞானம் கிருபாகரன்**
(அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி)
**திரு. மு. சரவணபவான்**
(கலைமகள் விலாஸ், சங்கானை)
**செல்வி நா. ஜெயராணி**
(அதிபர், யா/ சித்தங்கேணி கணேச வித்தியாசாலை)
**திரு. இ. கோபாலசுந்தரம்**
(சதா வெதுப்பகம், உரும்பராய்)
**திரு. J. பிரபாகரன் மாஸ்ரர்**
(நெல்லியடி)
**திரு. செ. கமலநாதன் (கமல்)**
(கணபதி களஞ்சியம், கரவெட்டி)
**திரு. க. நாகராசா**
(பூம்பதிவீதி, வடலியடைப்பு)
**திரு. இ. சொக்கலிங்கம்**
(இளைப்பாறிய ஆசிரியர், நாவற்குழி, கைதடி)
**திரு. கு. கங்கைவேணியன்**
(உரிமையாளர், வேணி களஞ்சியம், யாழ்ப்பாணம்)
**திரு. ந. சத்தியரூபன்**
(சிறி நதியா நகைமாடம், யாழ்ப்பாணம்)
**திரு. க. சோமசேகரம்**
(மகாராணி புடவையகம், பெரியகடை, யாழ்ப்பாணம்)
**திரு ஐ. சிவகுமார்**
(சுதுமலை கிழக்கு, மானிப்பாய்)
**திரு செ. தபேந்திரன்**
(உப அஞ்சல் அதிபர், குப்பிளான்)
**திரு. க. இராசநாயகம்**
(பிள்ளையார் ஸ்ரோர்ஸ், தொட்டிலடி, சங்கானை)
**திரு. R.S. தனபாலன்**
(பாலன் மில், வட்டுக்கோட்டை)
**திரு. சி. சச்சிதானந்தம்**
(சச்சியா இரும்பகம், வட்டுக்கோட்டை)
**உரிமையாளர்**
(V.M.K. நகைமாளிகை, யாழ்ப்பாணம்)
**வே. பொன்னம்பலம்**
(பாக்கியரெத்தினம் இரும்பு விற்பனை நிலையம், சங்கானை)

**உரிமையாளர்**

(சாரங்கா நகைமாடம், யாழ்ப்பாணம்).

**திரு. இ. குமாரசாமி**

(சுவர்ணா வெதுப்பகம், K.K.S. றோட், சுன்னாகம்)

**உரிமையாளர்**

(வெங்கடேஸ்வரா, யாழ்ப்பாணம்)

**இ. இராசநாயகம்**

(துர்க்கா மரக்காலை, சண்டிலிப்பாய்)

**திரு ஆ. சுந்தரலிங்கம்**

(பிரதம அஞ்சல் அதிபர், அஞ்சல் திணைக்களம், மன்னார்)

**திரு. நா. கந்தப்பு**

(தோப்பு, அச்சுவேலி)

**திரு. க. தர்மலிங்கம் J.P.**

(நீர்வேலி)

**திரு. மு. தர்மலிங்கம்**

(சிங்காரராசா வாசா, உடுப்பிட்டி)

**உரிமையாளர்**

(வே. கந்தையாபிள்ளை அன்சன்ஸ், யாழ்ப்பாணம்)

**உரிமையாளர்**

(மலாயன் கபே, யாழ்ப்பாணம்)

**திரு. ஜெ. இராஜகோபால்**

(கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்)

**திரு சேனாதிராசா சற்குணராசா**

(பண்டத்தரிப்பு)

**செல்வி சசிதேவி தயானந்தன்**

(சுதுமலை வடக்கு, மானிப்பாய்)

**திருமதி பாலகிருஸ்ணன் சிவனேஸ்வரி**

(முருகமூர்த்தி வீதி, சங்கானை)

**செல்வி சுகன்யா சந்திரபாலன்**

(பொன்னாலை, சுழிபுரம்)

**திரு தெ. கோபாலசிங்கம்**

(சிவபூமி முதியோர் இல்லம், சுழிபுரம்)

**திரு து. மகேந்திரன்**

(கைதடி மேற்கு, கைதடி)

**த. சிவசுப்பிரமணியம்**

(லீலா வெதுப்பகம், சங்கானை)




**திரு க.ந. பாலசுப்பிரமணியம்** அவர்கள்



முருகன் என்றால் முத்தமிழின் காவலன் என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம். தமிழ் என்றால் தித்திக்கும் திருப்புகழ் மனதில் தோன்றும். அந்தத் தேன் தமிழால் முருகனைப் பாடிய அருணகிரிநாதர் தனியாக முருகப்பெருமானை மட்டும் வணங்கி நிற்காமல், வேலையும், மயிலையும், சேவலையும் கூடக் குறிப்பிட்டுப் பாடிய பாடல்கள் பல. அவற்றில் உள்ளடங்கிய தத்துவங்கள் பலப்பல.

ஞானப்பழமாகிய முருகனுடைய திருக்கரத்திலே படையாக (ஆயுதமாக) விளங்குகின்ற வேலையும், வாகனமாகத் திகழும் மயிலையும், வெற்றியைக் குறிக்கின்ற கொடியாக இருக்கின்ற சேவலையும் சேர்த்துத் துதிப்பது அருணகிரி நாதரின் நித்திய வழக்கமாக இருந்தது. இத்தகைய வழக்கப்படி, வேல் விருத்தம், மயில் விருத்தம், சேவல் விருத்தம் எனத் தனித் தனியாகப்பாடி இன்புற்றார். இவை மட்டுமல்லாது வேல் வகுப்பு, மயில் வகுப்பு என்னும் இரண்டு வகுப்புக்கள் தனித்தனியாகப் பாடியிருக்கின்றார்.

அருணகிரியார் பாடிய நூல்கள் பல. அவற்றுள் திருப்புகழ், திருவகுப்பு, கந்தர் அந்தாதி, கந்தர் அலங்காரம், கந்தர் கலிவெண்பா, வேல்- மயில்- சேவல் விருத்தங்கள், கந்தர் அநுபூதி என்கின்ற ஆறு நூல்களுக்குள்ளும், இறுதியாகப் பாடிய நூல் கந்தர் அநுபூதி. அதில் முதற் பாட்டில், ஆடுகின்ற பரியாகிய மயிலையும், படையாகிய ஞானவேலையும், வெற்றிக் கொடியாகிய சேவலையும், பாடுகின்ற பணியைத் தந்து அருள்புரிய வேண்டும் எனக் கந்தப்பெருமானை இரந்து வேண்டுகின்றார்.

"ஆடும் பரிவேல் அணிசேவல் எனப்
பாடும் பணியே பணியா அருள்வாய்"

என மனமுருகிப் பாடுகின்றார்.

**தன்னை இறைவனுக்குக் கொடுத்தவனே உயர்ந்தவன்.**

வேல் என்பது வெறும் வெள்ளி அல்லது உலோகத்தால் செய்யப்பட்ட ஆயுதமல்ல. மயிலும், சேவலும் வெறும் சாதாரண பறவைகளுமல்ல. அவை சில உண்மைத் தத்துவங்களைப் புலப்படுத்தும் தெய்வீகச் சின்னங்கள். "சிகராத்திரி கூறிட்டவேல்" என்கின்றார் அருணகிரியார். கொடுமுடிகளோடு கூடிய பெரிய மலையைக் கூறுபோட்டது என்று பொருள். பெரிய மலையாக நிற்பது எது? மனிதனுடைய அகங்காரம், மமகாரம்தான் மலைபோல் நிற்கிறது. ஆடாமல் அசையாமல் பின்னாலே இருக்கின்ற அத்தனை பொருள்களையும் மறைத்துக்கொண்டு நிற்கின்ற மலைபோல் "நான்", "நான்" என்கின்ற அகங்காரம், மற்றவர்களுடைய நலன்களையெல்லாம் மறைத்துக்கொண்டு நிற்கிறது.

மமகாரங்களாகிய கொடுமுடிகளோடு வளர்ந்து நிற்கும்- அகங்காரமாகிய மலையைக் கூறுபோட வேண்டுமானால் ஞானம் வரவேண்டும்.

"சிகராத்திரி கூறிட்ட வேலோடு செஞ்சேவலையும் பாடவேண்டும்" என்கிறார் அருணகிரிநாதர்.

சேவல் முருகக் கடவுளின் வெற்றிக் கொடியாக விளங்குகிறது. சேவல் என்று நினைத்த மாத்திரத்திலே, நல்லவர்களுக்குப் புற இருளைப் போக்கடிக்கின்ற சூரியனுடைய நினைவு வரும். முருகனிடத்திலே தம்மை முழுமையாக அர்ப்பணித்தவர்களுக்கு அஞ்ஞான இருளைப் போக்கடிக்கின்ற ஞானம் வந்து கைகூடும்.

உலகத்திலே சேவல் கூவும்போது, புறஇருள் விலகி, பொழுது புலர்கின்றது. இதுபோலவே அஞ்ஞான இருள் நீங்கி, ஞானதீபம் போன்ற ஒளி பிரகாசிப்பதற்கு அடையாளமாகவும் கூவும் சேவல் எம்பெருமான் திருக்கரத்தில் உள்ளது. இது செஞ்சேவலாக விளங்குகின்றது. வேல், சேவல் ஆகிய இரண்டினுடனும், மயிலையும் பாடுகின்ற பணி எப்போதும் இருக்கவேண்டும் என்பது அருணகிரிநாதரின் ஆர்வம். முதலில் வேலையும் சேவலையும் பாடியவர், மயிலை மறக்கவில்லை. அதனை அடுத்ததாகப் பாடுகின்றார்.

"பணிபாச சங்ராம பணாமகுட
நிகராட்சச பட்ச பட்சி"

பணி பாசம் என்றால் பாம்பாகிய கயிறு என்று பொருள். இங்கே நாகபாசம் எது? நம்மைச் சுற்றியுள்ள பாசபந்தங்கள்தான். பிறவிகளுக்கு காரணமான இந்தப் பாச பந்தங்களிற்குக் கட்டுப்படுவதினாலே மயக்கமடைந்து விடுகிறோம். இந்தக் கட்டை அறுத்துக்கொண்டால்த்தான் மயக்கம் தீரும்.

சுற்றிச் சுழன்று கொண்டிருக்கின்ற பாம்பைக் கொத்திக் கொத்திக் கொன்று விடும் மயில். அது ஓங்காரத்தின் வடிவம். பாம்பு பெரிய பாசமாக இருப்பதால், பாம்பை அடக்குகின்ற மயில் ஓங்கார மந்திரமாக இருக்கின்றது.

அந்தமயில் பிரணவத்திற்குப் பொருள் சொன்ன வாகனம் என்பது எத்தனை பொருத்தம். சேவல் எம்மை அறியாமை என்னும் உறக்கத்தின் நின்றும் எழுப்ப, மயில் நம்முடைய பாசங்களை அறுக்க, வேல் எமது அகங்காரத்தை கூறுபோட்டு மெஞ்ஞானத்தை உண்டாக்கி, எம்மை இறைவழிபாட்டில் ஈடுபடுத்துவதாகும்.

வேலும் மயிலும் சேவலும் துணை என்றும் நிற்கவேண்டும் என அழகன் முருகனைப் பிரார்த்தித்து, அவனது திருவடியினை அடைவோமாக. வேலும், மயிலும், சேவலும் துணை நிற்பதாக.

**இகழ்ச்சியிலும் பார்க்க புகழ்ச்சி கொடியதாகும்.**

# எவ்வினையும் வேரறுக்கும் விநாயகன்

திரு த. பால்ராஜ் அவர்கள்

அண்ட சராசரத்தின் ஒவ்வொரு அசைவுக்கும் காரணமானவன் இறைவன். இதனையே "அவன் இன்றி அணுவும் அசையாது" என்றனர் நாயன்மார். இறைவன் அன்பின் வடிவமானவன். எங்கும் நிறைந்தவன். பற்பல நாமங்கள் வேறுபட்ட வடிவங்கள் அனைத்தும் ஒருவனே.



இந்த வகையில் காணபத்தியம் எனும் சமயத்தின் தெய்வமாக விளங்குபவர் கணபதி. அவர் "ஓம்" எனும் பிரணவத்தின் ரூபமானவர். அவர் பல திருநாமங்கள் கொண்டு அழைக்கப் படுகிறார். விக்கினங்களை தீர்ப்பதால் விநாயகர், ஆனையின் வதனத்தைக் கொண்டிருப்பதால் ஆனைமுகன். ஐந்து கரங்களை உடையவன் என்பதால் ஐங்கரன். கணங்கள் எல்லாவற்றிற்கும் அதிபதி என்ப தால் கணபதி எனப் பல திருநாமங்கள். ஆனைமுகம், ஐந்துகரம், மூன்று கண்கள், பானை போன்ற பெரிய தொப்பை என உருவத்தைக் கொண்டவர். அத்துடன் ஐங்கரனின் ஐந்து கரங்களும் ஐந்தொழில் களையும் சுட்டுகின்றன. அங்குசம் ஏந்திய வலது மேல் கை காத்தல், ஒடித்த தந்தமுடைய இடது கீழ்க்கை மறைத்தல், அமிர்த கலசம் ஏந்திய தும்பிக்கை அருளல், மோதகம் ஏந்திய இடது கை படைத்தல், பாசக் கயிற்றை உடைய கை அழித்தற் தொழிலையும் செய்கின்றன. அவர் உருவத்தைப் போலவே அவரின் தோற்றத்திலும் விநோதத்தைக் கொண்டவர்.

மாகதர் என்ற முனிவரின் மகனாகப் பிறந்த கஜமுகாசுரன் சுக்கிராச்சாரியாரின் கட்டளைப்படி சிவனை நோக்கி பல்லாண்டுகள் கடுந் தவஞ்செய்து பல வரங்களைப் பெற்றிருந்தான். இறவாத வரத்தையும் பெற்றிருந்தான். பிரம்மா, விஷ்ணு, இந்திரன் முதலானவர்கள் கஜமுகாசுரனிடம் செல்லும்போது தம் தலையில் மூன்றுமுறை குட்டி தோப்புக்கரணம் போடவும் பணித்தான். தேவர்களுக்கு சொல்லொணாத் துயரங்களைச் செய்தான். இதனால் தேவர்கள் சிவபெருமானிடம் சென்று முறையிட்டனர். சிவபெருமான் தேவர்களைக் காக்கத் திருவுளங்கொண்டார். திருக்கயிலை மலையிலே மந்திரங்கள் எழுதியிருந்த சித்திர மண்டபத்திற்கு உமாதேவியாருடன் எழுந்தருளினார். அங்கு எழுதப்பட்டிருந்த பிரணவ மந்திரத்தை கண்ணுற்றார். சமஷ்டிப் பிரணவம் பிரிந்து ஆண்டவன்

தனது கோபம் என்றும் தன்னையே கெடுக்கிறது.

எழுத்தாகிய "அகரம்" ஆண் யானையாகவும், அம்மை எழுத்தாகிய "உகரம்" பெண் யானையாகவும் மாறின. பின் இரண்டும் சேர்வதுபோல் காட்சியளித்தன. அப்பொழுது யானை முகத்தோடு கூடிய விநாயகப் பெருமான் தோன்றினார். பின் கஜமுகா சூரனை வெற்றிகொண்டு தனது வாகனமாக்கி தேவர்களின் இன்னல்களையும் நீக்கியருளினார்.

"வேள முகத்து விநாயகனை தொழ வாழ்வு மிகுத்து வரும்" என ஔவையார் அழகாகப் பாடியுள்ளார். விநாயகப் பெருமான் அப்பம், முக்கனி, மோதகம் என்பவற்றை விரும்பி உண்பார். பூசணிப்பூ விநாயகப் பெருமானுக்கு மிக விருப்பமான பூ. விநாயகனை வணங்கியவர் எண்ணிய கருமம் யாவற்றையும் முடிப்பர். திண்ணிய செருவிற் செயம் மிகப் பெறுவர்.

ஆறுமுகனின் அண்ணனை தொழுது உருத்திரன் விருத்திரா சூரனை வென்று கொன்றான். அகலிகை எனும் பெண் விநாயகனை வழிபட்டு கணவனை அடைந்தாள். தசரதன் மகனாகிய ராமன் கணபதியை வணங்கி சீதையை அடைந்தான். தமயந்தி நளனை அடைந்தாள். பகீரதன் என்பவன் இவனைத் தொழுது வர நதியையே வையகத்திற்கு அழைத்தான். கணபதியின் பெருமை காதினாற் கேட்க இயலாதவை.

திருவாக்கும் செய்கருமங் கைகூடுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலாற் கூப்புவர் தம் கை

எவ்வினையும் வேரறுக்கும் எம்பெருமான் பிள்ளையாரை தலையில் மும்முறை குட்டித் தோப்புக்கரணம் போட்டு வணங்கி எண்ணிய கருமங்களையும், எல்லாச் செல்வங்களையும் அடைவோமாக.

## தை, மாசி, பங்குனிமாத குருபூஜை தினங்கள்

| | | |
|---|---|---|
| ஜன 31 | தை 18 வியாழன் | சண்டேஸ்வரர் குருபூஜை |
| பெப் 04 | தை 22 திங்கள் | திருநீலகண்டர் குருபூஜை |
| | | தாயுமானவ சுவாமிகள் குருபூஜை |
| பெப் 07 | தை 25 வியாழன் | நயினாதீவு முத்துக்குருசாமி குருபூஜை |
| பெப் 20 | மாசி 08 புதன் | கச்சியப்ப சிவாச்சாரியார் குருபூஜை |
| பெப் 27 | மாசி 15 புதன் | திருவள்ளுவர் குருபூஜை |
| மார்ச் 20 | பங் 07 புதன் | நல்லைக்குருமணி குருபூஜை |
| | | சுவாமிநாதத்தம்பிரான் குருபூஜை |
| | | தவத்திரு முருகேசு சுவாமிகள் குருபூஜை |
| மார்ச் 23 | பங் 10 சனி | யோகர் சுவாமிகள் குருபூஜை |
| மார்ச் 29 | பங் 16 வெள்ளி | காரைக்கால் அம்மையார் குருபூஜை |



(தொடர்ச்சி...

# திருவண்டப் பகுதி

## சிவனது தூலசூக்குமத்தை வியந்தது

(தில்லையிலருளிச் செய்யப்பட்டது)

## இணைக்குறளாசிரியப்பா

மறைந்த
சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள்
(யாழ்ப்பாணம் - காரைநகர்)

பத்தி வலையிற் படுவோன் காண்க
ஒருவ னென்னு மொருவன் காண்க
விரிபொழின் முழுதாய் விரிந்தோன் காண்க
அணுத்தருந் தன்மையில் ஐயோன் காண்க
இணைப்பரும் பெருமையி லீசன் காண்க
அரியதி லரிய வரியோன் காண்க
மருவியெப் பொருளும் வளர்ப்போன் காண்க

**பதவுரை:-**

பத்தி வலையில் படுவோன் காண்க- அன்பரது பத்தியாகிய வலையில் அகப்படுவோன் காண்க; ஒருவன் என்னும் ஒருவன் காண்க. உலகிற்கு ஒரு முழுமுதல் என்று சொல்லப்படும் ஒப்பற்றவன் காண்க; விரிபொழில் முழுதாய் விரிந்தோன் காண்க- விரிந்த உலகங்கள் எல்லாமாய் விரிந்து நின்றவன் காண்க; அணு தரும் தன்மையில் ஐயோன் காண்க- அணுவிற் காணப்படும் நுட்பத் தன்மையிலும் வியக்கத்தக்க நுண்மையுடையோன் காண்க; இணைப்பு அரு பெருமையில் ஈசன் காண்க- ஒப்புச் சொல்லுதற்கரிய பெருமையினையு முடைய தலைவன் காண்க; அரியதில் அரிய அரியோன் காண்க- அருமையையுடைய பொருள்களிலும் அருமையுடைய அரியோன் காண்க; எப்பொருளும் மருவி வளர்ப்போன் காண்க- அங்ஙனம் அருமையுடையனாயினும் எல்லாப் பொருள்களிலும் தான் கலந்து நின்று அவற்றை வளர்த்து வருவோன் காண்க.

"வாக்குக்கும் மனத்துக்கும் எட்டாதவனாயினும் இறைவன் அருமையில் எளியனாய் அன்பரது பேரன்பாகிய வலையில் அகப்படுதலின் பத்தி வலையிற் படுவோன்" என்றார். தப்பாது அகப்படுத்துதல் பற்றிப் பத்தியை "வலை" என்றார். இ∴து ஏகதேசவுருவகம். பத்தியை வலை என்றமையால் இறைவனை அதில் அகப்படும் பொருளாகக் கொள்க. இறைவன் அன்புடையார் சிந்தையில் உறைதல்.

"பத்தியால் ஏத்தி நின்று பணிபவர் நெஞ்சத் துள்ளார்"

(தே 25:5)

"பத்தராகிப் பாடியும் ஆடிநின்றும் உள்குவார் உள்ளத் துள்ளார்"

(தே 45:9)

**துக்கத்தை சகிப்பவன் அதனை வென்றவனாகின்றான்.**

"உள்ளூறும் அன்பர் மனத்தார் தாமே" (தே 250:8)

"சீலமுடை அடியார் சிந்தையான் காண்" (தே 226:2)

என அப்பரடிகள் அருளியமையானுமறிக.

உலகுக்கெல்லாம் முழுமுதல்வன் இறைவனாதலானும் அவனோடொப்பார் பிறர் எவருமின்மையானும் "ஒருவனென்னும் ஒருவன்" என்றார். "உலகுக்கொருவனாய் நின்றாய் நீயே" "ஒப்பொருவ ரில்லாதவொருவன்" (நாவு 252:1; 247:9) எனத் தேவாரத்து வருவனவுங் காண்க.

பொழில்- உலகம். "ஏழ்பொழிற்கு மேழ்நிலத் தலஞ்சமைத்ததென்ன" (கம்ப நகரப் 26) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. விரிபொழில் என்றது மண்முதல் விண்ஈறாகவுள்ள பகுதிகளாய் விரிந்த உலகங்களை. இறைவனது வியாபகத்துள் உலகங்களெல்லாம் அடங்குதல்பற்றி "விரிபொழில் முழுதாய் விரிந்தோன்" என்றார்.

அணுத்தரும் தன்மையில் ஐயோன்- பரமாணுவிற் காணப்படும் நுட்பத் தன்மையிலும் வியக்கத்தக்க நுண்மையுடையோன்: என்றது நுண்பொருள்கள் எல்லாவற்றினும் மிக்க நுண்பொருளாயுள்ளவன் என்றவாறு "நுண்ணியான்" (ஞான 61:6) எனவும் "பரியர் நுண்ணியர் பார்ப்பதற்கரியவர்" (நாவு 141:5) எனவும் தேவாரத்து வருவனவுங் காண்க. ஐ- வியப்பு இச்சொல் இப்பொருட்டாதல், ஐதேய்ந் தன்று பிறையுமன்று" (கலி 55:9) என்புழியுங் காண்க. "ஐவியப்பாகும்" (உரி 89) என்றார் ஆசிரியர் தொல்காப்பியனாரும்.

இறைவன் ஒப்புச் சொல்லுதற்கரிய பெருமையையுடைய தலைவனாதலின் "இணைப்பரும் பெருமையில் ஈசன்" என்றார். இணைப்பு- ஒப்பு, ஈசன்- தலைவன்.

(தொடரும்...



# எளிமையாகப் பிறந்து வாராய்

2013

எல்லாம் வல்ல இறைவன்கூட
எளிமையாக வாழ்கிறான்- அதை
எல்லா மனிதர் உணரும் வகையில்- நீ
எளிமையாகப் பிறந்து வாராய்!

என்னை விட்டவர் யாருமில்லையே
என்ற இறுமாப்புடன் வாழும் மனிதன்
எண்ணி இனித் திருந்த வேண்டுமே- நீ
எளிமையாகப் பிறந்து வாராய்!

அன்னை படும் கஷ்டங்கள் எல்லாம்
அடுப்படியோடு முடிந்து ஆயுளாகிறது- அட
என்னதான் இருந்தாலும் அன்னையும் அப்பாவும்
உன்னையெண்ணி மகிழவே பிறப்பாய் புத்தாண்டே!



தன்னை வருத்தி உழைத்து வாழ்வதில்
தாற்பரியமே உண்டென்று மறந்துவிட்டாரே
முன்னைய வாழ்வுபோல் இனிவரவேண்டுமே
மூப்போடு எளிமைதரப் பிறந்து வாராய்!

வீதியில் வாகனங்கள், வீட்டிலே நாகரீகம்
விடிந்தாலும் மின்சாரம், விண்ணளவு செலவீனங்கள்
காதினில் ஹலோ! ஆகக் கடமையுமே சிலோ! ஆகும்
கலியுகம் விழிப்படைய எளிதாகப் பிறப்பாய் புத்தாண்டே!

திரு கே.எஸ் சிவஞானராஜா அவர்கள்

பிரதிபலனை எதிர்பார்க்கும் செயல் துன்பத்தைத் தரும்.

# படையல்

திரு முருகவே பரமநாதன் அவர்கள்



படைப்புப் படைத்துப்
பலரோடு உண்ணும்
உடைப்பெருஞ்செல்வராயினும்
இடைப்பட
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டும் தொட்டும் கௌவியும்
துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்படவிதிர்த்தும்
மயக்குறுமக்களை இல்லோர்க்கும்
பயக்குறை இல்லை தாம் வாழும் நாளே

-புறம்-

மக்கட் செல்வம் இல்லோர் நிலைமை இப்பாடலில் பேசப்பட்டிருக்கிறது. இப்பாடலில் படைப்பு படையல் வருகின்றது. அண்மைக்காலங்களில் புதுவதுபுனையும் ஆக்க இலக்கியப் பட்டறையிற் படையல் முத்திறமாய்ப் பேசப்படும். படைப்போன் - ஆக்கம் செய்வோன் - படைப்பாளி. அவன் பேனாவின் சிருஷ்டி - கதை படையல் அதன் செயற்பாடு படைப்பு சைவசமயிகள் பிரம்மாவை படைப்புத் தெய்வம் என்பர். தீர்ந்தமுது எழுத்தாளரைப் பிதாமகர் என்பர். படையுல் ஒரு தொழிற் பெயர். ஆலயங்களிற் பிரசாதம் நிவேதனம் செய்வர். இது தான் படையல். சில ஆலயங்களில் பக்தர்கள் பொங்கிப் படைப்பர். இறந்து போன ஆத்மாவின் நினைவாக திவசம் கொடுப்போம்.அங்கேயும் எல்லா உணவுகளும் படைக்கப்படும். பிதிர்க்கடன் பற்றிப் பல ஏடுகள் எழுதியுள்ளன. பெற்றோரைப் போற்றிப் போஷிக்கத்தெரியாதோர். பெரிய நோட்டுக் கொடுத்து மோட்சார்ச்சனை செய்வர். செய்விப்பர். அவரை மோட்ச சாம்ராச்சியத்தில் சேர்ப்பர். இன்றைய விஞ்ஞான உலகில் மேட்டிமையின் மத்தியில் மடைமைத்தனங்களும் இல்லாமல் இல்லை. இன்னொரு வகையான படையல் கிராம மட்டத்திலே செய்வர். அஃது மார்கழித்திங்களுடன் தொடர்புடையது. மார்கழி வானவரின் வைகறை வேளை, பிராதக் காலம். மாதங்களில் நான் மார்கழியெனக் கண்ணன் சொன்னதாகக் கண்ணதாசன் பாட்டியற்றினார். வேதக்காரருக்கும் மார்கழி தவக்காலம். சைவவைணவர்களும் மார்கழி நோன்பு மேற்கொள்வர். மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளால் என ஆண்டாள் பாடினாள். மணிமொழியாரும் மார்கழி நீராடேலோரெம்பாவாய் எனப் பாடினார். சைவசமயிகள் மார்கழிப் பிள்ளையார் வைத்து தைப்பொங்கல் செய்து சூரியனுக்குப் படையல் செய்வர்.

இஃதே போல மார்கழியிற் பிதிர்களுடைய படையல் நிகழும். இறந்த ஆத்மாக்கள் மார்கழித் திங்கள் தவத்திற்குப் போவர். அவர்களை அனுப்பி வைக்கும் பாணியில் கார்த்திகை மாத இறுதியில் ஓர் படையல் செய்வர், இது தவத்துக்குப் போகும் படையல். மார்கழி முடிய அவர்கள் தவத்தாலே திரும்பி வருவர். இது தவத்தால் வாற படையல் எனப்படும்.

**ஆசை ஒழிந்த இடத்தில் நரகவேதனை இல்லை.**

முதற்தினமே சந்தைக்குப் போய்ப் பொருட்கள் கொண்டு வருவர். அன்று மச்சம் (மீன்) ஆரதம் இரண்டும் படைப்பர்.

இந்த உணவு வகையிலே அரிசிப் பிட்டு, ஒடியற்பிட்டு, குரக்கன் பிட்டு, தினைப்பிட்டு, சாமிப்பிட்டு வகைவகையாய் இடம்பெறும். உண்கலமாகக் கல்லை பயன்படும். கல்லை என்ற வழக்காறு கண்ணப்ப நாயனார் காதையில் எடுத்தாளப்படுகின்றது. தென்னோலையைச் சிராய்த்து வெயிலிலே சிறிது வாட விடுவர். பின் அதன் ஈர்க்கை மெல்லியதாய் வார்ந்து நறுக்கி ஓரளவாக ஓலையை நறுக்கி எடுத்து வார்ந்த ஈர்க்கினாலேயே சேர்த்துத் தைப்பது கல்லை எனப்படும். வாழையிலையில் மச்சக்கறி உணவு படைக்க மாட்டார்கள். சைவபோசனம் செய்வோர் உணவு பரிமாறுவர். பொழுதுபட்டபின் இருள்கப்பியதும். முற்றத்தில் இப்படையல் நடைபெறும். கைவிளக்குத்தான் வெளிச்சம். பெட்டியை (கடகம்) கவிழ்த்து வைத்துப் படையலுக்கான கல்லையைக் கழுவி வைத்து உணவு படைக்கப்படும். ஆரதம் (சைவம்) வேறுபடையல். பலவிதப் பொரியல். மீன் பொரியல், கத்தரிக்காய்ப் பொரியல், வாழைக் காய்ப்பொரியல், அப்பளம் மிளகாய்ப் பொரியல் எனப் பலவகை உணவு வகையறாக்கள் படைத்த பின் சுமார் ஒரு மணித்தியாலம் போனபின் எல்லா வகை உணவிலும் கொஞ்சம் கொஞ்சம் (தீயது -மற்சம்) இரு பாத்திரத்தில் எடுத்து கூரையில் வீசி, தண்ணீரும் வீசுவர். இதை மாறுதல் என்றழைப்பர். மாறிமுடிந்ததும் வீட்டில் உள்ளவர்கள் தம் (முன்னோர்) பிதிரை நினைத்து உணவு அருந்துவர். முக்கியமான இனத்தவர்களுக்கு கொடுப்பர். அவர்களும் தருவர். இந்த மரபு நம் முன்னோர்களுக்கு நாம் செய்யும் நன்றிக் கடனாகவே கருதப்படும். இந்தப் படையல் மார்கழி முப்பத்தோராந்தேதியும் நடைபெறும். அதற்குத் தவத்தால் வாற (வருகிற) படையலென்று பெயர். தவத்தால் வருகிற ஆத்மாக்களுக்கு மச்சம் படைப்பதில்லை. தூய சுத்தபோசனமான சைவ உணவே படைக்கப்படும். என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

பனங்கிழங்கு நம்மவர்க்கு முக்கியமானது. எனவே பனங்கிழங்கு பாத்தி கிண்டுகின்ற அன்று பொழுதுபட பனங்கிழங்குப் பாத்தி கிண்டுவதற்குப் பிதிர்ப் படையல் செய்வர். இஃதே போன்று வயலில் விளையும் நெற்கதிர். வைக்கோலை வேறாக்க மாடுகட்டி சூட்டு மிரியல் நடைபெறும். இது நிறைவானதும் - களக்கட்டை பிடுங்கும் சுபநாளிற் பொங்கிப் படைத்து தொழிலாளர்களுக்கும் பொங்கல் கொடுப்பர். பனையோலையிற் கோலிய தட்டுவம் உண்கலமாகும். இன்னொன்று தென்னம்பிள்ளை நட்டு நாலைந்து வருடங்களால் பாளை வரும். அந்தப் பாளை வந்ததும் பாளைக்கு பொன்நகை அணிந்து பால் பொங்கல் செய்து படைத்து மகிழ்வர். பாளையில் காய்க்கும் முதல் இளநீரை தம் குல தெய்வக் கோயிலுக்குக் கொடுத்து அபிடேகம் செய்விப்பர். நான் ஒரு தரம் மண்டூர்முருகன் ஆலயத்திற்கு சென்றிருந்தேன். அங்கே இரு அன்னையர் இறந்த ஆத்மாக்களை நினைத்து அர்ச்சனை செய்வித்தனர். வாழையடிவாழையாக இந்த மரபு ஈழத்தமிழரின் இரத்தத்துடன் கலந்ததாகும். இதை வள்ளுவப் பெருந்தகையும் பாடி வைத்துள்ளார்.

துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை - குறள் 42

தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தானென்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல்" தலை -குறள் 43

தொன்மை மறவேல் - ஒளவை

# அருணகிரிநாதர் அருளிய கந்தரநுபூதி

(தொடர்ச்சி...

-வாரியார் சுவாமிகள் உரையுடன்-



23. அடியைக் குறியா தறியா மையினால்
முடியக் கெடவோ முறையோ முறையோ
வடிவிக் ரமவேல் மகிபா குறமின்
கொடியைப் புணருங் குணபூ தரனே.

## பதவுரை

வடி விக்ரம வேல் மகிபா- கூர்மையும் வலிமையும் உடைய வேலாயுதத்தை ஏந்திய தலைவரே, குறமின் கொடியை புணரும்- குறவர் குலத்தில் வளர்ந்த மின்னல் கொடிபோன்ற வள்ளிநாயகியைத் தழுவுகின்ற, குணபூதரனே- குணக் குன்றமே! அடியை குறியாது- உமது திருவடியைத் தியானிக்காமல், அறியாமை யினால்- அறிவின்மையினால், முடிய கெடவோ- அடியோடு அடியேன் அழிந்து படலாமோ? முறையோ முறையோ- இது நீதியோ? நீதியோ?

## பொழிப்புரை

கூர்மையும் வலிமையும் கொண்ட வேலையேந்திய தலைவரே! குறமகளாம் மின்னல் கொடி போன்ற வள்ளியைத் தழுவும் குணக்குன்றமே! உமது திருவடியைத் தியானிக்காமல், அறிவின்மையால் அடியேன் அடியுடன் அழிந்து போகலாமா? இது நீதியோ? நீதியோ? நீதியாகாது.

## விரிவுரை

**அடியைக் குறியாது:-**

இறைவனுடைய வலத் திருவடி- ஞானசக்தி; இடத் திருவடி- கிரியாசக்தி.

பிற ஒன்றையுங் குறியாது. இறைவனுடைய திருவடி ஒன்றை மட்டும் குறித்து நிஷ்டை கூடுதல் வேண்டும்.

**அறியாமையினால் முடியக் கெடவோ:-**

அறிவின்மையினால் ஆன்மாக்கள் முருகனடியைத் தியானிக்காது அவலமுறுவதை நோக்கி, அவர்களின் குறையைத் தன்மீது ஏற்றிக்கொண்டு அடிகளார் இவ்வாறு கூறுகின்றார்.

**சேவை செய்பவனிடம் வேற்றுமை கிடையாது.**

அறியாமை என்பது, இங்கே முருகனது திருவடிகளை நினைந்து தியானிக்கும் அறிவாற்றல் இல்லாமையாகும்.

**முறையோ முறையோ:~**

இந்த் அடுக்குத்தொடர் இரக்கத்தை உணர்த்தி நின்றது.

**வடிவிக்ரம வேல் மகிபா:~**

வேல்- ஞானம். விக்ரமம்- வலிமை. வி- சிறந்த. க்ரமம்- நீதி. அறிவு கூர்மையும் நீதியும் பொருந்தியது.

மகி- பூமி. மகிபன்- பூமிக்குத் தலைவன்.

**குறமின் கொடி:~**

திருமாலின் கண்ணில் தோன்றிய சுந்தரவல்லி, முருகவேளை நோக்கித் தவஞ்செய்து, அவருடைய ஆணையின்படி மான் வயிற்றில் தோன்றி, குறவர் குலத்தில் வளர்ந்தார்.

கொடிபோன்ற மெல்லிய திருமேனியுடையவர். இச்சா சக்தியாதலின் ஒளியுடையவர், மின் கொடி.

**குணபூதரனே:~**

கந்தரநுபூதி 15ஆவது பாடலில் கூறிய எட்டு அருட்குணங்களையுடைய மலை போன்றவன், குறக்கொடி படரும் மலையாகக் காட்சி தருகின்றார்.

பூ- பூமி. தரம்- தாங்குவது. பூமியைத் தாங்குவதனால் பூதரம் எனப்பட்டது.

புயலால் மரங்கள் அசையும். மலையசையாது. அதுபோல் முருகன் உலகெலாம் ஒன்றி நிற்பினும் உலக அவலம் அவனைப் பற்றாது எனவுணர்க.

இந்தப் பாடலில் இறைவனுடைய இச்சாசக்தி, கிரியா சக்தி, ஞான சக்தியென்ற முச்சக்திகளையும் கூறினார். இவை தமிழில் வேட்கையாற்றல், செயலாற்றல், அறிவாற்றல் என வரும்.

அநுபூதியடைய விரும்புகின்ற அடியார்கள் முருகனுடைய திருவடியை எப்போதும் மனதில் தியானித்துக்கொண்டு உலக நிலையில் கலக்குண்ணாது மலைபோல் நிற்கவேண்டும் என்பது கருத்து.

**கருத்துரை**

வேலரசே! உனது திருவடியைத் தியானிக்காமல் அழிவது நீதியோ? அடியேன் இடையறாது தியானிக்கும் அருளைத் தந்தருள்.

(தொடரும்...

## ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய விசேட தினங்கள்

| | | | |
|---|---|---|---|
| **தை** | | | |
| **01.01.2013** | **மார் 07** | **செவ்வாய்** | **மங்கள புத்தாண்டு ஆரம்பம்** |
| **14.01.2013** | **தை 01** | **திங்கள்** | **தைப்பொங்கல் தினம்** |
| **21.01.2013** | **தை 08** | **திங்கள்** | **கார்த்திகை விரத தினம்**<br>**பகல் விஷேட உற்சவம்** |
| **27.01.2013** | **தை 14** | **ஞாயிறு** | **தைப்பூச தினம்**<br>**பகல் விசேட உற்சவம்** |
| **மாசி** | | | |
| **17.02.2013** | **மாசி 05** | **ஞாயிறு** | **கார்த்திகை விரத தினம்**<br>**பகல் விசேட உற்சவம்** |
| **25.02.2013** | **மாசி 13** | **திங்கள்** | **மாசி மகம்** |

**கவலையை ஒழித்தால் ஆயுட்காலம் அதிகரிக்கும்.**

# ஞானத் தாயாகிய தமிழ்க் கிழவியும் ஞானபண்டிதனாகிய தமிழ்க் குழவியும்

**திருமதி சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன் அவர்கள்**

ஔவையார் சிறந்த தமிழ்ப்புலவர். விநாயகப் பெருமானின் பரிபூரண அருளைப் பெற்றவர். இவர் தமிழ்த் தாயாகத் திகழ்ந்தவர். அதியமான் எனும் வள்ளலிடம் நெல்லிக்கனி பெற்று அதன் சிறப்பால் பல்லாண்டு, பல்லாண்டு சிரஞ்சீவியாய் வாழ்ந்திருந்தார்.

இவருடைய அருள், மனோதைரியம், சமுதாயச் சிந்தனை சமநோக்கு, எளிமை முதலிய நற்பண்புகள் இவரை வணங்கச் செய்யும். கலைமகளாகப் போற்றத் தகுந்தவர். மக்களுக்காகப் பாடி மக்களுக்காக வாழும் மக்கள் கவி. இவரைப் போன்ற அறிவும், ஆற்றலுமிக்க வேறொரு மக்கள்கவி உலகில் பிறந்ததில்லை. சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் இவரின் ஆற்றலுக்கு ஓர் உதாரணமாக; அறம், பொருள், இன்பம், வீடு என்பவற்றை விளக்கும் வகையில் கீழேயுள்ள வெண்பா ஒன்றே போதும்.

ஈதல் அறம், தீவினை விட்டு ஈட்டல் பொருள்
எஞ்ஞான்றும் காதல் இருவர் கருத்து ஒருமித்து
ஆதரவு பட்டதே இன்பம்;
பரனை நினைந்து இம்மூன்றும் விட்டதே பேரின்பவீடு



மனிதகுலம் பெற வேண்டிய நான்கு பொருள்களையும் எளிமையாகவும், இனிமையாயும் கலந்து பாடிய தமிழ் மூதாட்டி. இவர் சிறந்த திருவருட் செல்வர் ஆவர்.

முழுமுதற் பொருளாகிய விநாயகப் பெருமானைப் போற்றி இவர் பாடியருளியுள்ள விநாயகர் அகவல், அடியார்களுக்குக் கிடைக்கப் பெற்றுள்ள அரியதொரு அணையாத கைவிளக்காகும். சிறந்த உயர்ந்த தத்துவங்களை உள்ளடக்கியுள்ள இந்நூல் தினமும் அனைவராலும் பாராயணம் செய்ய வேண்டிய ஒன்று. விநாயகரிடம் பக்தி மேலிட்டு "அகவல்" பாடி அதன் பலனாகக் கைலாய மலையையடைந்து, எல்லாம்வல்ல பரம்பொருளாகிய பரமேஸ்வரனையும், பரமேஸ்வரியையும் கண்குளிரத் தரிசித்தார்.

கணபதியிடம் அளவற்ற பக்திகொண்ட ஔவையார் அவரின் இணையிலாத தம்பியாகிய கந்தப்பெருமானிடமும் எல்லையில்லா அன்பு பூண்டு, அதன் பலனால்

**வாழ்க்கை என்னும் நாடகத்தில் நாம் ஒரு கதாபாத்திரம்.**

உலக மக்களுக்கு பல நல்ல அரிய கருத்துக்களைக் கூறி வையத்துள் வாழ்வாங்கு வாழ வழியும் காட்டியுள்ளார்.

ஞானத் தமிழ்க் கிழவியோடு, ஞானபண்டிதனான தமிழ்க் குழவி திருவிளையாடல் புரிய எண்ணினான். நானிலம் முழுவதும் நடந்து சுற்றித் தமிழ்ப் பயிர் செய்து வரும் ஔவையார் ஒருநாள் கடும் வெயிலில் பசி தாகம் மேலிட நடந்து, நடந்து அயர்ந்து விட்டார். பாதையிலே உள்ள நாவல் மரக்கூட்டத்தின் நிழலிலே, நடந்த களைப்பு நீங்க "முருகா" என்று கூறிக்கொண்டே அமர்ந்தார். சற்றுநேரத்தில் நற்றமிழ்ப்புலவர் சிறிது களைப்பு நீங்கப் பெற்றார். மேலே அண்ணாந்து பார்த்தார். மரத்தின் மீது அழகான இளம்பிள்ளை ஒருவன் அமர்ந்திருந்தான். மரத்தின் அருகே ஒரு எருமையும் நின்றது. பையன் கையில் மாடு மேய்க்கும் கோல் ஒன்றிருந்தது. அச்சிறுவன் அழகு ஒழுகும் ஓவியமாக இருந்தான். சுருண்ட இருண்ட அடர்த்தியான தலைமுடி அழகுக்கு அழகு செய்தது. குறு குறு என்று நோக்கும் விழிகள் பார்ப்போரைக் கவர்ந்து இழுக்கின்றன. ஔவைப்பாட்டி அச்சிறுவனைப் பார்த்து "அப்பா! நீ யார்?" என்று வினாவினார்.

"பாட்டி! நான் யாரென்பதைப் பிறகு கூறுகிறேன். உமக்கு இப்போது என்ன வேண்டும். அதை முதலில் கூறும்" என்றான். "குழந்தாய்! பசி காதை அடைக்கிறது. கொஞ்சம் நாவல் பழத்தைப் பறித்துப்போடுவாயா?" என்றார். சிறுவன், "பாட்டி! நீர் கேட்டபடியே நாவல் பழத்தைப் பறித்துப் போடுகிறேன். உமக்குச் சுட்டபழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா?" என்று கேட்டான்.

பல நூல்கள் கற்ற அறிவும், உலகெலாம் சுற்றிப் பெற்ற அறிவும் கொண்ட பெரும்புலவர் ஒருகணம் திகைத்து விட்டார். நாவல் பழத்தில் சுட்டதும், சுடாததும் என்ற பாகுபாடு ஏது? பனம்பழம் சுட்டுத் தின்பார்கள். நாவல் பழத்தைச் சுடுவது என்பது இதுவரை நான் கேள்விப்பட்டதில்லையே. இந்த மாடு மேய்க்கும் சிறுவனிடம் அது என்ன என்று கேட்பது கூடாது என்று சிந்தித்து, "அப்பா! சுட்டபழம் போடு" என்றார்.

சிறுவனும் நல்லது என்று புன்னகை பூத்த வண்ணம் நன்றாகக் கனிந்திருந்த பழங்களைப் பறித்து மணலில் எறிந்தான். "பாட்டி! சுட்டபழம் எறிந்துள்ளேன். எடுத்துக்கொள்" என்றான். மிகவும் கனிந்த பழங்களில் மணல் துகள் பதிந்துகொண்டமையினால், ஔவையார் ஒவ்வொன்றாக எடுத்து மணல்துகளை வேகமாக ஊதி ஊதி உண்பாராயினார். மரத்தின் மேலேயிருந்த பையன், "பாட்டி பழங்கள் ரொம்பவும் சுடுகின்றதா? பாவம்! பார்த்து நன்றாக ஊதி, ஊதி உண்ணுக!" என்றான். சட்டென்று மேலே நிமிர்ந்து பார்த்த ஔவையாருக்கு உலகமே சுற்றுவது போலிருந்தது. "சுட்டபழம்" என்ற சொல்லில் இருந்த மர்மம் புலனாயிற்று.

கையில் எடுத்த பழம் கையிலேயே நின்றுவிட்டது. பசி, தாகம் பறந்துவிட்டது. நாணமும், மானமும் வந்து உள்ளத்தை வருத்தின. "புலவர்கள் எல்லாரையும் ஒரு கணத்தில் வென்று, வெற்றிமாலை சூடி, வீறு கொண்ட நான், காட்டில் மாடு மேய்க்கும் இப் பாலகனிடம் தோற்றேனே! அறிவு எங்குபோய் ஒளிந்திருக்கின்றது.

கருங்காலிக் கட்டைக்கு நாணாத கோடாலி
இருங் கதலித் தண்டுக்கு நாணும் - அருங்கானில்
கார் எருமை மேய்க்கின்ற காளைக்குத் தோற்றனனே
ஈரிரவு துஞ்சாது என்கண்

என்று பாடிக் கலங்கி நின்றார்.

விடாமுயற்சியே வெற்றி தரும்.

உடனே. அருகிலிருந்த எருமை மயிலாக மாறியது. கையில் இருந்த கோல், வேலாயிற்று. மாறுமுகம் ஆறுமுகமாயிற்று. பலகோடி தண்ணிலவுபோல் பன்னிருகைப் பரமன் மாட்சியுடைய கிழவிக்குக் காட்சி அளித்தான். தேவரும், மூவரும் தேடியுங் காணாத தேவதேவனைத் தெய்வப் புலவர் கண்குளிரக் கண்டார்.

முருகா! குமரா! மூவர் முதல்வா! செந்தமிழ்க் கடவுளே! தேவர் சிறை தீர்த்த தேவாதிதேவா! கருணைக் கடலே! என்னையும் ஒரு பொருளாகக் கருதி எழில் காட்சி தந்த எந்தையே! உன்னிடம் நான் தோற்றது எனக்குப் பெருமையே! இத் தோல்வியால் நான் மட்டுமன்று; இந்தப் பூமண்டலமே நல்லதோர் பாடம் பெற்றுள்ளது.

"கற்றது கை மண்ணளவு கல்லாதது உலகளவு" என்ற உண்மையை உணர்த்திய உமை பாலனே! "உன்னை மனம், மொழி மெய்யால் வணங்குகின்றேன். ஏற்றருள வேண்டும்" என்று கண்ணீர்மல்கி, உள்ளங் கசிந்து கைகூப்பி வணங்கினார்.

ஞானக் களஞ்சியமான முருகனுக்கும், அறிவுக்கும், அடக்கத்திற்கும் எடுத்துக் காட்டாக விளங்குகின்ற ஔவையாருக்கும் உரையாடல் நடக்கின்றது. முருகன், ஔவையாரிடம் இனியது எது? கொடியது எது? அரியது எது? பெரியது எதுவென வினவ, ஔவையாரும் தமக்கேயுரிய இனிய தமிழில் அறிவுநிறைந்த ஆன்றோரைக் கனவிலும், நனவிலும் கண்டு பழகுவதுதானே எல்லாவற்றிலும் இனியது என்றும், அன்பில்லா மனைவியின் கையால் உண்பது எல்லாவற்றிலும் கொடியது என்றும், எல்லா உயிர்களையும் தன்னுயிர்போல் பார்த்து இரக்கம் கொண்டு, அவைகளுக்கு வரும் துன்பத்தைப் போக்கி, கல்வி ஞானத்தின் பயனாகிய தானதருமம் புரிந்து, தனக்கு வரும் துன்பத்தைத் தாங்கித் தவம் புரிவது அரிது, "ஞானமுங் கல்வியும் நயந்தகாலையும், தானமும் தவமும் தான் செய்வாராயின் வானவர் நாடு வழி திறந்திடுமே" என்றும், "தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே". இறைவன் அடியார்களின் பெருமையே மிகப்பெரியது என்றும் கூறினார்.

புலவர்களெல்லாம் வெல்ல முடியாது வியந்துபோற்றிய அமிழ்தின் இனிய தமிழ்க் கிழவியிடம், நெல்லிக்கனியைத் தின்று உலகில் நீடு வாழும் ஞானத் தாயாகிய தெய்வப் புலவர் ஔவையாரிடம், லீலாவிநோதனாகிய ஞானத் தமிழ்க் குழவி ஓர் நாடகம் நடாத்தி, மாய இருளில் மதிமயங்கி அஞ்ஞான உறக்கத்தில் உழன்று கொண்டிருக்கும் நமக்கெல்லாம் நல்லதோர் உண்மையை உணர்த்தியுள்ளான். நாம் வாழும் நாளில் தமிழ் மூதாட்டியின் உரையை மறவோமே.

எந்தைவள்ளல் இளங்கோ முருகன், வணங்கித் துதிக்க எல்லா வரங்களும் இணங்கியே அருளும் வள்ளிமணாளன், குற்றமற்றவர் மனதில் உறையும் குக்குடக் கொடி தரித்த பெருமான், நம்பிக் கைதொழுவோர்க்கு மனக்கவலை தீர்க்கும் மாமருந்து, வள்ளி தெய்வானையுடன் சேவற்கொடியும், செவ்வேல் மயிலும் பாங்குடன் மிளிர பக்தர்க்கருள் புரியும் பாலமுருகன், செல்வச்சந்நிதியில் நின்றாடும் ஞான சக்திதரனாகிய வேற்பெருமான் புரிகின்ற திருவிளையாடல்கள்தான் எத்தனை? எத்தனை?

விழிக்குத் துணையாகவும், பயந்த தனிவழிக்குத் துணையாகவும் முன்பு செய்த பழிக்குத் துணையாகவும், பேரருள் சுரக்கும் பிள்ளைப் பெருமான் எனும் பேராளனின் மயிலையும், திருக்கை வேலையும் போற்றி, ஆசையகற்றி, தூயமனதோடு, வாசனைமிகு மலர்களால் அவன் மலரடி தினம் போற்றி, வணங்கி முத்திப்பேற்றினைப் பெறுவோமாக.

**சுறுசுறுப்பு எல்லாவற்றையும் எளிமையாக்கும்.**

# ஸ்ரீ ரமண நினைவலைகள் (தொடர்ச்சி...

## 7. அருளாழி ரமணன் (தொடர்ச்சி...

பகவானிடம் ஆழ்ந்த பக்தி கொண்டிருந்த மிஸஸ் ரோடா மெக், தான் பகவானை முதன்முதலில் சந்தித்த அனுபவத்தைச் சொல்கிறார்.



"1940இல் நான் பம்பாயில் இருந்தபோது, மிஸஸ் தலையார்கான் பகவானுடைய சில புத்தகங்களையும், போட்டோக்களையும் என்னிடம் கொடுத்து, அவர் மிக உயர்ந்த ஞானி என்றார். புத்தகங்களைப் படித்ததில் எனக்கு ஒன்றும் புரியவில்லை. ஆனால் அந்தப் புகைப்படங்கள்! அவை காந்தம் போல் என்னைக் கவர்ந்தன. அவரைப் போய்த் தரிசிக்க வேண்டும் என்ற ஆர்வம் தோன்றியது. நாளுக்கு நாள் இந்த ஆசை வலுப்பெற்று வந்தது. பம்பாயில் என்னுடைய செல்வச் செழிப்பும், சமூக அந்தஸ்தும் திருப்திகரமாக இருந்தும், அமைதியின்மையும், திருப்தியின்மையும் சேர்ந்து என்னை உலகக் கட்டுகளிலிருந்து விடுபட்டு மேலேற வேண்டுமென்ற ஆவலைத் தூண்டியது.

இறுதியாக, 1942இல் நான் ஆச்ரமம் வந்தடைந்தேன். நான் வந்த சமயம், பகவான் மலைமேல் போயிருந்தார். பகவானைத் தரிசிப்பதற்காக, அவர் திரும்பிவரும் வழியில், காத்திருந்தேன். பகவான் வருவதை நான் கவனிக்கவில்லை. ஆனால் திடீரென்று என் எதிரில் சூரியன்போல் ஒரு பிரகாசம் ஒளிரக்கண்டேன். தலையை உயர்த்திப் பார்த்தபோது, பகவான் எனக்கெதிரில் நின்றிருந்தார். அவர் என்னைப் பார்த்து தலையசைத்து, புன்னகை புரிந்தார். அதே நொடியில் எனக்குள், இதுவரை நான் அனுபவித்தறியாத ஏதோ ஒன்று, என்னுள் நிகழ்வதை உணர்ந்தேன். ஞான சூரியனான அவர், தானே ஒளி, தானே ஞானாக்னி என்று எனக்கு உணர்த்தினார் போலும்".

* * * * * * * *

"புகழ்பெற்ற வழக்கறிஞரான தேவராஜ முதலியார் 'அருணாசல மாகாத்மியத்தில்' சொல்லப்பட்டிருந்த அனேக விஷயங்கள் சம்பந்தமாக ஹாலில் சந்தேகங்கள்

சிந்தனை கட்டுப்பாடற்றது.

எழுப்பிக்கொண்டே இருந்தார். குறிப்பாக, 'யோசனை மூன்றாம்'* என்று துவங்கும் பாடலின் விஷயத்தில் அவருக்கு ஏகப்பட்ட சந்தேகம். இப்பாடலில், புண்ணியத் தலமான அருணாசலத்தின் மூன்று யோசனை தூரத்திற்குள் வசிப்பவர்களுக்கு, பாவங்களை அழிக்கும் தீட்சை இல்லாமலேயே, பாசமற்ற என் சாயுஜ்ய பதவி கிடைக்கும்- இது ஈசனாகிய என்னுடைய ஆணை! என்று சிவபெருமான் சொல்வதாகக் கூறப்பட்டிருக்கிறது. இதெல்லாம் உண்மைதானா என்ற முதலியாரின் சந்தேகங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் பகவான் முதலியாரைப் பார்த்து, 'ஓய்! இது உச்ச நீதிமன்றத்திலிருந்து வந்த தீர்ப்பு! அதை ஏற்று அடிபணிந்து நடப்பதைத் தவிர நாம் செய்வதற்கு ஒன்றும் இல்லை' என்றார். பரமசிவனை உச்சநீதிமன்றம் என்று பகவான் வர்ணித்ததில், வழக்கறிஞரான தேவ்ராஜ முதலியாருக்கு ஏக மகிழ்ச்சி.

* * * * * * * *

பக்தர் ஒருவர், "பகவானே! என் மனம் சஞ்சலமாகவே இருக்கிறது. எவ்வளவு முயன்றும் என்னால் அதைக் கட்டுப்படுத்த இயலவில்லை. பகவானால் மட்டுமே அதை அசைவற்று இருக்கச் செய்யமுடியும்" என்று அடிக்கடி முறையிடுவார். பகவானிடமிருந்து பதில் ஒன்றும் வரவில்லை. அவர் போனபின் பகவான் சிறு புன்னகையுடன், "மனம், மனம் என்று இது என்ன பேச்சு? அது எங்கிருக்கிறது? பார்ப்பதற்கு எப்படியிருக்கும்? அது கறுப்பா அல்லது சிவப்பா? மீசை மற்றும் சடைகள் உண்டா? உண்மையாதெனில், மனம் என்பதாக ஒன்றும் இல்லை. உள்ளது சத்திய வஸ்து ஒன்றே!" என்றார்.

* யோசனை மூன்றாம் இத்தல வாசர்க்கு
ஆசறு தீக்கை யாதியின் றியுமென்
பாசமில் சாயுச் சியம்பயக் கும்மே
ஈசனாம் என்றன் ஆணையினானே.

-ஸ்ரீ பகவான்.

(தொடரும்...)




நல்ல வாய்ப்பை மறுக்காதீர்கள்.

# ஆன்மீகத்தின் இன்றைய தேவை

**திரு குமாரசாமி சோமசுந்தரம்** அவர்கள்

"இந்த உலகம் ஒரு நாடக மேடை. அதில் நாம் எல்லோரும் நடிகர்களும் நடிகைகளுமே", என்று முன்னர் ஓர் ஆங்கிலக் கவிஞன் தீர்க்க தரிசனமாகக் கூறிவைத்தான். அதற்கு முன்னரே நம் முன்னோர்கள், அவர்கள் வாழ்ந்த காலத்தின் மக்கள் விவகாரங்களைக் கூர்ந்து அவதானித்த பின் "உலகமே ஒரு நாடகமேடை" என்று சொல்லி விட்டார்கள். மனித இனம் நாகரிகமடையத் தொடங்கியதும், மனிதர்கள் முதலில் கற்றுக் கொண்டது நடிப்புக் கலையையே என்பது இக்கூற்றில் இருந்து அறியக்கிடக்கிறது. அன்று தொடங்கிய நடிப்புக் கலை இன்றும் தொடர்ந்து புதிய புதிய உத்திகளுடனும் உத்வேகத்துடனும் வளர்ச்சி பெற்றுக் கொண்டு வருவதைக் காணமுடிகிறது.

மனிதன், மனிதத்தன்மைகளுடனான மனிதனாக உருவாக்கம் பெறக் கற்றுக் கொள்ளாவிடினும், நல்ல மனிதனாக வேடமிட்டு நடிப்பதற்கு கற்றுக் கொண்டுள்ளான். நன்கு தேர்ச்சியும் பெற்றுள்ளான். அந்த வகையில் ஆன்மீகத்தைச் சமய ஒழுக்க விழுமியங்களை, நடைமுறை வாழ்க்கையிலிருந்து சற்று விலக்கியும் ஒதுக்கியும் வைத்திருக்க வேண்டிய ஓர் அவல நிலைமை தோன்றுகிறது. தற்காலத்தில் நடைபெற்று வருகின்ற நடிப்பு வாழ்க்கைக்கு ஆன்மீக சமய ஒழுக்க விழுமியங்கள் எங்கே குந்தகமாக இடைஞ்சலாக வந்து விடுமோ என்ற அச்சம் தான். அவற்றைக் கைவிட்டு விலக்கி வைப்பதற்குக் காரணமாக அமைகின்றதோ என எண்ணத் தோன்றுகின்றது.

"குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்" என்பது முதுமொழி. குற்றம் புரிந்தவர், குற்றம் என்று அறிந்திருந்தும் திரும்பத்திரும்ப குற்றங்களைப் புரிந்து கொண்டிருப்போர் வாழ்க்கையில் நிம்மதி என்றுமே இருக்காது என்பது அனுபவ உண்மை. செயல்களின் தன்மைகளுக்கேற்ப விளைவுகளின் தன்மைகளும் அமைவது இறைநீதி அதிலிருந்து எவரும் தப்பித்துக்கொள்ள முடியாது.

நடிப்பு என்றால் "போலச் செய்தல்" ஆகும். எனவே நடிப்பு என்று வந்துவிட்டால் அங்கு நிஜத்தை எதிர்பார்க்க முடியாது தானே! இன்று வாழுகின்ற மனிதர்கள் பலர் நல்ல மனிதர்களாக, சமயிகளாக, ஆன்மீகவாதிகளாக நடிப்பதில் வல்லுனர்களாகக் காணப்படுகின்றனர். மனித விழுமியங்கள், ஆன்மீகம், சமயப் பண்புகள் என்பன நடிப்பினில் நன்கு வெளிப்படுத்திக் காட்டப்படுகின்றன. ஆனால் நிஜத்தில், நடைமுறையில் அவை இல்லை. இந்நிலைமையே இன்றைய தலைமுறையினர் எதிர்கொள்ளும் துன்பங்களுக் கெல்லாம் மூலகாரணமாக அமைகின்றது. ஆறறிவு உள்ள மனிதனுக்குச் சரி எது பிழை எது என்று பகுத்தறிந்து கொள்ளத் தெரியாமலில்லை. எல்லாத் தவறுகளையும் பிழை களையும் அவை குற்றங்கள் என்று நன்கு தெரிந்து கொண்டும் அவற்றின் பின் விளைவு களைத் தெளிவாகத் தெரிந்து கொண்டும் மானுடத்திற்கு எதிராக சவால்களைத் தொடுத்துக் கொண்டும்தான் அக் குற்றங்கள் தொடர்ந்தும் மனிதர்களால் செய்யப்பட்டு வருகின்றன.

"குற்றம் செய்வது மனித இயல்பு அதை மன்னிப்பது தெய்வீக இயல்பு" என்று குற்றம் புரிபவர்கள் ஒரு வார்த்தை ஜாலத்தைத், தமது சுயநலப் பாதுகாப்புக்காக உருவாக்கிச், சமுதாயத்தில் உலாவ விட்டிருக்கிறார்கள். இது குற்றத்தையும் செய்து

**நேர் பார்வை நம்புவதற்குரியவை.**

விட்டுத், தப்பிக்கும் முயற்சியேயாகும். ஒரு குற்றத்தை ஓரிருமுறைகள் செய்துவிட்டு தெரியாமல் செய்த குற்றம் எனக் கூறி, மன்னிப்புக் கேட்டுப் பெற்றுகொண்ட பின்னரும் கூடத் தொடர்ந்தும் அக்குற்றத்தைச் செய்து கொண்டிருப்பவர்களின் தொகை உலகில் பெருகிக் கொண்டே செல்கிறது. குற்றம் புரிபவர் யாவரும் குற்றங்களை நியாயப்படுத்தித் தம்மைப் பாதுகாக்கும் முயற்சிகளிலேயே காலத்தைக் கடத்துகின்றனர். குற்றம் புரிவது மனித இயற்கையன்று; மனிதனுக்கு அந்நியமானது; மனித இயல்புக்கு முரணானது என்பதை மனிதர்கள் தெரியாதவர்கள் போல நடிக்கின்றனர். நடிப்பு வாழ்வில் இன்றைய உலக மாந்தர்களுக்கு அத்துணை அபார நாட்டம் ஏற்பட்டுள்ளமை துரதிர்ஷ்டவசமானது. மனித இயற்கை உரிமைகளை மீறுவதாகவும் அமைகின்றன.உண்மையில் குற்றம் செய்வதோ பிழைவிடுவதோ மனித இயல்புமன்று, மனித இயற்கையுமன்று அது மாபெரும் பாதகமாகும். தான் சார்ந்துள்ள மனித குலத்தை இழிவுபடுத்தும் பழிச் செயலாகும் என்பதை அரிய மனிதப் பிறவியை எடுத்த ஒவ்வொருவரும் கருத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

மனிதப் பிறவி எமக்குக் கிடைக்கப் பெற்றதன் நோக்கம், கடவுளை வணங்கி அறிவில் முழுமை பெற்று, வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து, இம்மையில் இன்பமும், மறுமையில் மோட்சம் எனும் பேரானந்தமும் பெற்றுக் கொள்ள இறைவனோடு இணைதற் பொருட்டேயாம் எனச் சைவநூல்கள் கூறுகின்றன. மனிதர்கள் தாம் மனிதப்பிறவி எடுத்து வந்த நோக்கத்தைப் புறந்தள்ளி விட்டு, காமம், குரோதம், மோகம், உலோபம், மதம், மாற்சரியம் என்னும் ஆறு வகைத் தீய குணங்களுடன் உறவாடிக் கொண்டும், ஐம்புலன்களின் வழி மனங்களை அலையவிட்டுக் கொண்டும் அதேவேளை, நல்லவர்களாக நடித்துக் கொண்டும் வாழுகின்ற ஒரு வகைப் போலி வாழ்க்கைமுறை தற்காலத்தில் பெரும்பாலான வர்கள் மத்தியில் செல்வாக்குப்பெற்று வருவதைக் காணக்கூடியதாக உள்ளது.

இத் துர்ப்பாக்கிய நிலைமை, மிக் வேகமாகப் பெருகி மனித சமுதாயத்தை ஆக்கிரமித்து வருகிறது. இதற்குரிய காரணத்தை ஆராய்ந்து பார்த்தால் மனிதர்களிடம் காணப்படுகின்ற "நான்" என்ற தற்பற்றும் "எனது" என்ற பொருட்பற்றும் பெருவளர்ச்சி கண்டு வருவது தான் என்பது தெரிய வரும் தன்னலமும் பொருளுணர்வும்,மனிதர்களில் வீறு கொண்டு எழுச்சி பெறுவதற்கு காரணம் மனிதர்கள் இறையுணர்வையும், ஆன்மீகத் தையும் அறநெறியையும் தத்தம் வாழ்க்கையிலிருந்து விலக்கியும்; அதேவேளை ஆன்மீகத்தைப் போர்வையாக்கி, அதனுள் மறைந்து நின்றுகொண்டு போலி வாழ்க்கை வாழ்ந்து கொண்டும் இருப்பது தான் என்பது தெரிய வரும்.

மனிதன் என்கின்ற உயர்திணை உயிரி, என்றென்றும் பிறப்பினால் மட்டுமல்ல நடைமுறை வாழ்க்கையிலும் மனிதம், மனிததர்மம், மனிதநேயம், மனிதவிழுமியங்கள், ஆன்மீக ஒழுக்கப் பண்புகள் உள்ளிட்ட மனிதத் தன்மைகள் பண்புகள் என்பவற்றை அனுட்டித்தும், ஓம்பியும் வருதலை உறுதிப்படுத்துவதன் மூலம்தான் அவன் உயர்திணையில் நிரந்தர உறுப்பினராக இருக்க முடியும். இன்று மறைந்தொழுகு மாந்தர்களின் எண்ணிக்கை உலகில் பெருகிவருவதாலேயே தனி மனிதரிலும், குடும்பங்களிலும், சமுதாயத்திலும் உலகிலும் அமைதி குன்றியும் அருகியும் வருகிறது. ஊழல்கள் மலிந்து காணப்படுகின்றன. எதிர்மறை எண்ணங்களும் செயல்களும் பல்கிப் பெருகி வருகின்றன.

**வேடிக்கைப் பேச்சில் வெளிவரும் உண்மை பல.**

சுருங்கக் கூறின் மனித நாகரிக வரலாற்றுக் காலத்திலிருந்து கட்டியெழுப்பப்பட்டு வந்த நயத்தக்க நாகரிகம்,பண்பாடு விழுமியங்கள், ஆன்மீகப் பண்புகள் என்பன யாவும் மனித குலத்திலிருந்து பறித்துக் கொள்ளப்பட்டதன் பின் நாம் எவற்றை மனித சாதனைகளாக எதிர்காலச் சந்ததியினருக்கு முன்வைக்கப் போகிறோம்? இது பற்றிச் சிந்தித்து செயற்பட வேண்டிய நேரம் வந்துவிட்டது.

வேகம் நிறைந்த உலகியல் வாழ்க்கையுடன் ஆன்மீகம் கலக்கும்போதுதான், மனிதவாழ்க்கையின் வேகம் தணிக்கப் பெற்று விவேகம் மேலெழுந்து வாழ்க்கையைச் சீர்செய்து வாழ்வில் சமநிலை ஏற்பட வழி பிறக்கிறது. மனித இனத்தின் தொடர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும், மேன்மைக்கும் உறுதுணையாக வருவது ஆன்மீகமே என்பதை உணர்ந்து விரைந்து செயற்படுவோமாக.

## தைப்பொங்கல் திருநாளே வருக!

எங்கெங்கும் உழவு தொழில்
ஏற்றமுற மழை வெயிலைத்
தாங்கு தடையின்றியுமே
தந்துதவும் கதிரவனை
பொங்கலிட்டு வாழ்த்திப்
புதிது படைக்கின்ற
இங்கித நற் தைப்பொங்கற்
திரு நாளே நீ வருக!!

வயற்காட்டில் உழைத்தபயன்
வாசலுக்கு வந்ததனால்
உயர்வடைந்த உழவனவன்
உவகை கொண்டு தனதன்பு
அயலவர்கள், ஊரவர்கள்
அனைவரொடும் சேர்ந்துபொங்கி
நயமாகக் கொண்டாடும்
நன்னாளே நீ வருக!!

புத்தாடை புனைந்து
புதுக் கலசந் தானெடுத்து
முத்து முத்தாய் புத்தரிசி
பால் பழம், சர்க்கரை இட்டு
தத்துவ நற் பொங்கல் பொங்கி
தரணியெங்கும் களிக்கின்ற
தைத் திரு நாளே வருக!
தானம் தவம் நிலைக்க!!



-கி. குலசேகரன்-

பறிக்காத பழம் விரைவில் அழுகிவிடும்.




## அரசனை வென்ற ஆண்டி

ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து. (குறள்:126)

ஆமை தன் ஐந்து அங்கங்களையும் ஓர் ஓட்டிற்குள் அடக்கி ஆபத்திலிருந்து தப்பிவிடும். இதுபோல ஒருவன் தன் ஐம்புலன்களையும் ஒரு மனதிற்குள் அடக்கி இருக்க முடிந்தால் எழுகின்ற பிறப்புகளிளெல்லாம் துன்பம் உண்டாகாமல் பாதுகாப்பாக இருக்கலாம்.

பாரத தேசத்தில் காலங்காலமாக இப்படிப் புலன்களை அடக்கியிருந்த யோகிகள் இருந்திருக்கின்றனர். இவர்களில் ஓர் ஆண்டியிடம் ஓர் அரசனே தோற்றுள்ளான். அவன் பாரத அரசர் பலரைப் போரில் தன் வீரத்தாலும் படையாலும் ,வென்றவன். அவன்தான் மாவீரன் அலெக்சாண்டர்.

வடமேற்கிந்தியாவில் கிரேக்கப் பெருவீரன் அலெக்சாண்டர் நுழைந்தான். கி.மு 327 வாக்கில். ஆற்றைக் கடந்து அவனால் படையுடன் வரமுடியாது என்று அமைதியாக உறங்கிக் கொண்டிருந்த போரஸ் எனும் புருஷோத்தமனின் படைகளை, நதியைத் தாண்டி நள்ளிரவில் வந்த அலெக்சாண்டர் கொன்றும் சிறைப்பிடித்தும் வென்றான். தத்துவத்தில் விருப்பம் வைத்திருந்த அவன், பாரதத்தில் சாதுக்கள் புலன்களை அடக்கியோர் அதிகம் இருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டிருந்தான். ஒரே ஒரு யோகியைத் தன் நாட்டிற்கு அழைத்துச் செல்ல அவன் விரும்பினான்.

பல இடங்களில் சுற்றித் திரிந்த அவன், ஓரிடத்தில் ஒரு சாது அமர்ந்திருந்ததைக் கண்டான். அவர் அம்மணமாக மௌனமாக உட்கார்ந்திருந்தார். அவரிடம் மகிழ்ச்சியுடன் போன அரசன், "சாதுவே வணக்கம்" என்றான். அவர் ஆசீர்வதித்துவிட்டுச் சும்மா இருந்தார்.

"தாங்கள் என்னுடன் வரவேண்டும்" என்றான். அவர் அவனிடம் பேசவே இல்லை. பலவாறு அவரைத் தூண்டி அவன் என்னென்னவோ கேட்டும், பேசியும் அவர் கண்டுகொள்ளவே இல்லை. அப்புறம் கருணையினால் பேசினார்.

"நான் எங்கும் வருவதற்கில்லை" என்றார்.

"வந்தால் சுவையான உணவு தருவேன்."

**கிடைக்காத ஒன்றுக்காய் கவலைப்படாதே.**

"சுவை புலனை நான் அடக்கி விட்டேன்."

"சேர்ந்து மகிழப் பெண்களைத் தருவேன்"

"தொடுகைப் புலனை நான் அடக்கி விட்டேன்."

"பார்க்க அழகான இடத்தில் மாளிகை தருவேன்; வசிக்கலாம்."

"கட்புலனையும் நான் அடக்கி விட்டேன்"

"நல்ல இசையை நீ அனுபவிக்கலாம்"

"செவிப்புலனையும் நான் அடக்கி விட்டேன்"

"மணமுள்ள திரவியங்களை ரசிக்கலாம்"

"மூக்கையும் நான் அடக்கி விட்டேன்"

"இப்படி அம்மணமாக எதுவுமற்ற ஆண்டியாக இருக்கிறாயே, இதில் என்ன கண்டாய்?"

"இப்படி ஓர் அரசனான நீ இந்த ஆண்டியிடம் வந்து கெஞ்சிக் கூத்தாடிக் கொண்டிருப்பதைக் காண்கிறேன்" என்றார் சிரித்தபடி.

வாளையுருவிய அலெக்சாண்டர், "நீ என்னுடன் வராவிட்டால், உன்னை வெட்டிக் கொன்று போடுவேன்" என்றான்.

பலமாகச் சிரித்த ஆண்டி, "நீ என் உடம்பையே வெட்டுவாய். நானோ இந்த உடம்பல்ல, ஆத்மா. ஆத்மாவோ வாளால் வெட்டப்படாதது. நீரால் நனைக்கப்படாதது. காற்றால் உலர்த்தப்படாதது. நெருப்பால் எரிக்கப்படாதது. பஞ்சபூதக் கூட்டுப் பொருளான உடலில்லை நான். எனக்கு அழிவே இல்லை. புலன்களை அடக்கி ஆசை வயப்படாது மன உறுதியுடன் இருக்கும் என்னை உன்னால் எதுவும் செய்ய முடியாது குழந்தாய்" என்றார்.

பிறப்பே எழ முடியாத எழுந்தாலும் துன்பம் நெருங்க முடியாதவாறு புலனடக்கத்தை அவர் பெற்றிருந்ததால் அரசனே அவரிடம் தோற்றான்.

அடக்கமே சிறந்தது; அதைவிடச் சிறந்த செல்வமில்லையாதலால் அதனை நன்கு காக்க வேண்டும். அடக்கத்தால் நல்ல பெருமை உண்டாகும். தன்நிலையில் உறுதியாக மாறாமலிருப்பதே அடக்கமாகும். இப்படி இருப்பவன் மலையைவிடப் பெரியவன். பணம் படைத்தும் பணிவோடு இருப்பது கூடுதல் செல்வம். எதை அடக்காவிட்டாலும் நாவையடக்கிட வேண்டும். இல்லையேல் துக்கமேற்படும்.

மயன் கட்டிய சபையில் தரையெது? தண்ணீரெது? என்று துரியோதனன் தடுமாறியபோது திரௌபதி கேலிபேசி அடக்கமின்றிச் சிரித்தாள். இதனால் சூதாடித் தோற்கடித்து அவளைச் சபையில் துகிலுரிந்து அவமானப்படுத்தினர். தீய பேச்சு முன் செய்த நன்மையையெல்லாம் போக்கிவிடும். தீக்காயம் வடுவை ஏற்படுத்தி விட்டாலும் உள்ளே ஆறிவிடும். நாவால் சுட்ட வடுவில் உட்புண் ஆறவே ஆறாது. கல்வி கற்றவன் கோபத்தை விலக்கி அடக்கத்தோடு வாழ்ந்தால் தரும தேவதை அவனைச் சென்றடையக் காத்து இருக்கும்.

யுகந்தோறும் அவதரித்து அறத்தைக் காப்பவர் கடவுள். அதனால் அடக்கமாக இருப்பவனுக்கு அவரருள் கிடைக்கும். முத்தியுமதனால் கிடைத்துவிடும். அப்பொழுது அமரனாக வாழ்வு பெறவும் முடியும்.

**துடிப்பான எண்ணம் சோககீதம் பாடாது.**

நாவலர் பக்கம்:

(தொடர்ச்சி...

# சைவ சமய வினா விடை

-ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்-

**40. எழுவகைப் பிறப்பினுள்ளும் எந்தப் பிறப்பு அருமையுடையது?**

பசுபதியாகிய சிவபெருமானை அறிந்து வழிபட்டு முத்தியின்பம் பெற்றுய்தற்குக் கருவியாதலால் மனிதப் பிறப்பே மிக அருமையுடையது.

**41. மனிதப்பிறப்பை எடுத்த ஆன்மாக்களுக்கு எப்பொழுது அம்முத்தி சித்திக்கும்?**

அவர்கள், தங்கள் தங்கள் பக்குவத்துக்கு ஏற்ப, படிமுறையினாலே, பிறவிதோறும் பௌத்தம் முதலிய புறச்சமயங்களில் ஏறி ஏறி, அவ்வச் சமயத்துக்கு உரிய நூல்களில் விதிக்கப்பட்ட புண்ணியங்களைச் செய்வார்கள்; பின்பு அப்புண்ணிய மேலீட்டினாலே வைதீக நெறியை அடைந்து, வேதத்தில் விதிக்கப்பட்ட புண்ணியங்களைச் செய்வார்கள்; பின்பு அப்புண்ணிய மேலீட்டினாலே சைவ சமயத்தை அடைவார்கள்; சைவ சமயத்தை அடைந்து சிவாகமத்தில் விதிக்கப்பட்ட சரியை, கிரியை யோகங்களை விதிப்படி மெய்யன்போடு அநுட்டித்தவருக்குச் சிவபெருமான் ஞானாசாரியாரை அதிட்டித்து வந்து சிவஞானம் வாயிலாக உண்மை முத்தியைக் கொடுத்தருளுவார்.

**42. புறச்சமயங்களில் வழியே ஒழுகினவர்களுக்கு யாவர் பலங்கொடுப்பார்?**

புறச்சமயிகளுக்கு, அவ்வவரால் உத்தேசித்து வழிபடப்படும் தெய்வத்தைச் சிவபெருமானே தமது சக்தியினாலே அதிட்டித்து நின்று அவ்வவ்வழிபாடு கண்டு பலம்(ன்) கொடுப்பார்.

**43. சரியையாவது யாது?**

சிவாலயத்துக்கும் சிவனடியார்களுக்கும் தொண்டு செய்தல்.

**44. கிரியையாவது யாது?**

சிவலிங்கப் பெருமானை அகத்தும் புறத்தும் பூசித்தல்.

**45. யோகமாவது யாது?**

விடயங்களின் வழியே போகாவண்ணம் மனத்தை நிறுத்திச், சிவத்தைத் தியானித்துப் பின்பு, தியானிப்போனாகிய தானும் தியானமும் தோன்றாது தியானப் பொருளாகிய சிவம் ஒன்றே விளங்கப் பெறுதல்.

**46. ஞானமாவது யாது?**

பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களின் இலக்கணங்களை அறிவிக்கும் ஞான நூல்களைக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து நிட்டை கூடல்.

**47. சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கினாலும் அடையும் பலன்கள் யாவை?**

சரியையினால் அடையும் பலன் சிவசாலோக்கியமும்,

கிரியையினால் அடையும் பலன் சிவசாமீப்பியமும்,

யோகத்தினால் அடையும் பலன் சிவசாரூப்பியமுமாம். இம்மூன்றும் பதமுத்தி; ஞானத்தினால் அடையும் பலன் சிவசாயுச்சியமாகிய பரமுத்தி.

சுறுசுறுப்பே மனிதனின் மூலதனம்.

## பாசவியல்

**48. பாசமானவை யாவை?**

ஆன்மாக்களைப் பந்தித்து நிற்பவைகளாம். (பந்தித்தல்- கட்டுதல். பாசம், மலம் என்பவை ஒருபொருட் சொற்கள்.)

**49. பாசம் எத்தனை வகைப்படும்?**

ஆணவம், கன்மம், மாயை என மூவகைப்படும். இம்மூன்றோடு, மாயேயம், திரோதாயி என இரண்டும் கூட்டிப் பாசம் ஐந்து என்று கொள்வது உண்டு.

**50. ஆணவமாவது யாது?**

செம்பிற் களிம்புபோல் ஆன்மாக்களில் அநாதியே உடன்கலந்து நிற்பதாய், ஒன்றேயாய், ஆன்மாக்கள்தோறும் வெவ்வேறாகி அவைகளுடைய அறிவையும் தொழிலையும் மறைத்து நின்று தத்தங்கால எல்லையிலே நீங்கும் அநேக சக்திகளுடையதாய்ச் சடமாய் இருப்பது.

**51. கன்மமாவன யாவை?**

ஆன்மாக்கள் மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலே செய்த புண்ணிய பாவங்கள், இவை எடுத்த பிறப்பிலே செய்யப்பட்ட பொழுது, ஆகாமியம் எனப் பெயர் பெறும். பிறவிதோறும் இப்படி ஈட்டப்பட்டுப் பக்குவப்படும் வரையும் புத்திதத்துவம் பற்றுக்கோடாக மாயையிலே கிடக்கும்பொழுது சஞ்சிதம் எனப்பெயர் பெறும். இச்சஞ்சித கன்மங்களுக்குள்ளே பக்குவப்பட்டவை, மேல் எடுக்கும் உடம்பையும் அது கொண்டு அநுபவிக்கப்படும் இன்ப துன்பங்களையும் தந்து பயன்படும் பொழுது, பிராரத்தம் எனப்பெயர் பெறும்.

**52. மாயை எத்தனை வகைப்படும்?**

சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதி மாயை என மூன்று வகைப்படும். இவைகளுள்ளே, சுத்தமாயை, அசுத்தமாயை இரண்டும் நித்தியம்; பிரகிருதிமாயை, அசுத்தமாயையினின்று தோன்றியதாதலால், அநித்தியம்.

**53. சுத்தமாயையாவது யாது?**

நித்தியமாய், வியாபகமாய், அருவமாய்ச், சடமாய்ச் சொல்வடிவமும் சுத்தமாகிய பொருள் வடிவும் தோன்றுவதற்கு முதற்காரணமாய், மயக்கம் செய்யாததாய் இருப்பது.

**54. அசுத்தமாயையாவது யாது?**

நித்தியமாய், வியாபகமாய், அருவமாய்ச், சடமாய்ப் பிரளய காலத்திலே ஆன்மாக்களுடைய கன்மங்களுக்கு உறைவிடமாய், ஆன்மாக்களுக்கு சுத்தா சுத்தமும் அசுத்தமும் ஆகிய தனு, கரண புவன போகங்கள் தோன்றுதற்கு முதற்காரணமாய், மயக்கஞ் செய்வதாய் இருப்பது.

**55. மாயேயமாவன யாவை?**

மாயையால் ஆகிய தத்துவங்களும், அவைகளால் ஆகிய தனு கரண புவன போகங்களுமாம்.

**56. திரேதாயியாவது யாது?**

ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களையும் தொழிற்படுத்திப் பாகம் வருவிக்குஞ் சிவசக்தி இது, மலத்தைச் செலுத்துதலினாலே, மலம் என உபசரிக்கப்பட்டது.

(தொடரும்...

**இல்லை என்கிற வீட்டில் பல்லியும் சேராது.**

# சான்றோர் யார்?

திரு ஐ.கோ. சந்திரசேகரம் அவர்கள்

சான்றோர்களைக் குறித்து வாழ்ந்த ஆன்றோர் எப்படி எண்ணினார்கள் என்பதை அறிவது முக்கியம்.

மனிதன் பல பேறுகளைப் பெற ஆவல் கொள்கிறான். பொன்,நிலம், பணம், ஆகியவற்றைப் பெற்றவரை, யாரும் பெற்றோர் என்று சொல்வதில்லை. மக்களைப் பெற்றோரைத் தான் பெற்றோர் என்று மனங்குளிரச் சொல்கிறார்கள்.

ஒரு தாய்க்கு குழந்தை பிறக்கிறது "தன் மகன் பெரிய அறிஞன் ஆவான். பெரிய அதிகாரி ஆவான் பெரிய முதலாளி ஆவான்!" என்றெல்லாம் நினைப்பாள். ஆனால் இவற்றை விடத் தன் மகன் பெரிய சான்றோன் ஆக வேண்டும் என்று நினைத்து, பெற்ற போது பெற்ற மகிழ்ச்சியை விடக் கூடுதலாகப் பூரிப்படைவாள்.

"ஈன்ற பொழுதிள் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக் கேட்டதாய்"

-திருக்குறள்

எனவே மக்களைப் பெற்றோர்? தம் குழந்தைகள் வளர்ந்ததும் சான்றோர் ஆக வேண்டும் என்பதில் குறியாக இருந்தார்கள் என அறிகிறார்கள்.

"ஈன்று புறந்தருதல் என் தலைக் கடனே; சான்றோர் ஆக்குதல் தந்தைக்குக் கடனே" என்னும் புறநானூற்று அடிகள் இந்தக் கருத்திற்கு அரண் செய்கின்றன.

அந்தக்காலத்தில் வாழ்ந்தவர்கள் சான்றோர் வாழ்ந்த வழியில் வாழ வேண்டும் என்றே நினைத்தார்கள். கடை ஏழு வள்ளல்களில் ஒருவனாகிய ஆய் அண்டிரன், சான்றோர் சென்ற வழியில் நடப்பதையே வாழ்க்கையின் குறிக்கோளாகக் கருதினான். பிறருக்கு உதவி செய்தல் என்ற குணம், பிறவியை மாட்சிமைப்படுத்துகிறது. அறியாமை என்ற இருளால் மூடப்பட்டுள்ள உயிரின் இனிய பண்புகளை, இது வெளிப்படுத்தி ஒளி விளங்கச் செய்கிறது. ஒரு பயனையும் கருதாத உதவி -மறுமைப் பயனையும் எதிர்பார்க்காத உதவி -மிகவும் சிறப்புடையது.

உதவி என்பது அறம் நோக்கிச் செய்வது என்று பலர் தவறாக நினைக்கிறார்கள். அறம் கருதிச் செய்தால் ஒன்றை எதிர்பார்த்துச் செய்வதாகும். இதனால் இரக்க உள்ளம் உண்டாகாது.

மறுமையில் "சிறப்பு" உண்டாகும் என்று நினைத்து இந்தப் பிறவியில் ஒருவருக்குப் பொருள் கொடுத்து உதவி செய்தால், அதற்கு "உதவி" என்பது பெயராகாது. அதனை ஒருவகையான "வாணிபம்" என்று தான் பெயரிட வேண்டும்.

ஒரு பொருளைக் கொடுத்து, அறத்தையோ பலனையோ பெற்றால் அது பண்ட மாற்றுப் போல் வாணிபமாகவே முடிகிறது. "அறத்தை விலை கொடுத்து வாங்கும் அறவிலை வாணிகன் ஆய் அல்லன் எந்த மறுமைப் பயனையும் அவன் எதிர்பார்க்கவே

**கடன்படுதல் துயரத்தை வளர்ப்பதற்கு வழி.**

மாட்டான்". சான்றோர் இந்த முறையில் தான் வாழ்ந்தார்கள். அது போலவே தானும் வாழ வேண்டும் என்னும் கொள்கை உடையவனாய் வாழ்ந்தான்.

எனவே "சான்றோர் சென்ற நெறி" என்னும் செந்நெறி வகுக்கப்பட்டு இருந்தது எனவும், அந்த நெறியினின்று வழுவாது ஒழுக வேண்டியது ஒவ்வொருவருடைய கடமை எனவும் நம் முன்னோர் எண்ணினர்.

"இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம் எனும்
ஆறவிலை வணிகன் ஆய் அலன்; பிறரும்
சான்றோர் சென்ற நெறி என
ஆங்குப் பட்டன்று, இவன் கைவண்மையே"

-புறநானூறு

ஆண்டுகள் பலவானாலும் நரை திரை இல்லாமல், இளமையாகவும் அழகாகவும் இருப்பதற்கு எல்லோரும் விரும்புவார்கள். அதற்காகக் காயகற்பங்கள் செய்து இவற்றால் பயனில்லை என உணர்ந்து மனம் புண்ணாவார்கள். இத்தகைய தவறான முயற்சிகளால், பல காலம் பொறுத்து வரவிருக்கும் நரை திரைகளை மிக விரைவில் வரவழைத்துக் கொள்கிறார்கள். மாறாகச் சான்றோர் வாழும் இடத்தில் நாமும் வாழ்ந்தால், இளமையோடு வாழலாம் என்ற கருத்தைப் பிசிராந்தையார் கூறுகிறார் இளமைக்கு இந்தப்புலவர் காட்டும் வழி இயல்பானது நிலையானது செலவில்லாதது. இவர் குறிப்பிடும் முதுமையை ஓட்டும் வழியைக் காண்போம்.

"நான் இல்வாழ்க்கையில் இருக்கின்றேன். என் மனைவி மாட்சிமையான குணங்களை உடையவள். அறிவும் நிரம்பியவள். என் மக்களும் அறிவுள்ளவர்கள். என் வேலைக்காரர்கள் இளைஞர்கள், நான் கருதுவதையே அவர்களும் கருதுவார்கள்.நான் வாழும் நாட்டிலுள்ள அரசன் முறையில்லாதவற்றைச் செய்யமாட்டான். குடிகளைப் பாதுகாப்பான் என் ஊரில் சான்றோர் பலர் வாழ்கின்றார்கள். இவையே நான் நரை திரை இல்லாமல் இருப்பதற்குக் காரணம்" என்கிறார்.

**"யாண்டு பலவாக நரை இல ஆகுதல் யாங்காகியர்? ஏன் வினவுதிராயின் மாண்ட என் மனைவியொடு மக்களும் நிரம்பினர் யான் கண்டனையர் என் இளையரும் வேந்தனும் அல்லவைசெய்யான் காக்கும் அதன் தலை ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர் பலர் யான் வாழும் ஊரே"**

-புறநானூறு-

சான்றோர் பலர் இருந்ததினாலேயே, சந்தமும் இளமையோடு பிசிராந்தையாரால் வாழ முடிந்தது என்று உணர்கின்றோம். இத்தகைய அறிவுணர்வு உடைய சான்றோர் வாழாத நாட்டில் ஒரு நன்மையும் உண்டாவதற்கு வழியில்லை. ஓரறிவுள்ள உயிர்களும் செழுமையாக வளர்வதில்லை. தக்க பயனும் தருவதில்லை இறுதியில் பசி, பிணி பகை ஆகியன உண்டாகி நாட்டுக்கு இன்னல் அளவில்லாமல் ஏற்படும். இந்த சிறுகுடியில் வாழ்பவர்கள் அறமில்லாத காரியங்களை விரும்பிச் செய்வதனால் இந்த மலையில் வள்ளிக் கிழங்குகள் நிலத்தினுள் இறங்கி விளையமாட்டா இந்த மலையில் வண்டுகள், தேன் கூடுகள் கட்டமாட்டா, தினைப்பயிர்கள் கதிர்வாங்கிப் பயன் தரமாட்டா. இனிப்பாடலைப் பார்ப்போம்.

"சிறு குடியீரே, சிறுகுடியீரே
வள்ளிகீழ் வீழா; வரை மீசைத் தேன் தொடா
கொல்லை குரல் வாங்கி ஈனா; மலை வாழ்நர்
அல்ல புரிந்து ஒழுகலான்"

-கலித்தொகை

சான்றோர் இல்லாமையால் எப்படிப்பட்ட இன்னல்கள் ஏற்படும் என்பதை இந்தப்பாடல் தெளிவுறுத்துகிறது. இனி இறுதியாகச் சான்றோர் யார் என்பதற்கு வள்ளுவர் குறிப்பிடும் இலக்கணத்தைப் பார்ப்போம். ஏனென்றால் திருவள்ளுவரை விட உலகத்தை அளந்து பார்த்த பெரியார் வேறு யாரும் இல்லை.

"அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்து சால்பு ஊன்றிய தூண்"

-திருக்குறள்

அன்பு, நாணம், ஒப்புரவு, கண்ணோட்டம் வாய்மை என்ற ஐந்து பண்புகளும் சான்றாண்மையைத் தாங்கியுள்ள தூண்களாகும். இந்த ஐந்து பண்புகளை ஆய்ந்து அறிந்தால் இந்தப் பண்புகள் வாய்க்கப் பெற்றோரே சான்றோர் என்று உணரலாம். கட்டுரையின் தலைப்பாகிய வினாவிற்கு, விடை கிடைத்து விட்டது அல்லவா?



# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம்

| | | |
|---|---|---|
| க. வரதசுந்தர் | புலோலி | 3000. 00 |
| வே. துரைராசா | மிருசுவில் | 3000. 00 |
| சுப்பிரமணியம் பகீர் | உரும்பராய் கிழக்கு | 20000. 00 |
| C.S. ஆறுமுகம்பிள்ளை | காரைநகர் | 5000. 00 |
| ஸ்ரீகரன் அபிலஷா | பிரான்ஸ் | 10000. 00 |
| சு. சுந்தரம் முருகையா கோவிலடி | புலோலி | 10000. 00 |
| நா. கண்ணம்மா | மானிப்பாய் | 2000. 00 |
| க. பரமேஸ்வரி | அல்வாய் | 2000. 00 |
| பா. சீராளன் | கரவெட்டி மத்தி | 5000. 00 |
| சி. கணேசமூர்த்தி (தலைவர்) | அல்வாய் | 5000. 00 |
| திரு சிங்கராசா குடும்பத்தினர் | வதிரி (ஜேர்மனி) | 10000. 00 |
| ஸ்ரீரங்கன் சிவக்கொழுந்து | வயாவிளான் | 25000. 00 |
| S. கிருஸ்ணபிள்ளை J.P. | ஆவரங்கால் | 1000. 00 |
| K.V. துரைசாமி (நினைவு) | மயிலிட்டி | 1000. 00 |
| S. இராமநாதன் | கொழும்பு | 2000. 00 |
| தங்கராசா பகீதரன் | பன்னாலை | 5000. 00 |
| அபிராமி கமலநாதன் 2ஆம் குறுக்குத்தெரு | பருத்தித்துறை | 5000. 00 |
| அருளம்பலம் இந்துதாசன் | தாவடி | 1மூடை அரிசி |
| திரு திருமதி லோகானந்தன் கௌசலா குமரகோட்டம் | கோண்டாவில் | 2மூடை அரிசி 4000. 00 |
| திரு தர்மலிங்கம் குடும்பம் | லண்டன் | 5000. 00 |
| ப.நோ.கூ. சங்கம் தலைமையகம் | அச்சுவேலி | 1மூடை அரிசி |
| மோகன் வர்த்தக நிலையம் ஆவரங்கால் | | 4மூடை அரிசி, 2மூடை பருப்பு, 1மூடை சீனி |
| திருமதி மகேஸ்வரி இரத்தினசிங்கம் | இடைக்காடு | 10000. 00 |
| இராசையா ஜெயராஜா ஊறணி | வல்வை | 5000. 00 |
| இராஜேஸ்வரி கந்தசாமி (கனடா) | பத்தமேனி | 5000. 00 |
| செ. சற்குணராசா சண்டிலிப்பாய் வீதி | பண்டத்தரிப்பு | 10000. 00 |
| சிவபாக்கியம் | சுழிபுரம் | 1000. 00 |
| சுரேஸ் தம்பிராசா | கனடா | 4புட்டி அரிசி 4000. 00 |
| K.M. செல்வரெத்தினம் நவாலி கிழக்கு | மானிப்பாய் | 6000. 00 |
| செ. செல்வநாதன் | ஜேர்மனி | 5000. 00 |
| மா. கனகசபை | கொக்குவில் கிழக்கு | 10000. 00 |

பதவியும் அந்தஸ்தும் நிரந்தரமில்லாதவை.

| | | |
|---|---|---|
| அஞ்சனா பிரசாந்தன் (மருத்துவசேவை) | | 10000. 00 |
| திரு கிருபாகரன் குடும்பம் | கண்டி | 1000. 00 |
| மா. மகாலிங்கம் | ஆனைக்கோட்டை | 1000. 00 |
| சிவஞானசுந்தரம் இராசசேகரன் | மாதகல் | 2000. 00 |
| R. கைலாயநாதன் | கொழும்பு | 3000. 00 |
| கார்த்திகேசு ஆசிரியர் நினைவு | முறிகண்டி | 10000. 00 |
| த. கண்ணன், த. மோகன் | இமையாணன் | 2000. 00 |
| பரமேஸ்வரன் சகோதரம் குடும்பம் | கனடா | 17000. 00 |
| ப. கிரிஷாந்தன் சாஜிவந்தனா | கனடா | 15000. 00 |
| க. குணரெட்ணம் மஞ்சத்தடி | இணுவில் | 10000. 00 |
| Dr. செந்தில்குமரன் மாலிசந்தி | அல்வாய் | 10000. 00 |
| க. ஆதித்தன் சாயி இல்லம் | உடுப்பிட்டி | 2000. 00 |
| சி. தணிகாசலம் | பத்தமேனி | 1000. 00 |
| திருமதி க. சிவசுப்பிரமணியம் | அச்சுவேலி தெற்கு | 5000. 00 |
| திரு செல்வக்குமார் | லண்டன் | 10000. 00 |
| J. சந்திரப்பிரகாசம் ஆத்தியடி | பருத்தித்துறை | 5000. 00 |
| திருமதி சு. விஜயகுமார் டச்சுவீதி | இருபாலை | 10000. 00 |
| சு. சுரேந்திரரெட்ணம் டச்சுவீதி | இருபாலை | 5000. 00 |
| சோ. ஞானசுந்தரம் செங்குந்தன்வீதி | கரவெட்டி | 5000. 00 |
| சி. கிருபாகரன் | சுழிபுரம் | 5000. 00 |
| மனோகரன் மனோராஜா (யூனியனடி) | உடுப்பிட்டி | 10000. 00 |
| கிருபானந்தன் கார்த்திஜாஜினி (சுவிஸ்) | கோண்டாவில் | 15000. 00 |
| சு. தங்கராசா | பிரான்ஸ் | 5000. 00 |
| கு. தியாகராஜசர்மா (நீர்வைமணி) | நீர்வேலி 1மூடை அரிசி | 3500. 00 |
| திரு உருத்திரன் (சுவிஸ்) | புங்குடுதீவு | 10000. 00 |
| க.ம. செல்வரெத்தினம் | நவாலி | 3000. 00 |
| த. குணரத்தினம் | சிறுப்பிட்டி | 1000. 00 |
| சி. சந்திரசேகரம் | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| திருமதி பராசக்தி சிவநாதன் | நயினாதீவு | 1500. 00 |
| சு. சிவதாசன் | புன்னாலைக்கட்டுவன் வடக்கு | 2000. 00 |
| செல்வி அ. கந்தையா | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| வே. பரமேஸ்வரன் | சிறுப்பிட்டி தெற்கு | 500. 00 |
| பொ. தர்மராஜசிங்கம் | இணுவில் | 5000. 00 |
| S. அருளையா | கொழும்பு | 3000. 00 |
| திரு குலேந்திரன் குடும்பம் | உடுப்பிட்டி | 5000. 00 |
| திரு விக்னகரன் குடும்பம் | அவுஸ்திரேலியா | 3000. 00 |
| நந்தகோபால் சங்கமி (நோர்வே) | சங்கானை | 10000. 00 |
| S. நந்தருபன் | சுதுமலை | 2000. 00 |

(தொடரும்...

**கடமையில் இருந்து ஓய்வு எடுத்தலாகாது.**



வாராந்த வெள்ளி நிகழ்வு



# நம்பிக்கை

திரு காரை எம்.பி. அருளானந்தன் அவர்கள்

காசி ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவன் காசி விஸ்வநாதப் பெருமான், இறைவி காசி விசாலாட்சி, ஒரு நாள் அவர்கள் இருவரும் அமர்ந்து ஆன்மீக விடயங்கள் பற்றி உரையாடிக் கொண்டிருந்தார்கள். அப்போது காசி விஸ்வநாதர், "இந்த மனிதர்களை நாம் மிகவும் நம்பிக்கையுடன்தான் படைத்திருக்கின்றோம். இருந்தாலும் அவர்களுக்குத்தான் போதிய நம்பிக்கை இல்லை,. எதிலும் ஓர் உண்மையான நம்பிக்கை இல்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்" என்றார்.

அதைக் கேட்டதும் ஜகன் மாதாவாகிய விசாலாட்சி "என்ன அப்படிச் சொல்கிறீர்கள்? அதோ பாருங்கள் எவ்வளவு பேர் காசியைத் தேடி வந்து கங்கையில் நீராடிக் கொண்டிருக்கிறார்கள்!. அவர்களுக்கெல்லாம் நம்பிக்கை இல்லாவிட்டால் இவ்வளவு தூரம் காசியைத் தேடிக் கொண்டு இங்கே வருவார்களா?" என்று வினாவினார்.

சரி அதைச் சோதித்துப் பார்க்கலாம் என்று இருவரும் முடிவு செய்தார்கள். உடனே ஒரு திட்டம் போட்டார்கள், .அந்தத் திட்டம் இதுதான்.

"நாம் இருவரும் பக்தர்கள் போன்று உருவத்தை மாற்றிக் கொண்டு கங்கைக் கரைக்குப் போகலாம், நான் கங்கையில் இறங்கிக் குளிக்கின்றேன். சிறிது நேரத்தில் நீர் சுழலில் மாட்டிக் கொண்டது போல் நான் நடிக்கிறேன். நீ உடனே கரையிலிருந்து சத்தம் போடு.... என் கணவரை யாராவது காப்பாற்றுங்கள் என்று கூச்சல் போடு...... அத்தோடு இன்னொன்றும் சொல் யாராவது ஒரு புண்ணியாத்மா என் கணவரிடம் சென்று அவரது முடியைப் பிடித்துத் தூக்க வேண்டும். அப்படி ஒரு சாபம் எங்களுக்கு இருக்கிறது. புண்ணியாத்மா.... அதாவது எந்தப் பாவமும் இல்லாத ஒருவர் தான் அவரைக் காப்பாற்ற முடியும்!.

அப்படிப்பட்டவர்கள் யாராவது வெள்ளத்தில் குதித்து என் கணவரை சீக்கிரம் காப்பாற்றுங்கள் என்று சொல்லிக் கூச்சல் போடு.... பிறகு என்ன நடக்கிறது பார்க்கலாம்., என்றார் கடவுள்.

அவ்விதம் இருவரும் சாதாரண பக்தர்கள் உருவத்தில் கங்கைக் கரைக்கு வந்தார்கள். இறைவன் கங்கையில் இறங்கிக் குளிக்க ஆரம்பித்தார். சிறிது நேரத்தில் திட்டம் போட்டது போலவே சுழலில் மாட்டிக் கொண்டது போல் கத்தினார்.

கரையிலிருந்த விசாலாட்சி தேவி "ஐயோ என் கணவரைக் காப்பாற்றுங்களேன்!" என்று அலறினாள். பல பேர் ஓடிவந்தார்கள், உடனே இறைவி "பாவம் இல்லாத புண்ணியாத்மா ஒருவரால் தான் என் கணவன் காப்பாற்றப்பட வேண்டும் என்ற விதி இருக்கிறது, ஆதலால் புண்ணியாத்மா யாராவது அவரிடம் போய் அவர்து முடியைப் பிடித்து தூக்கினால் அவரைக் காப்பாற்றி விடலாம்!" என்று தெரிவித்தாள்.

**கெட்ட பழக்கங்கள் பிஞ்சிலே பழுக்க வைக்கும்.**

ஜகன்மாதா இப்படிக் கூறியதும் எல்லோரும் திகைத்துப் போய் நின்று விட்டார்கள். அங்கிருந்த ஒவ்வொருவருக்கும் அவரவர்கள் செய்த பாவமெல்லாம் ஒவ்வொன்றாக நினைவுக்கு வர ஆரம்பித்தது.

சரி இதற்கு நாம் தகுதி இல்லை என்று ஒவ்வொருவரும் ஒதுங்கிப் போக ஆரம்பித்தார்கள்.

இந்தச் சமயத்தில் யாரோ ஒருவன் வேகமாக ஓடி வந்தான். ஆற்றில் குதித்தான். நீரில் மூழ்கும் நிலையில் இருந்தவரிடம் சென்றான். அவரது முடியைப்பிடித்து தூக்கினான். அவரைக் காப்பாற்றிக் கரையில் கொண்டு வந்து சேர்த்தான்.

அப்படிக் காப்பாற்றிய அந்த ஆளை...... இவர்கள் இருவரும் தனியாக ஒரு மண்டபத்திற்கு அழைத்துச் சென்றார்கள்.

"நீயாரப்பா?" என்று எதுவும் தெரியாதவர்கள் போல் விசாரித்தார்கள்.

"நான் இந்த ஊர் அன்னசத்திரத்தில் வேலை செய்யும் ஒரு சமையற்காரன்" என்று அந்த ஆள் கூறினான். "நீ கங்கையில் குளிப்பதுண்டா?" என்று வினாவினார்கள். "நான் இந்த ஊரில் தான் இருக்கின்றேன். இருந்தாலும் தினமும் கங்கையில் குளிப்பதில்லை, எப்போதாவது ஒரு நாள் அங்கே குளிப்பேன்" என்றான் சமையற்காரன்.

"கங்கையில் மூழ்கி எழுந்தால் பாவம் தொலையும் என்று சொல்கிறார்கள். அப்படி இருக்கும் போது அங்கே இன்றைக்கு கங்கையில் குளித்துக் கொண்டிருந்தவர்கள் எல்லோரும் தங்களைப் புண்ணியாத்மாவாக நினைக்கவில்லை. கங்கையில் குளிக்காத நீ.... உன்னைப் புண்ணியாத்மாவாக நினைத்து என்னைக் காப்பாற்றுவதாக வந்தாயே...அது எப்படி?" என்று இறைவன் கேட்டார்.

அதற்கு அந்த ஆள் "கங்கையில் குதித்ததிற்குப் பிறகு தானே உங்களைக் காப்பாற்றப் போகிறோம்..... அப்படிக் குதிக்கும்போதே என் பாவமெல்லாம் போயிருக்குமே.... நான் புண்ணியாத்மாவாக ஆகியிருப்பேனே.... அதனால் தான் துணிந்து வந்து உங்களைக் காப்பாற்றினேன்" என்று பதில் கூறினான்.

பிறகு அவனுக்கு இறைவனும் இறைவியும் காட்சி கொடுத்தார்களாம். கங்கையில் குளித்துக் கொண்டிருப்பவர்களுக்கே தங்களுடைய பாவம் போகும் என்ற நம்பிக்கை பரிபூரணமாக இல்லை. குளிக்காத ஒருவனுக்கு அந்த நம்பிக்கை இருந்தது. அதனால்தான் அவன் காசி விஸ்வநாதரையும் விசாலாட்சியையும் தரிசிக்க முடிந்தது.

நாம் நம்பிக்கையுடன் வாழ வேண்டும். என்பதே இந்தக் கதையின் உள்ளடக்கமாகும். எனவே நம்பிக்கையோடு வாழ்க்கையை ஆரம்பிக்க வேண்டும்.

**சில மனிதர்கள் புரிந்துகொண்டு பெருவெற்றி அடையும் வண்ணம் பயன்படுத்தும் ஏதோ ஒன்று, ஒரு சக்தி, ஒரு வேகம், ஒரு விஞ்ஞான விதி என்ன பெயரிட்டு அழைத்தால் என்ன- இருக்கிறதா? இருக்கிறது. அதுதான் நம்பிக்கை. நீங்கள் விரும்பும் பொருளை அல்லது சாதனையைத் தெட்டத் தெளிவாக மனத்தில் ஒரு படமாக வரைந்து கொண்டு அதைச் செயலாக்க உங்கள் முழுச் சக்தியையும் பயன்படுத்துவீர்களேயானால், செயற்கரியவற்றைச் செய்து விடலாம்.**

*-நாளுக்கு ஒரு நற்சிந்தனை-*

**விடாமுயற்சியே வெற்றி தரும்.**

# திருமந்திரக் கதைகள் (தொடர்ச்சி...)

திரு கே.வி. குணசேகரம் அவர்கள்

## 3. கல்லாதாரைக் காணவும் கூடாது.

"கல்லாத மூடரைக் காணவும் ஆகாது
கல்லாத மூடர் சொல் கேட்கக் கடன் அன்று
க்ல்லாத மூடர்க்குக் கல்லாதார் நல்லராம்
கல்லாத மூடர் கருத்து அறியாரே"

சிவனைப் பற்றிக் கற்காதவர்கள் கற்றவர்களாக இருந்தாலும் அவர்கள் மூடர்களேயாவர். இவர்கள் கற்ற கல்வியால் எந்தப் பயனும் உண்டாகாது. இவர்கள் தாம் கற்ற கல்வியின்மூலம் பயனடையமாட்டார்கள். சிவ நினைவில்லாத கற்றவர்களைக் காண நல்லவர்கள் அஞ்சுவார்கள். அதனால் இவர்களைச் சிவனடியார்கள் மூடர்கள் என்றே அழைப்பர். இப்படியான மூடர்களைக் காணவும் கூடாது. இவர்கள் அறியாமையால் மூடப்பெற்றவர்கள். இவர்களது வாய் எவ்வேளையிலும் பயனில்லாத சொற்களைப் பேசிக் கேட்போரைத் துன்பப்படுத்தும். அதனால் நல்லவர்கள் இவர்களைக் கண்டதும் மறைந்து கொள்வர். இத்தகைய மூடர்களுக்குச் சிவ சிந்தனையில்லாத கல்வியைக் கற்றுப் பயனில்லாத சொற்களைப் பேசும் மூடரே நல்லவர்களாவர். "சிவனின் புனிதமான திருவடிகளை வணங்காதவர்கள் கற்கும் கல்வியால் எந்தப் பயனையும் பெறமாட்டார்கள்" என்பது வள்ளுவன் வாக்கு.

நாவலூரில் சிவஞானராசா என்றொரு பண்டிதர் இருந்தார். அவர் வேத உபநிடதங்களையும் சைவசித்தாந்த நூல்களையும் கற்றுத் தேர்ந்தவர். ஆனால் கடவுள்மீது நம்பிக்கையில்லாதவர். கடவுளைப் பற்றிய நூல்கள் யாவும் புனை கதைகள் என்று சொல்வார். "சிவன் துன்பப்பட்ட பன்றிக் குட்டிகளுக்குப் பால் கொடுத்தவர். அப்படியான சிவன் உணவில்லாமல் கஷ்டப்படும் மக்களுக்கும் உணவு கொடுக்கலாம்தானே" என்பார். அவர் எப்போதும் சிவநிந்தனை செய்வதால் நல்லவர்கள் எவரும் அவரைக் காண விரும்புவதில்லை. கோவில் உற்சவங்களிலும், ஊரில் நடைபெறும் விழாக்களிலும் உரை யாற்ற யாரும் அவரை அழைப்பதில்லை. அதனால் அவர் கோவிற் பிரமுகர்களுடனும் ஊர்ப்பெரியவர்களுடனும் தர்க்கத்தில் ஈடுபடுவார்.

சிவஞானராசா பெருந் தனவந்தனின் மகன். கோடிக்கணக்கான சொத்திற்கு வாரிசு. அவரது தந்தை அவருக்குத் திருமணம் செய்து வைக்க விரும்பினார். ஆனால் ஊரில் உள்ள எவரும் சிவஞானராசாவிற்கு பெண் கொடுக்க முன்வரவில்லை.

ஒருநாள் சிவஞானராசா தனது வீட்டில் கூலிவேலை செய்யும் கதிரவேலுவின் மகளை வீதியிற் கண்டு அவளைத் திருமணம் செய்வதற்கு ஆசைப்பட்டார். கதிரவேலுவின் மகள் கௌரி சிவபக்தை. சிவனின் விரதங்கள் அனைத்தையும் முறைப்படி அனுட்டிப்பவள்.

சிவஞானராசா கதிரவேலுவின் மகள் கௌரியைத் தான் திருமணம் செய்ய விரும்புவதாகத் தனது தந்தைக்குக் கூறி அவளைத் தனக்குத் திருமணம் செய்து வைக்குமாறு கூறினார். முதலில் அவர் மறுத்த போதும், பின் சிவஞானராசாவின் பிடிவாதத்தால் மனமிரங்கிக் கதிரவேலுவை அழைத்துத் தனது மகனின் விருப்பத்தைத் தெரிவித்தார். அதைக் கேட்டு அதிர்ச்சியடைந்த கதிரவேலு சில நிமிடங்களின் பின் சொன்னான்; "எனது மகள் சிவபக்தை; உங்கள் மகன் சிவ சிந்தனையில்லாதவன். அத்துடன் சிவனை நிந்திப்பவன். உங்கள் மகனது சிவ நிந்தனையைக் கேள்விப்படும் அவள் உங்கள் மகனைக் கொல்ல வேண்டுமென்று அடிக்கடி கூறுவாள். அப்படியானவள் நீங்கள் கூறுவதைக் கேட்டால் என்ன சொல்வாளோ?" என்றார்.

சிவஞானராசாவின் தகப்பன் எதுவும் கூறமுடியாமல் இருக்க, கதிரவேலு தன் வீட்டுக்குத் திரும்பிச் சென்றான். கதிரவேலுவைக் கண்ட அவர் மகள் சிவஞானராசாவின் வீட்டில் என்ன நடந்தது என்பதைக் கேட்டுத் தெரிந்து கொண்டாள். அமைதியாகத் தந்தை அருகில் வந்த கௌரி, "அப்பா சிவநிந்தனை செய்வோரைக் காண்பது பாவம். அவர் சொற் கேட்பது பழி. ஆகவே நீங்கள் இனிமேல் சிவநிந்தனை செய்பவரின் வீட்டுக்குச் செல்ல வேண்டாம். நாம் உணவில்லாது இருந்தாலும் பரவாயில்லை. ஆனால் சிவநிந்தனை செய்பவனின் வீட்டில் வேலை செய்து பணம் பெற்று உணவு சமைத்துண்பது பாவம். அதனால் இனிமேல் அங்கு செல்லாதீர்கள்" என்றாள். கதிரவேலு பெருமூச்சு விட்டார். அதன் பின் அவர் வேலைக்குச் செல்லவில்லை. சிவஞானராசாவின் தகப்பன் பலமுறை ஆள் அனுப்பிச் சொல்லியும் கதிரவேலு செல்லவில்லை. "சிவநிந்தனை செய்பவரிடம் வேலை செய்து வாழ்வதைவிட இறப்பது மேல்" என அவர் நினைத்தார்.





மேலே: ஒவ்வொரு பூரணை நாளிலும் ஆச்சிரம வளாகத்தில் நடைபெறும்
“திருவாசக முற்றோதல்” நிகழ்வு

கீழே: தியானம் பற்றிய விரிவுரை



# தமிழர் வரலாற்றில் "தமிழ்" எனும் சொல்

-வாகரைவாணன்-

தமிழ் என்னும் சொல் மிகவும் பழைமை வாய்ந்தது. மூவின (வல்லினம், மெல்லினம்,.இடையினம்) எழுத்துக்களாலான இச்சொல்லின் தொன்மையை கி.மு.3 ஆம் நூற்றாண்டளவில் தோற்றம் பெற்றதாகக் கொள்ளப்படும்.தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலில் இடம்பெற்றுள்ள தமிழென் கிளவியும் அதனோரற்றே (எழுத்ததிகாரம்) என்னும் சூத்திரமும் முக்காலச் சங்க இலக்கியங்களில் முதன்மை பெற்றுத் திகழும் புறநானூற்றின் (19) **"இமிழ் கடல் வளை இய ஈண்டு அகல் கிடக்கைத் தமிழ் தலை மயங்கிய தலையாலங்கானத்து..'** எனும் பாடல் அடியும் பிற்காலச் சங்க இலக்கியங்களில் ஒன்றான பரி பாடலின் (6) 'தமிழ் வையைத் தண்ணம் புனல்' எனும் பாடல் அடியும் எடுத்துக் காட்டும். இந்நூல்கள் போன்ற சிலப்பதிகாரம் மணிமேகலை (கி.பி.2ஆம் நூற்றாண்டு) எனும் இரட்டைக் காப்பியங்களில் காணப்படும் **'இமிழ் கடல் வரைப்பின் தமிழகம் அறியத் தமிழ் முழுதுஅறிந்த த்ன்மையன் ஆகி...** (அரங்கேற்றுக்காதை) **தண்டமிழ் வினைஞர் தம்மொடும் கூடி...** (சிறைக் கோட்டம், அறக்கோட்டம் ஆக்கிய காதை) எனும் கூற்றுக்களும் தமிழ் எனும் சொல்லின் பழைமைக்குத்தக்க சான்றாக அமையும்.

பழந்தமிழ் இலக்கிய்ங்களில் இடம்பெற்றுள்ள தமிழ் எனும் சொல் இலங்கையின் ஆதிவரலாற்றுக் காலத்தை சேர்ந்த (இற்றைக்கு 2200 ஆண்டுகளுக்குமுன்) பிராமிக் கல்வெட்டுக்களில் 'தமெட'என எழுதப்பட்டிருக்கின்றமையும் இக் கல்வெட்டுக்கள் வவுனியா, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் கண்டுபிடிக்கப்பட்டமையும் (இலங்கையில் தமிழர் - பக்கம்172) இங்கு குறிப்பிடத்தக்கவை. தமெட எனும் பிராகிருதச் சொல் பாளி, சிங்கள மொழிகளில் தமிள, தெமள என்று வழங்கும். எனினும் இம்மூன்று சொற்களும் (தமெட, தமிள, தெமள) ஆய்வறிஞர் ஐராவதம் மகாதேவனின் கருத்துப்படி (ராணி 14\05\2006) நான்காயிரம் ஆண்டுகாலப் பழைமை உடைய தமிழ் எனும் சொல்லின் திரிபென்பதில் ஐயமில்லை.

எனினும் இத்துணை பழைமையும் இளமையும் மிக்க தமிழ் என்னும் சொல் திராவிட என்னும் சமஸ்கிருத சொல்லில் இருந்து பிறந்ததென்பர் மொழியியல் அறிஞர் கால்டுவெல் (Caldwell) அவர்கள். 'A Comparative Grammer of the Dravdian Languages' என்னும் நூலை 1856 இல் எழுதி வெளியிட்ட இவ்வறிஞரின் மேற்படி கருத்தோடு உடன்படாத மொழியியல் அறிஞர்களில் ஒருவரான டாக்டர் மு. வரதராசன் தமிழ் என்னும் சொல்லிலிருந்தே திராவிட என்னும் சொல் தோன்றியதென்பார். இதனை அவர் தமிழ், தமிள, த்ரமிள, த்ரமிட, திரபிட,, திரவிட (தமிழ் இலக்கிய வரலாறு பக் -2) என வரிசைப்படுத்திக்காட்டுவார். மொழியியல் அறிஞர் மு.வ.வின் இந்தக் கருத்தினையே

டாக்டர் சி. பாலசுப்பிரமணியம், டாக்டர் ச. அகத்தியலிங்கம் ஆகியோரும் கொண்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

திராவிட என்னும் சமஸ்கிருதச் சொல்லில் இருந்தே தமிழ் என்னும் சொல் பிறந்ததென்று கால்டுவெல் கருத்துத் தெரிவித்திருப்பினும் பழைய மலையாள இலக்கியங்களில் Dramila என்னும் சொல்லும் பாளி மொழியில் Damilo என்னும் சொல்லும் காணப்படுகின்றன. (டாக்டர் ச.அகத்தியலிங்கத்தின் திராவிட மொழிகள் 1 பக் - 23) என்று அவர் கூறுவதைக் கூர்ந்து கவனிப்பவர்களுக்கு தமிழ் என்னும் சொல்லின் நிழல் அச்சொற்களில் (Dramila, Damilo) படிவதைக் காணாமல் இருக்க முடியாது.

இது போன்றே வரலாற்றறிஞர் எஸ்.கே சட்டர்ஜியின் (Chatterji) ஆய்வின் படி கி.மு.1500 அலலது 1000ஆம் ஆண்டளவில் (திராவிடமொழிகள் 1 பக் 24) கிரேக்கத்தில் வாழ்ந்த Aegean என்னும் இனத்தவர் Termilai அல்லது Tramili என்று அழைக்கப்பட்டதாகத் தெரிகின்றது. இச்சொல் பற்றி சட்டர்ஜி கருத்துரைக்கையில் இதற்கும் தமிழ், திராவிட என்னும் சொற்களுக்குமிடையே நெருக்கமான தொடர்பு உண்டு என்பர்.

எனினும் Origin and the spread of the Tamils எனும் வரலாற்று நூலினை எழுதிய இராமச்சந்திர தீட்சிதர் இச்சொல்லினை ஆய்ந்துரைக்கையில் இந்தியாவில் இருந்து மத்திய தரைக்கடல் நாடுகளில் ஒன்றான Asiaminorல் (இன்றைய துருக்கி) குடியேறிய தமிழர்களே Tramili என்று அறியப்பட்டதாகக் கூறுவார். (திராவிட மொழிகள் 1பக் -101) அறிஞரின் இக்கூற்றிலிருந்து தமிழ் என்னும் சொல்லின் திரிபாகவே Tramili என்னும் சொல்லைக் கொள்ள வேண்டியுள்ளது.

மேலும் தமிழகம் என்னும் சொல் Periplus Maris Erythrea என்னும் நூலில் (கி.பி.70) Tamirai என்னும் பியூத்திங்கர் அட்டவணையில் Damirice என்றும் வழங்கும் என்பார் முனைவர் பா. இறையரசன் (தமிழர் நாகரிக வரலாறு பக் 12) அவர்கள்.

இதே போன்று கிபி.140 இல் உலக வரைபடத்தை வரைந்த கிரேக்க நாட்டு அறிஞர் கிளாடியஸ் தாலமி((Cladius Ptolemy) தமது வரைபடத்தில் இந்திய துணைக்கண்டத்தைச் சுட்டிக்காட்டுகையில் தமிழகத்தை Damirike என்று குறிப்பிட்டுள்ளார் என்பார் அறிஞர் கால்டு வெல். (சு.கி. ஜெயகரனின் குமரி நில நீட்சி பக் -33) அறிஞர்களின் இக்கருத்துக்கள் தமிழ், தமிழர் பழைமையை நிரூபிப்பதற்கான மற்றுமிரு சான்றுகளாகும்.

இவ்வறிஞர்கள் போன்று ந.சி. கந்தையாபிள்ளை, மாதகல் கார்த்திகேய முதலியார், தாவீது அடிகளார் ஆகியோரும் தமிழ் என்னும் சொல்லின் தோற்றத்திற்கு வேறு சில காரணங்களை முன் வைப்பர். அறிஞர் சட்டர்ஜியின் "திராவிட என்னும் சொல் கி.பி. 1ஆம் நூற்றாண்டிலேயே தோற்றம்பெற்றது" என்னும் கருத்தை அறிஞருலகம் ஏற்குமாயின் திராவிட என்னும் சொல்லுக்குத் தமிழ் என்னும் சொல்லே தாய் என்பதே எத்தகைய தடையுமின்றி நிரூபிக்கப்பட்டு விடும். ஆய்வறிஞர்கள் முன்வைத்துள்ள மேற்படி ஆதாரங்கள் தமிழின் பழைமையை வெளிச்சம் போட்டுக் காட்டும் அதேவேளை தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழினத்தின் பழைமையையும் உறுதி செய்யும் சிறந்ததோர் அடையாளமாகவே தமிழ் விளங்கக் காணலாம்.

இதற்கு இன்னுமோர் எடுத்துக்காட்டாக இன்றைய பாகிஸ்தானில் வாழும் மூன்று லட்சம் மக்களால் (இவர்களைப் பூர்வீகக் குடிகள் என்பர்)பேசப்படும் பிராகூய் என்னும்

மொழியைக் கொள்ளலாம். இம் மொழியை தமிழின் கிளைமொழி எனக் கூறுவார் முனைவர் பா. இறையரசன். (தமிழர் நாகரிக வரலாறு பார்க்குக)

புராதன இந்தியாவில் செறிந்து வாழ்ந்த பூர்வீகத் தமிழர்களே குறிப்பிட்ட ஒரு காலகட்டத்தில் மத்திய தரைக்கடல் நாடுகளில் குடியேறி வாழ்ந்தமைக்கு அங்கு (சைபிரஸ், சிரியா, பலஸ்தீனம்)கண்டெடுக்கப்பட்ட சூலங்கள் பித்தளையிலான சேவல் போன்ற பொருட்கள், ஊர்களுக்குச் சூட்டப்பட்ட தமிழ்ப் பெயர்கள் என்பன மறுக்க முடியாத சான்றுகளாக அமையும். இந்தச் சான்றுக்கள் தமிழினதும் தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட தமிழினத்தினதும் பழைமையை உறுதி செய்ய வல்லன என்று சொல்லவும் வேண்டுமா?

*நன்றி: தினக்குரல்*

## மற்றவர்களுக்கு நன்மை தரும் செயல்களைச் செய்



உன்னிடம் இருக்கும் உன் சாஸ்திர அறிவை மற்றவர்களுக்கும் கொடு. அதனால் பலருக்கும் நன்மை ஏற்படும். உடம்பு இருக்கும்வரை ஏதாவது வேலை செய்யாமல் இருக்கமுடியாது. எனவே மற்றவர்களுக்கு நன்மை தரும் செயல்களைச் செய்வது நல்லது. மற்றவர்களுக்குப் பயன்படாத- மக்களுக்கு நன்மை தராத - ஆன்மீக சாதனையாலோ, அனுபூதியாலோ என்ன நன்மை இருக்கிறது?

மதம், இனம் போன்ற வேற்றுமை எதுவும் இல்லாமல் எல்லோரிடமும் எல்லா நிலையிலும் நன்மையை விரும்பும் எண்ணம் (உணர்வு) உன் உள்ளத்தில் எழுமானால், நீ ஆன்மீக வாழ்க்கையில் முன்னேறிக் கொண்டிருக்கிறாய் என்பது நிச்சயம்.

இரவும் பகலும் ஒருமுகப்பட்ட மனதுடன் பிரம்மத்தை தியானம் செய். அந்த நிலையிலிருந்து கீழே வரும்போது மற்றவர்களின் நன்மைக்காக ஏதாவது நல்ல காரியங்களில் ஈடுபடு. அல்லது, "உலகத்தில் உள்ள எல்லா உயிர்களுக்கும் நன்மை ஏற்படட்டும்; எல்லோருடைய மனமும் பிரம்மத்தை நோக்கிச் செல்லட்டும்" என்று மீண்டும் மீண்டும் பிரார்த்தனை (சிந்தனை) செய். அதுபோன்று தொடர்ந்து நினைப்பதால் உலகிற்கு நன்மை உண்டாகும். நல்ல நினைவானாலும் நல்ல செயலானாலும் நிச்சயமாகப் பலனைத் தரும்.

உன்னுடைய சிந்தனையின் வேகம் அமெரிக்காவில் உள்ள ஒருவருடைய உணர்வைக்கூட தட்டியெழுப்ப முடியும்.

*-ஸ்ரீ ராமகிருஸ்ண விஜயம்-*

**சுகமும் துக்கமும் இரட்டைக் குழந்தைகள்.**

# சைவத் திருக்கோயிற் கிரியைநெறி

(தொடர்ச்சி...)

உயர்திரு: கா. கைலாசநாதக் குருக்கள் அவர்கள்

## சதாசிவமூர்த்தி:

இந்நூலில் இலிங்கோற்பவர் முதலிய திருவுருவங்களைப் பற்றிக் கூறுவதற்கு முன் சதாசிவமூர்த்தியைப் பற்றிச் சிறிது கூறுவது பொருந்தும். இத்திருவுருவம் பெருந் தத்துவக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது. சைவர்கள் இம்மூர்த்தியை மிகவும் உயரிய நிலையில் வைத்துத் தியானிப்பர். சுத்த சைவ தத்துவங்களை நிலைக்களனாகக் கொண்டது சதாசிவ வடிவம். சதாசிவம் உயரிய பரம்பொருள். இதற்குக் கட்புலனாகும் உருவம் இல்லை. இந்திரியங்களாற் கிரகிக்க முடியாதது; நுண்ணியது; ஒளிபரப்பி எங்கணும் வியாபித்து நிற்பது; உலகில் உள்ள பொருள்கள் அனைத்துக்கும் இதுவே பிறப்பிடம். எல்லாம் ஈற்றில் இதனுள்ளேயே ஒடுங்கும். ஆகமங்கள்தாமும் இதன் முழு இயல்பும் விளங்கிக்கொள்ள முடியாத பெருமையினது. மக்களால் எளிதில் கிரகிக்கப் படாதது. மக்களின் நலங்கருதி இதை நிறுவும்படியும், இதன் புறத்தோற்றம் இவ்வாறு அமையலாம் என்றும் மூல நூல்களிற் கூறப்பட்டுள்ளது. மகாசதாசிவ மூர்த்திக்கு இருபத்தைந்து தலைகளும், ஐம்பது கைகளும் உள்ளன. எவ்வாறாயினும் உயரியதும் நுண்ணியதுமான இயல்புகள் வாய்ந்தமையால் அவ்வுருவத்தைச் சித்தரித்தல் அரிதாக உள்ளதுடன் இதை நிறுவி வழிபடும் முறையினையும் எங்கும் காணமுடியாதிருக்கிறது.

## இலிங்கோற்பவ மூர்த்தி:

ஒருகால் பிரமனும், மாலும் பெரும் அகந்தையுற்றனர். படைத்தல், காத்தல் ஆகிய இரு தொழில்களையும் முறையே ஆற்றிவரும் இவர்க்கு இறுமாப்பு வருவது இயல்பே. "தங்கள் இருவருள்ளும் பெரியவன் யாவன்?" என்னும் வினாவிற்கு விடை காண அவர்களிருவரும் முனைந்தனர். தங்களிருவரைக் காட்டிலும் பெரிதும் உயர்ந்தவன் ஒருவன் ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவாறு உளன் எனும் எண்ணமே இவர்களுக்கு எழவில்லை. பிரமனும் திருமாலும் இதைக் குறித்து வாதித்துத் தம்முட் கலகம் விளைவிக்கத் தொடங்கியதும், அவ்விருவர்கள் நடுவே பேரொளிப் பிழம்பு ஒன்று தோன்றியது. அதன் அடியும் முடியும் கண்ணுக்கெட்டாதவாறு எல்லைமீறி அகன்று மறைந்து நின்றது. அதை ஆராயத் தொடங்கியவர்கள் அதன் அடிமுடி காணாதவர்களாய்த் திகைத்துத் தளர்வுற்றனர். இவை இரண்டுள் ஒன்றைக் கண்டு முதலிற் திரும்புகின்றவரே மற்றவரைக் காட்டிலும் சிறந்தவர் எனப் பணயம் வைத்துப் புறப்பட்டனர். நான்முகன் அன்ன வடிவுகொண்டு உச்சியைத் தேடி உயரப் பறந்தான். திருமால் அடியினைக் காணும் அவாவுடன் பன்றி வடிவந்தாங்கி. அவனியை அகழ்ந்து அகழ்ந்து கொண்டே கீழே சென்றான். அடியும் முடியும் காணாதவாறு- பெரும் உருவாய் அவ்வெளி விளங்குவதைக் கண்டு தொடர்ந்து தேட ஆற்றலற்றவராய்த் திரும்பி வந்தனர். அவர்கள் கர்வம் அடங்கிற்று. சிவபிரான் ஒளிவடிவு நீங்கி அவர்கள் கண்ணுக்குப் புலனாகி அவர்க்குத் திருவருள் நல்கினார். புராணங்களில் அடிக்கடி விளக்கிக் கூறப்பட்டுள்ள இச்சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டது இலிங்கோற்பவ மூர்த்தியின் அமைப்பு.

உண்மையற்றதைப் பேச வேண்டாம்.

இலிங்கோற்பவ உருவம் மிக முக்கியமானது. எல்லாச் சிவாலயங்களிலும் இத்திருவுருவம் நிறுவப்பட்டிருப்பதைக் காண்கிறோம். கருவறையின் மேற்குப் பக்கச் சுவரில் புறத்தே அமைக்கப்பட்ட மாடத்தில் இவ்விக்கிரகம் நிறுவப்படும். உட்பிரகாரத்தின் வழியே கருவறையை வலம்வரும் வேளை, கோவிலுக்கு மேற்கே (பிற்பக்கத்தில்) வந்ததும் இலிங்கோற்பவ மூர்த்தியைத் தரிசிக்கலாம்.

இலிங்கோற்பவரின் இருமருங்கிலும், பிரம்மாவையும் விஷ்ணுவையும் கூப்பிய கரங்களுடன் நிறுவுதல் கூறப்பட்டுளதெனினும் ஒரு சில இடங்களில் மட்டுமே இந்நிலை விளங்கக் காண்கிறோம். முதலில் இலிங்கத்தை உருவாக்கியபின் அதை நான்கு பாகங்களாகப் பிரித்து மேலே ஒரு பங்கும் கீழே ஒரு பங்கும் நீக்கி நடுவில் இரு பங்குகளை எடுத்துக்கொள்ளுதல் வேண்டும். இலிங்கத்தின் முற்பக்கத்தில் இவ்விரு பங்குகள் உள்ளடங்கக் கூடியவாறு அண்ட வடிவினதாகக் கீறி வகுத்தல் வேண்டும். இதன் மேற்பக்கமும், கீழ்ப்பக்கமும் பிறைபோன்று வளைந்திருத்தல் வேண்டும். இதன் நடுவே சிவனின் உருவம் அமையும். இத்திருவுருவத்திற்கு நான்கு கரங்கள் உண்டு. நெற்றியிலிருந்து முழந்தாள் வரையும் உள்ள பகுதி மட்டுமே வெளியில் தெரியும். முன்னர் விளங்கும் இரு கரங்களும் அபய கரமாகவும், வரத கரமாகவும் அமைவன. குண்டலம், ஆரம், கேயூரம், முத்துமாலை ஆகிய அணிகலன்கள் திருவுருவத்தை அலங்கரிப்பதற்குரியன. விக்கிரகத்தில் மூர்த்தியின் வலது பக்கத்தில் மேலே பறக்கும் நிலையில் அன்னமும், இடது பக்கத்தில் கீழே நிலத்துள் அகழ்ந்து தோண்டும் பாவனையில் பன்றியும் சித்தரிக்கப்பெறுவன.

## சந்திரசேகர மூர்த்தி:

எம்பிரான் பிறைசூடி நிற்கும் நிலையைச் சிறப்பாக உணர்த்த இவ்வுருவம் உருவாகின்றது. பிறை இறைவன் சூடிய பல பொருள்களுள் தலைசிறந்தது.

சிவபெருமானிடத்திற் கோபங்கொண்ட தாருகாவன ரிஷிகள் அபிசாரவேள்வி நிகழ்த்திப் பல பொருட்களைத் தோற்றுவித்தனர். பாம்புகள், மான், அபஸ்மார புருஷன் (முயலகன்), மழு, மாடு, புலி, சிங்கம் முதலிய பொருள்கள் வரிசையாக வேள்வித் தீயில் தோன்றின. தோன்றிய இப் பொருள்களை எல்லாம் ஒவ்வொன்றாகச் சிவனைத் தாக்கி அழிவு விளைவிக்கும் வண்ணம் ஏவினர். இறைவன், இவர்கள் இவ்வாறு ஏவிய மழுவையும், மானையும் ஏற்று இரு கரங்களிலும் அழகு பொலியத் தாங்கி நின்றார். பாம்புகள் இவர்க்கு அணிகலன்களாயின. அபஸ்மார புருஷனைக் காலின்கீழ்க் கிடத்தி அவன் மேலமர்ந்தார். யானையையுஞ் சிங்கத்தையுங் கொன்று அவற்றின் தோல்களையுரித்து ஆடைகளாய்ப் புனைந்தார். மண்டையோடும் பிறைச் சந்திரனுந் தலையணிகளாயின. சுப்பிரபேத ஆகமம் இவ்வரலாறு கூறும்.

கந்தபுராணம் இறைவன் பிறைசூடிய சம்பவத்தை இன்னொரு வகையாகக் கூறுகிறது. தக்கனின் இருபத்தேழு புதல்வியரை விவாகஞ் செய்த சந்திரன் உரோகிணியிடம் தனியன்பு செலுத்தினான். தக்கன் தன் புதல்வியர் அனைவரிடமும் பாகுபாடின்றி ஒரே தன்மைத்தாய்ப் பழகும்படி பலமுறை பணித்தும் சந்திரன் செவிசாய்த்திலன். இதனால் அவன் மிகவும் வெகுண்டு, தேய்ந்து அழிந்து போகும்படி சந்திரனைச் சபித்தனன். தேய்ந்து மறைந்து

கொண்டே வருஞ் சந்திரன் தன் பதினைந்து கலைகளையுமிழந்து தனிக் கலையுடன் ஓடோடியுஞ் சென்று இறைவனிடம் சரண் புகுந்தான். அரனும் அவனுக்கு அபயமளித்து, தன் தலையில் புகலிடமளித்துத் தம் தலையணியாகக் கொண்டான். மேலும், தேய்ந்தொழிய தக்கன் இட்ட சாபத்தைத் திரும்பத் திரும்பத் தேய்ந்து வளரும்படி சிறிது வேறுபடுத்திச் சாபவிமோசனம் கொடுத்தார். இறைவன் இவ்வொற்றைக் கலைப் பிறையைச் சூடிய சம்பவத்தை நாம் தரிசிக்குந்தோறும் நினைவுறுத்துவது பிறைசூடி விளங்கும் இவ்வுருவம்.

(தொடரும்...

## நடக்க மறந்த மக்கள்

கிராமத் தலைவர் ஒருவர் ஒரு விபத்தில் கால்களை இழந்து விட்டார். அவர் கொம்புகளின் துணைகொண்டு நடக்கத் தொடங்கினார். பழக்கத்தினால், வேகமாக நடக்க– ஏன்? நடனம்கூட ஆடி மக்களை மகிழ்விக்க அவரால் முடிந்தது. கிராமக் குழந்தைகளையும் கால்கள் இருந்தும் கொம்பு கொண்டு நடக்கவே பழக்கினார். அந்தக் கிராமத்தின் அடையாளச் சின்னமாகவே அது விளங்கியது. இப்படியே நான்கு தலைமுறைகள் சென்றன.

மக்கள் கால்களால் நடப்பதை அறியாமலே போய்விட்டனர். கிராமப் பள்ளிகளில் இது ஒரு பாடமாகவே கற்பிக்கப்பட்டது. அக் கொம்புகளைத் தயாரிப்பவர் தரமானவற்றைத் தயாரித்துப் புகழ்பெற்றார். மேலும் கொம்புகளை நவீனப்படுத்தும் முறையில் ஈடுபடலானார்.

வேற்று நாட்டு இளைஞன் ஒருவன் அக்கிராமத்தினரைச் சந்தித்து, “கடவுள் கால்களைக் கொடுத்திருந்தும் ஏன் எல்லோரும் இப்படி நடக்கிறீர்கள்?” என்று கேட்டான். அவர்கள் இக்கேள்வியால் வியந்தார்கள். “இவன் தன்னைப் புத்திசாலியாக நினைக்கிறானோ?” என்று கருதி, “எப்படி நடப்பது என்று காட்டுங்கள்?” என்றார்கள்.

இளைஞன் அடுத்த ஞாயிறு காலையில் நாற்சந்தியில் செய்துகாட்டப்படும் என்றான். குறித்த நேரத்தில் எல்லோரும் கூடினர். முதலில் கொம்புகளின் துணையோடு நடந்துகாட்டிய இளைஞன் கொம்புகள் இல்லாமல் நடந்துகாட்ட நினைத்தான். மற்ற அனைவரும் அவன் கால்களால் நடக்கவே முடியாது என்று அவநம்பிக்கை கொண்டிருந்தார்கள்.

நடுவில் வந்தவுடன் அவன் அக்கொம்புகளை கீழே போட்டான். மௌனம் நிலவியது. ஓர் அடி எடுத்து வைத்த இளைஞன் குப்புற விழுந்தான். பிறரது அவநம்பிக்கை அவனையும் தொற்றிக்கொண்டது. இதைப் பார்த்தவுடன் எல்லோருக்கும் கொம்புகள் இல்லாமல் நடக்கவே முடியாது என்ற நம்பிக்கை உறுதிப்பட்டுவிட்டது.

–ஸ்ரீ இராம கிருஷ்ண விஜயம்–

**இன்று என்பது நம்பிக்கையின் வசம்.**

# நுண்ணிய நூல்பல கற்பினும் உண்மை அறிவே மிகும்

**திரு சிவ. சண்முகவடிவேல் அவர்கள்**

"பிள்ளைகளே! உங்களுக்கு ஒன்று உரைப்பேன். உள்ளத்தை ஒருவழிப்படுத்தி உற்றுக் கேளுங்கள்" என்ற தொடக்க உரையோடும் ஆசிரியர் பாடத்தை ஆரம்பித்தார். மாணவர்கள் திரையில் வரைந்த சித்திரம் போல மௌனமாக இருந்து அதனைச் செவிமடுத்துக் கேட்டார்கள்.

எவராக இருந்தாலும் புன்னெறி அதனில் செல்லும் போக்கினை விலக்கி மேலாம் நன்னெறி ஒழுகச்செய்யும் அறிவு நூல்களைக் கற்பது இயல்பு. மண் மாண் புனை பாவை அல்லாதிருக்க நுண் மாண் நுழை புலத்தானாக நூல் பல கற்றவனானாலும் பேதைப்படுக்கும் ஊழ் இருப்பின் இயல்பான அறிவே மேலோங்கி முன் நிற்கும்.

அந்த உண்மையை உணர்த்தும் எல்லைக்கோடாக வான் புகழ் கொண்ட வள்ளுவனார் வகுத்த முன்நூற்று எழுபத்து மூன்றாவது திருக்குறள் விளங்குகின்றது.

அத்திருக்குறள் இது.

நுண்ணிய நூல் பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை யறிவே மிகும் (373)

"நுண்ணிய நூல்பல - எனத்தொடங்கும் திருக்குறளுக்குப் பொருத்தமான ஒரு கதை கந்த புராணத்தில் காணப்படுகின்றது. அந்தக் கதையை இப்பொழுது உங்களுக்கு எடுத்து இயம்புவேன். திருக்குறளின் கருத்தையும் கதையின் கருவூலத்தையும் ஒப்பிட்டு நீங்களே உண்மையை ஓர்ந்து கொள்ளுங்கள்" என்று கூறிய ஆசிரியர் கந்த புராணக்காதையைக் கட்டுரைக்கின்றார்.

புராணங்கள் பதினெட்டு உண்டு. அந்த உண்மையை "சூதன் ஒலிமாலையென்றே கலிக்கோவை சொல்லே" என மூன்றாம் திருமுறைத் திருப்பாசுர வாக்கினால் அறியலாகும். அந்தப் பதினெண் புராணங்களை வியாசர் என்னும் முனிவர் இயற்றினார், அதில் பத்துப் புராணங்கள் சிவபெருமானுடைய அதிஅற்புதங்களை விதந்து ஓதும். அதே வியாச முனிவர் ஒன்றாக இருந்த வேதங்களை நான்காக வகுத்தார். அதனால் வேதவியாசர் என்னும் ஒரு நற்பெயரையும் நாட்டினார். வேதங்கள் நான்கு என்பதனைத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாருடைய நமச்சிவாயத் திருப்பதிகத்தில் நன்கு காணலாம்.

வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே

வியாச முனிவர் இவ்வாறு புராணங்களைத் தொகுத்தும் வேதங்களை வகுத்தும் நுண்ணிய நூல் பல செப்பனிட்டு மண்ணவர்களில் விண்ணவர் போல் விளங்கினார், வியாசரிடத்தில் முனிவர்கள் கூட்டமாகச் சென்றார்கள். அவரை வணங்கிய பின் தங்களுடைய ஐயப்பாட்டைத் தெரிவித்தார்கள்.

"முனிவரே! புராணங்களையும், வேதங்களையும் கரைகண்ட தாங்கள் மேலான பரம்பொருளை எங்களுக்குச் சொல்ல வேண்டும்" என்று வினாவினார்கள். வியாசர், "காசி விஸ்வநாதர் சந்நிதியில் இந்த உண்மையை உங்களுக்கு உரைப்பேன்" என்று முனிவர்களை அழைத்துச் சென்றார்.

காசி விஸ்வநாதப் பெருமானுடைய சந்நிதியில் நின்று வியாசர் கைகளை உயர்த்தினார்.

"முக்காலமும் உண்மை, நாராயணக் கடவுள் மேலான பரம்பொருள்" என்று சாற்றினார் வியாசபகவான். (ஸத்யம் ஸத்யம் புனஸ் ஸத்யம் நதைவம் கேசவாத் பரம்)

திருநந்திதேவர் வியாசர் மீது கோபம் கொண்டார். வியாச முனிவரைப் பார்த்து "உயர்த்திய கை உயரவே நிற்கக் கடவது" என்று சாபமிட்டருளினார்,

இந்தச் சம்பவம் கந்தபுராணக்கடவுள் வாழ்த்தில் காணப்படுவது ஒன்றாகும். "மாயையான் மெய்யறு சூள்புகல் வியாத னீட்டிய கையடு நந்திதன் கழல்கள் போற்றுவாம்" என்று கச்சியப்ப சிவாச்சாரியார் நந்திதேவரைச் சிரம் தாழ்த்திக் கரம் கூப்பித் துதிக்கின்றார். அப்பாடல் இதுவாகும்.

ஐயிரு புராணநூ லமலற் கோதியுஞ்
செய்யபன் மறைகளுள் தெரிந்து மாயையான்
மெய்யறு சூள்புகல் வியாத னீட்டிய
கையடு நந்திதன் கழல்கள் போற்றுவாம்.

கடவுள்வாழ் - 19

கச்சியப்ப சிவாச்சாரியார் இந்நிகழ்வினைப் பின்னரும் ஆயிரத்து ஐந்நூறு பாடல்களுக்கு அப்பாலும் மீண்டும் நினைவூட்டுவது சிந்தனைக்குரியது. உற்பத்தி காண்டம் வழிநடைப் படலம் நாலாவது பாடலில் உறுதிப்படுத்துகின்றார்.

"படம் பொருந்திய அனந்தன் என்னும் சர்ப்ப சயனத்தில் அறிதுயில் அமர்பவர் விட்டுமூர்த்தி பாற்கடலில் பாம்பணையில் பள்ளி கொள்ளும் பரந்தாமனுக்கும் மேலான கடவுள் சிவபெருமான். இந்த நூற்றுணிபை மானுடர் மயக்கம் தெளியும் பொருட்டு வியாச முனிவர் தூக்கிய கையே சான்று பகரும்" காசிப் பதியைக் கந்தவேள் பெம்மான் கண்களிப்பக் கண்டு தரிசித்தார்.

பைய ராவின்மேற் கண்டுயில்
பண்ணவன் தனக்குந்
தையல் பாதிய னேபரம்
பொருளெனுந் தன்மை

மையன் மானுட ருணர்ந்திட
மறைமுனி யெடுத்த
கைய தேயுரைத் திட்டதோர்
காசியைக் கண்டான்

முன்னையது நந்திதேவரை வணங்கியமை. பின்னையது மானுடர் மயக்கம் மாற்றியமை.

ஊழிற் பெருவலிக்குக் கற்றதனாலாய அறிவையும் அழிக்கும் ஆற்றலைக் கண்டோம். அவ்வலி இன்னார் இனியார் என்று இல்லாமல் எல்லோரையும் ஆட்டிப்படைக்கும் ஆற்றல் மிக்கது என்பதற்கு சான்று காட்டும் செய்யுள் இது.

முதிர்தரு தவமுடை முனிவ ராயினும்
பொதுவறு திருவொடு பொலிவ ராயினும்
மதியின ராயினும் வலிய ராயினும்
விதியினை யாவரே வெல்லுநீ மையார் (மார்க்கண். படலம்)

மாணவர்களே சிந்தியுங்கள் என்ற சிந்தனையோடும் ஆசிரியர் பாடத்தை நிறைவு செய்தார்.

## இலையுதிரும் மரத்திற்கு ஆயுள் கூடுமா?

எளிதில் இலையுதிரும் மரங்கள் பொதுவாக நீடித்த ஆயுள் கொண்டிருக்கும் என்று கூறுவதுண்டு. பொதுவாக மரங்களுக்கு ஆயுள் நீண்டது என்பதுவே நிஜம். மரங்களுக்கு நீண்டநாள் வாழும் திறனுண்டு. சில மரங்களின் இலைகள் அடிக்கடி உதிர்ந்துபோவதும் உண்டு. இவற்றின் இலைகள் உதிர்வதையும் ஆயுளையும் மட்டும் கவனிப்பதால் இவ்விதமான ஓர் விதி நம்மிடையே கூறப்பட்டு வந்தது. இலைகளில் திடீரென வயோதிபம் பாதிப்பதனால் அவை உதிர்ந்து போகின்றன. இலைக்கு வயோதிபம் வந்தாலும் அதில் அடங்கியிருக்கும் போஷக அம்சங்கள் தாய்மரத்திற்குத் திரும்பச் செல்கின்றன. இதோடு இலையின் காம்புக்கு அடிபாகம் இருக்கும் கோசங்களுக்கும் வேறு கோசங்களுக்கும் உள்ள தொடர்பு துண்டிக்கப்படுகிறது. சிலநேரம் இவ்விலைகள் மரத்திலிருந்து உதிராமல் சிறிது நாட்கள்கூட மரத்திலேயே நிற்கவும் செய்யும். வயோதிபம் பாதிக்குமுன் உணவு சென்றுகொண்டிருந்த உறுதியான சுவர்களுள்ள கோசங்கள் இலையையும் மரத்தையும் இணைத்து நிறுத்துவதால் இவ்வாறு நிற்கின்றன.



ஆனால் பழைய இலையின் பாரத்தையோ காற்றின் சக்தியையோ எதிர்கொள்ள இயலாத கோசங்களிலிருந்து இலைகள் உதிர்கின்றன.

இப்படி இலை உதிரும் மரங்கள் நீடித்த நாள் உயிருடன் இருக்கும் என்பதில் எந்த ஆதாரமும் இல்லை, மரங்களுக்குப் பொதுவாக ஆயுள் நீண்டது என்பதே நிஜம்.

*-ஓலைச்சுவடி-*

**பிறர் உனக்கு உதவியதை எப்போதும் மறக்காதே.**

# ஆலய தரிசனமும் எமது கண்ணும்

**திரு நா. நல்லதம்பி அவர்கள்**

இறைவனைத் தரிசிக்க விரும்பும் அடியார்கள் நித்தலும் அவனுடைய கோயிலுக்குச் சென்று அவனுடைய உருவத்தைக் கண்ணாரக் கண்டு வழிபடுகின்றார்கள். தரிசனம் என்றால் நேரே காணுதல் ஆகும்.



கோயிலில் நமது ஞானேந்திரியங்கள் ஐந்துக்கும் உரிய அனுபவப் பொருட்கள் பல உண்டு. கண்ணால் காண்பதற்கு இறைவனுடைய திருவுருவமும், அதன் அலங்காரமும், கேட்பதற்கு அடியார்கள் பாடும் பாடல்களும், நுகர்வதற்கு தூபம், சந்தன மணம் முதலியனவும் சுவைப்பதற்குப் பஞ்சாமிர்தம் முதலிய பிரசாதங்களும், மெய்யுணர்வுக்கு மெய்யடியார்கள் கூட்டமும் அனுபவப் பொருட்களாக இருக்கின்றன. இவற்றுள் இறைவனைத் தரிசனஞ் செய்வதில் கண்ணால் காணும் காட்சி அனுபவமே மிகவும் தலையானது. ஏனைய புலன்களின் இன்பம் கோயில் தரிசனம் இன்றியே பெறமுடியும். ஒலிபெருக்கிப் பயன்பாடுள்ள இக்காலத்தில் இறைவன் புகழ்ப்பாடல்களை, வேத மந்திரங்களை தூரத்திலிருந்தே கேட்டு அனுபவிக்கலாம். பிரசாதங்களையும் பெறலாம். ஆயினும் ஆலய தரிசனம் எனும் போது இறைவனைக் கண்டு தொழுவது தலையாயது.

ஐம்பொறிகளில் கண்ணிற் சிறந்த உறுப்பில்லை என்பார்கள். திருவள்ளுவரும்

கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை

என்று பாடியிருக்கின்றமை காணலாம். காணாத கண் முதலிய பொறிகள் போல எண்குணத்தையுடைய இறைவனது தாளை வணங்காத தலை பயனற்றது என்பது இதன் பொருள்.

ஆகவே பொறிகளில் சிறந்ததான கண், ஆலயதரிசனத்தில் தலையானதாக, இன்றியமையாததாக விளங்குகின்றது.

ஓர் உருவும் இல்லாத இறைவன், ஆன்மாக்கள் வணங்கி அருள் பெறவேண்டும் என்னும் பெருங்கருணையினால் மெய்ஞ்ஞானிகளுடைய மனக்கண்ணிலே ஓர் உருவத்தைத் தோற்றுவிக்கின்றான். அந்தத் தோற்றங்களுக்குக் கலைவடிவங் கொடுத்து சிலைகளாகவும், படங்களாகவும் உருவாக்கஞ் செய்கின்றனர். அவை கோயில்களில் பிரதிட்டை செய்யப்பெற்றுள்ளன. அவற்றை நாம் கண்டு தொழுவதே ஆலயதரிசனமாகிறது. தனக்கெனக் குணமும் குறியுமில்லாத இறைவன், முக்குணம் உள்ள ஆன்மாக்களின் ஈடேற்றத்துக்காக எண்குணமுடையவனாகக் காட்சிதருகின்றான். அவனை நாம் கண்ணாரக் கண்டு தொழுகின்றோம்.

சோதிவடிவான இறைவனுக்கு உருவங்கொடுத்து நமது ஊனக்கண்ணாலே கண்டு தொழுகின்றோம். படிப்படியாகப் பக்தி நிலையில் உயர்ந்து அவ்வுருவத்தை அகக்கண்ணால் பார்க்கும் பக்குவம் பெறுகின்றோம். அறியாமையில் சிக்குண்ட சூரபன்மன் தனது அகந்தை நீங்கி நின்ற பொழுது முருகப்பெருமான் தனது திருவுருவைக் காட்டியருளுகின்றான். அப்பொழுது

ஆயிரங்கோடி காமர் அழகெல்லாந் திரண்டொன்றாகி
மேயின எனினும் செவ்வேள் விமலமாஞ் சரணந்தன்னில்
தூயநல் லெழிலுக்காற்றா தென்றிடின், இனைய தொல்லோன்
மாயிரு வடிவிற் கெல்லாம் உவமையார் வகுக்க வல்லார்,

என்று பிரமித்து நின்றான் எனக் கந்தபுராணம் கூறுகின்றது. இவ்வாறு சூரபன்மன் திருமுருகனைக் காண்பதற்கு அவனது கண்களே காரணமாயின.

அப்பர் சுவாமிகள் நடராஜப்பெருமானது கோலத்தைக் கண்டு பக்தி செய்து தொழுது பரவசநிலையில் என்ன சொல்லுகிறார் என்று பார்ப்போம்.

“குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமுண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல் மேனியிற் பால் வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே”

என்று இறைவனது திருநடனக் கோலத்தைக் கண்டு பரவசமடைந்த போது, இப்படியான பெறுதற்கரிய பேறுபெறும் வாய்ப்பு இருந்தால் இந்த உலகில் மனிதப் பிறவியும் விரும்பத்தக்கதே என்கிறார்.

மாணிக்கவாசகரோ ஊனக் கண்ணோடு ஞானக் கண்ணும் பக்திமையாற் பெற்றிருக்க வேண்டும் என்கிறார்.

“வெள்ளந் தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர் பெருமானே”

“உள்ளந்தான் நின்று உச்சியளவும் நெஞ்சாய் உருகாதால்
உடம்பெல்லாம் கண்ணாய் அண்ணா
வெள்ளந்தான் பாயாதால், நெஞ்சம் கல்ஆம்,
கண்இணையும் மரம்ஆம் தீவினையினேற்கே”

என்கிறார்.

இதோகண்ணின் அருமை பற்றிக் கம்பர் சொல்வதைப் பார்ப்போம். சீதாபிராட்டியின் அழகைக் காண்பதற்கு இமையாநாட்டம்(இமைக்காத கண்கள்) தேவர்களுக்கு இருப்பதுபோலத் தமக்கு இல்லையே என்று ஒரு பகுதியாரும், இப்போதிருக்கும் இமையாநாட்டம் இரண்டும் போதாது என்று தேவர்களும் குறைபட்டுக் கொண்டனர் என்கிறார் கம்பர்.

உமையாள் ஒக்கும் மங்கையர் உச்சிக் கரம் வைக்கும்
கமையாள் மேனி கண்டவர் காட்சிக் கரைகாணார்
இமையாநாட்டம் பெற்றிலம் என்றார், இருகண்ணால்
அமையாது என்றார் சுந்தர வானத்தவர் எல்லாம்.

என இப்போது இருக்கும் கண்கள் போதாது எனக் காட்டுகின்றார்.

அருணகிரி நாதர், திருச்செங்கோட்டு முருகப்பெருமானது அழகைக் கண்ணாரக் கண்டவர், அப்போது திருமுருகனின் அழகைத் தரிசிப்பதற்கு எனது இரு கண்கள் போதாது. எனக்கு நாலாயிரங் கண்கள் படைத்திலனே அந்த நான்முகனே என்கிறார்!

மாலோன் மருகனை மன்று ஆடி மைந்தனை வானவர்க்கு
மேலான தேவனை மெய்ஞ்ஞான தெய்வத்தை மேதினியில்
சேலார் வயற் பொழிற் செங்கோடனைச் சென்று கண்டு தொழ
நாலாயிரம் கண் படைத்திலனே அந்த நான்முகனே

(கந்தர் அலங்காரம் 90)

திருமாலுக்கு மருமகன், சிவபெருமானுக்கு மகன், தேவர்களுக்கு மேலான தேவன், மெய்யறிவே வடிவான தெய்வம், திருச்செங்கோட்டிலுள்ள முருகன். ஆகவே திருச்செங் கோட்டுக்குச் சென்று கண்டு தொழுவதற்கு நாலாயிரம் கண் வேண்டுமென்கிறார். இவ்வளவு பெருமைகளையுடையவன் செங்கோட்டு முருகன், பேரழகுடையவன், அவனைக் கண்டு தரிசிப்பதற்கு இரண்டு கண் போதாது என்கிறார்.

எனவே கண் பிரதான உறுப்பு என்பதும் ஆலயதரிசனத்துக்கு கண் இன்றியமையாத பொருள் என்பதும் பக்தி பூர்வமான வழிபாட்டுக்கு கண் முக்கியமானது எனபதும் உணர்ந்து கொள்வோமாக.




வருந்துவதைவிட உறுதி கொள்வது நல்லது.



சிறப்புப் பிரதி வழங்கும் நிகழ்வு



# "காளமேகம்" பாடல்கள்



சந்தச் செறிவும் - பொருட் செறிவும் கொண்டு உயரிய தெய்வீகச் சிந்தனையோடு செவிக்கு விருந்தும்- உள்ளத்திற்கு நிறைவும் தரும் இனிமை ததும்பும் பாடல்களே காளமேகம் பாடல்களாகும். நேரான பார்வையிலே ஒரு பொருளும், மறைமுகமாக இன்னொரு பொருளும் கொண்டு சிலேடையும்- நையாண்டியும் கலந்த பாடல்களாக காளமேகம் பாடல்கள் வெளித்தெரிந்தபோதும், பல பாடல்கள் பக்திச் சுவையின் உச்சத்தைத் தொட்டு நிற்கும் பாடல்களாக காலங்கடந்தும் இன்றுவரை நிலைத்திருக்கிறது. அவற்றுள் சிலவற்றை நாமும் படித்துச் சுவைப்போமே!

## கலைமகள் துதி:

வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணி பூண்டு
வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாள் - வெள்ளை
அரியா சனத்தி லரசரோ டென்னைச்
சரியா சனம் வைத்த தாய்

வெள்ளைக் கலை உடுத்து, வெள்ளைப் பணி பூண்டு, வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாள் - வெள்ளை நிற ஆடையை உடுத்தியவளாகவும், வெள்ளை அணிகளைப் பூண்டவளாகவும், வெள்ளைத் தாமரைப் பூவினிலே வீற்றிருப்பவளான கலைவாணியே, வெள்ளை அரியாசனத்தில் - மாசற்ற சிம்மாசனத்திலே, அரசரோடு என்னைச் சரியாசனம் வைத்த தாய்- அரசனாகிய இத் திருமலைராயனோடு என்னையும் சமநிலையில் வீற்றிருக்கும் படியாக அருளிச்செய்த தாயானவள். "அவள் மலரடியைப் போற்றுகிறேன்" என்பது பொருள்.

தம்மை மதித்து உபசரியாத மன்னவன் நாணுமாறு அவனுக்குச் சரியாகத் தன்னை அமர வைத்த கலைவாணியைத் துதிக்கிறார். கலைவாணியின் அருள் தமக்கு இருக்கிறதென்ற உண்மையை அரசனும் அந்த அவையினரும் அறியப் புலப்படுத்தியதுமாம். தன் மகன் துயருறக் காணப் பொறுக்காத தாய்மை உள்ளத்தினையே கலைவாணியும் அவ்விடத்தே மேற்கொண்டாளாகையால் அவளையும் "தாய்" என்றார்.

"அரசரோடு சரியாசனம் வைத்த" என்றதனால், பிற புலவர்களைக் காட்டிலும் தம்மை உயர்த்தி வைத்த சிறப்பையும் வியந்து நன்றி பாராட்டுகிறார் எனலாம்.

## தம் கவித்திறம் கூறியது:

அதிமதுரக் கவிராயர் தம்முடைய கவித்திறத்தை எடுத்துக் கூறிப் பெருமை பாராட்டிக் கொண்டார். தம்முடைய கவித்திறம் அதைவிட அதிகம் எனக் கவிராயர் அப்போது அதிமதுரத்திற்கு எதிரிட்டுக் கூறியது இந்தச் செய்யுள்.

இம்மெ ன்னு முன்னே எழுநூறும் எண்ணூறும்
அம்மெ ன்றால் ஆயிரம் பாட்டாகாதோ - சும்மா
இருந்தா லிருந்தே னெழுந்தேனே யாமாயின்
பெருங்காள மேகம் பிளாய்!

இம் என்னும் முன்னே எழுநூறும் எண்ணூறும்- இம் என்று சொல்வதற்கு முன்பே எழுநூறு எண்ணூறு பாடல்களும், "அம்" என்றால் ஆயிரம் பாட்டாகாதோ- "அம்" என்று அடுத்துச் சொன்னால் அதற்குள் ஆயிரம் பாட்டுக்களும் அடங்கிவிடாதோ! பிளாய்- சிறுவனே! (அதிமதுரத்தை நோக்கிக் கூறியது) சும்மா இருந்தால் இருந்தேன்- சும்மா இருந்தேனாயின் இருப்பேன், எழுந்தேனே யாமாயின் பெரும் காளமேகம்- சும்மா இருந்தாலும் இருப்பேன், பாடத் தொடங்கினேனானால் பெரிய கார்மேகமாகப் பொழிவேன். (என்று அறிவாயாக)

"பிளாய்" என்ற சொல்லின் பிரயோகத்தைக் கவனிக்கவும். தன் கவி வன்மைக்கு எதிரே அதிமதுரம் "சிறுகுழந்தை" என்று கூறியதுமாம்.

## நீராவாய் நெருப்பாவாய்:

"சிவபெருமானைப் பற்றிய ஒரு செய்யுள்; அதனிடத்தே நீறாவாய், நெருப்பாவாய், கூறாவாய், கொளுத்துவாய், நட்டமாவாய், நஞ்சாவாய் என்று அவனைப்பற்றிச் சொல்ல வேண்டும். பாடுக பார்ப்போம்" என்றார் ஒரு புலவர்.

அப்படியே அரை விநாடியில் அவ்வாறு சொற்கள் பொருள் நயத்துடன் அமைந்து வரப்பாடி, முடிவிலே, "அப்பெருமான் அத்தகையவனே எனினும், அன்பருக்குக் கருணை பாலிக்கும் கருணையாளனும் ஆவான்" என்று சொல்லும் வகையினாலே, அவன் தன்னைக் காக்குமாறும் வேண்டுகிறார் கவிஞர்.

"நீறாவாய் நெற்றி நெருப்பாவாய் அங்கமிரு
கூறாவாய் மேனி கொளுத்துவாய் - மாறாத
நட்டமா வாய்சோறு நஞ்சாவாய் நாயேனை
இட்டமாய்க் காப்பா யினி.

நெற்றி நீறு ஆவாய்- நெற்றியிடத்தே திருநீற்றினை உடையை ஆவாய், அங்கம் நெருப்பு ஆவாய்- திருமேனி நெருப்பு மயமாக அமைந்திருப்பாய், மேனி இரு கூறாவாய்- நின் திருமேனி இரு கூறாக அமைந்திருப்பாய், கொளுத்துவாய்- எரி நெருப்பாகவே விளங்குவாய், மாறாத நட்டம் ஆவாய்- இடையீடில்லாத நடனத்தையும் உடையை ஆவாய். (அங்ஙனம் நீ வெம்மையுடையவனாய் விளங்குபவன் ஆயினும்) இனி நாயேனை இட்டமாய்க் காப்பாய்- இனி, நாயினேன்னையும் விருப்புடன் காத்தருள்வாயாக.

## குடத்திலே கங்கை அடங்கும்:

குடம் ஒரு சிறு பாத்திரம். கங்கை நதியோ பிரவாகமாகப் பெருகி வருவது. "அது எப்படிச் சின்னஞ் சிறிய குடத்திலே அடங்க முடியும்?" "குடத்திலே கங்கை அடங்கும்" என்ற ஈற்றடி வருமாறு ஒரு வெண்பாப் பாடும்" என்று ஒருவர் சொல்கிறார். காளமேகம், புலவர் கொடுத்த சமிக்ஞையை எண்ணிப் பார்த்தார். சொற் சாதுரியத்தினாலே அவர் கேட்டபடியே பாடுகின்றார்.

**தானம் என்பது பிரதிபலன் கருதாத கொடை.**

விண்ணுக் கடங்காமல் வெற்புக் கடங்காமல்
மண்ணுக் கடங்காமல் வந்தாலும்- பெண்ணை
இடத்திலே வைத்த இறைவா் சடாம
குடத்திலே கங்கை யடங்கும்

கங்கை- ஆகாய கங்கையானது, விண்ணுக்கு அடங்காமல்- வானத்திடத்தே அடங்காமலும், வெற்புக்கு அடங்காமல்- இமயமலையிலிடத்தே அடங்காமலும், மண்ணுக்கு அடங்காமல்- நோக்கிப் பாய்ந்து வந்து கொண்டிருக்கும் பூமியிடத்தே அடங்காமலும், வந்தாலும்- பெருகி வந்த போதிலும், பெண்ணை இடத்திலே வைத்த இறைவா் சடா மகுடத்திலே- பெண்ணாகிய உமாதேவியைத் தம் இடப்பாகத்திலே வைத்துக் கொண்டவராக இருக்கும் தலைவரான சிவபெருமானின் சடாமகுடத்திலே, அடங்கும்- அடங்கி நிற்பதாகும்.

பகீரதனின் தவத்தினாலே பெருகிப் பாய்ந்து வந்த கங்கையின் வேகத்தைத் தம் செஞ்சடை முடியிலே தரித்து அடக்கி உலகைக் காத்த பரமனின் திருவிளையாடலைக் குறிப்பதாகச் செய்யுள் அமைந்துள்ளது. கொடுத்த சமிக்ஞை வெண்பாவின் ஈற்றடியிலே வந்தது.

## ஆறுதலை உண்டு:

"சிவன், முருகன், பிள்ளையாா், திருமால், சிவனடியாா் இவா்களுக்குத் தனித்தனியே ஆறுதலை உண்டென்று சொற்சுவை விளங்க ஒரு வெண்பாவிலே அமைத்துப் பாடுக" என்றாா் ஒரு புலவா்.

சங்கரற்கு மாறுதலை சண்முகற்கு மாறுதலை
ஐங்கரற்கு மாறுதலை யானதோ- சங்கைப்
பிடித்தோா்க்கு மாறுதலை பித்தா நின்பாதம்
படித்தோா்க்கு மாறுதலை பாா்.

சங்கரற்கும் ஆறுதலை- சிவபெருமானுக்குத் தலையிலே கங்கையென்னும் ஆறு உரியதாகும், சண்முகற்கும் ஆறுதலை- முருகப்பெருமானுக்கும் ஆறு தலைகள் உளவாகும், ஐங்கரற்கு மாறுதலை- ஐங்கரனாகிய பிள்ளையாருக்கு உடலோடு மாறுகொண்ட யானைத் தலையாக விளங்கும், சங்கைப் பிடித்தோா்க்கும் ஆறுதலை- சங்கினை ஏந்தியவரான திருமாலுக்கும் பிரளய வெள்ளம் உறைவிடமாயிருக்கும், பித்தா- பித்தனாகிய பரமனே, நின் பாதம் படித்தோா்க்கும் ஆறுதலை பாா்- நின் திருவடிகளைப் போற்றியவரான என்போலும் சிவனடியாருக்கும் ஆறுதல் உண்டாகியிருக்கிறது. இதனைக் காண்பாயாக.

சிவபெருமானின் கருணை தனக்கு இருப்பதனால் தம்மை அவா்களால் வெற்றிகொள்ள இயலாது எனவும் குறிப்பாக எச்சரிக்கிறாா்.

**தெய்வமே! என்னைத் தங்கள் கருவி ஆக்கிக் கொள்ளுங்கள். பிறா் என்னைச் சமாதானப்படுத்த வேண்டும் என்று எதிா்பாா்க்காமல் நான் பிறரைச் சமாதானப்படுத்துவேனாக. பிறா் என்னைப் புரிந்து கொள்ள வேண்டும் என்று நினைக்காமல், நான் பிறரைப் புரிந்து கொள்ள முயல்வேனாக. பிறா் என்னை நேசிக்கட்டும் என்று காத்திராமல், நான் அவா்களை நேசிப்பேனாக.**

-நாளுக்கு ஓா் நற்சிந்தனை-

**இரகசியம் என்பது நட்புக்குாிய கற்பு.**

# யார் எமது பகைவர்கள்?

செல்வி பா. வேலுப்பிள்ளை அவர்கள்

நாம் இருக்கும் இந்த உடம்பு உயிர் வாழும் இடம் இந்த வீட்டில் நாம் மட்டும் இருக்கவில்லை. மெய்,வாய், கண், மூக்கு செவி என ஐந்து உறுப்புகளும் வாழ்கின்றன. இவை ஐம் பொறிகள் எனப்படும். நாம் நல்லன செய்யமுனையும் போது ஐம்பொறிகளும் அதைச்செய்யவிடாது தடுக்கின்றன. பேயாட்டம் ஆடுகின்றன. இந்தப் பகைவர்களை வெல்ல வேண்டுமாயின் எமது மனம் கட்டுப்பாடாக அடிமையாக வேண்டும் .

"ஓர ஒட்டார் ஒன்றை உன்னஒட்டார்
மலரிட்டுனதாள் சேரவோட்டார் ஐவர் செய்வதென் யான்"

என அருணகிரிநாதர் சொல்கிறார்.

உடம்பு தானாக செயற்படுவதில்லை மனம் (உயிர்) என்ற ஒன்று உள்ளிருந்து இயக்க இந்த ஐம்பொறிகளாலுமே இயங்குகின்றன. இந்த ஐம்பொறிகள் புலன்வழி செல்ல விடாது (ஐம்புலன்கள் - பார்த்தல், கேட்டல், முகர்தல், பேசுதல், உணர்தல் என ஐந்துமாம்) அடக்கியாள வேண்டுமென ஞானிகள், யோகிகள் சொல்கிறார்கள். நாம் மனதை அடக்குவோமாயின் பொறிகள் புலன்வழி செல்லாது அடங்கிவிடும். மனதை அலையவிட்டோமோ அவைகள் பகைவர்களாக மாறிவிடும்.

மீகாமன் (கப்பலோட்டி) இயந்திரம், சுக்கான், நங்கூரம் இல்லாவிடின் காற்றடிக்கும் திசையில் அங்கும் இங்குமலைவதோடு கப்பல் கவிழ்ந்துவிடும். அது போன்றதே நம்மனமும் இந்திரியங்கள் என்ற காற்றால் அடிபட்டு திசைமாறும். "புலன் வழி செல்லாதே மனமே" என்று சொன்னாலும் அவை நம்மை பலவந்தமாக இழுக்கின்றன. ஐம்பொறிகளும் இன்பத்தை, சந்தோஷத்தை அநுபவிப்பதாயின்

மெய் - பஞ்சணையில் சுகமாக படுத்துறங்கல், மக்கள் மெய் தீண்டல், ஜில்லென்று வீசும் காற்று

வாய் - இனிய சொற்களைப் பேசுதல்,பாடல்களைப் பாடுதல்

கண் - நல்ல நல்ல ஓவியங்கள், இயற்கைக் காட்சிகள் காணல், சுவாமி தரிசனம் காணல்

மூக்கு- மலர்களின் நறுமணம், கர்ப்பூரம் சாம்பிராணி போன்ற வாசனைகளை முகர்தல்

செவி - மழலைச் சொற்கள் கேட்டல் இனிமையான கீதங்களைக் கேட்டல்

இவ்வழி பொறிபுலன்கள் செல்லவேண்டும். பொறிகள் வழி செல்லாது புலனடக்கம் வேண்டும். மாறாக செயற்படுவோமாயின் எண்ணங்கள், பார்வைகள் செயல்கள் வார்த்தைகள் சிதறிப் போகும், கேடுகள் வந்தணையும்.

ஒரு ஆண்டி சொல்கிறார் கேட்போம்

"முருகா! நீ ஒரு வீடு கட்டி என்னைக் குடியிருக்க விட்டாய், ஆனால் இந்த வீடு எனக்குச் சொந்தமில்லை இந்திரியங்களாகிய பகைவர்களுக்கே சொந்தம்.

**பொய்யான வார்த்தைகளைப் பேசாதீர்கள்.**



சிறப்புப்பிரதி பெற்றுக்கொண்ட சிலர்



எட்டடிக் குச்சுக்குள்ளே முருகா எத்தனை நாள் இருப்பேன் - ஒரு மச்சுவீடு
கட்டித்தாரும் திருத்தணிகை முருகா"
எட்டடிக் குச்சு வீடு - எண்சாண் உடம்பு
மச்சு வீடு - முத்தி, மோஷம்

உயிர் இந்த உடம்பாகிய வீட்டில் இருக்கும் போதே ஐம்பொறிகளையும் கட்டுப்படுத்தி சிந்தையில் இறைவனை இருத்தினால் முத்தியடையலாம் எனச் சமயங்கள் கூறுகின்றன. மனதையடக்கி இன்பம் பெறுவதே முத்திநிலை, அ·.து இராப்பகல் அற்ற இடம், நினைப்பு மறப்பு இல்லை, ஒளி இருள் இல்லை.

"பொறிவாயில் ஐந்தவித்தான் - பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடு வாழ்வார்" -திருக்குறள்

நீடு வாழ்தல் பிறவாப் பெரும்பேறாகிய முத்தி

ஆகவே உயிர்களாகிய நாம் வாழும் நாட்களில் ஐம்பொறிகளாகிய பகைவரை வென்றால் மோட்ஷராஜ்யத்தை அடையலாம்.

"ஐவர்க்கிடம் பெறக் காலிரண்டு ஒட்டி அதில் இரண்டு கைவைத்த வீடுகுலையு முன்னே வந்து காத்தருள்வாய்" என அருணகிரிநாதர் கூறுகிறார்.




**துன்பகாலத்தில் மகிழ்ச்சியாய் இருப்பவனே வீரன்.**

# 2012ஆம் ஆண்டு வாசகர் போட்டிக்கான விடைகள்

| | மாதம் | பக்கம் |
|---|---|---|
| 1. மனம், வாக்கு, காயம் | ஆவணி | 11 |
| 2. புட்பகாந்தி | புரட்டாதி | 02 |
| 3. திருக்கோவில்கள் | தை | 45 |
| 4. திருநாவுக்கரசு நாயனார் | மாசி | 09 |
| 5. 1940ஆம் ஆண்டு | புரட்டாதி | 16 |
| 6. புனிதவதியார் | ஐப்பசி | 22 |
| 7. சமயம் | மாசி | 29 |
| 8. நெய்யாடியப்பர் | ஐப்பசி | 60 |
| 9. கல்லெறிந்த நாயனார் | ஆவணி | 35 |
| 10. உயிர் | மாசி | 55 |
| 11. ஆசை | ஆவணி | 25 |
| 12. அமரர் வா. கிருஸ்ணபிள்ளை | பங்குனி சுடர் தரும் | |
| 13. சுப்பிரமணிய பாரதியார் | ஆவணி | 05 |
| 14. அநுபவ முதிர்ச்சியையும், யாக்கை நிலையாமையும், திருத்தொண்டின் அருமை பெருமையையும் | ஆடி | 16 |
| 15. பொய்யா மொழியார் | தை | 03 |
| 16. இல்லறம் | பங்குனி | 46 |
| 17. திருநீறு அணிதல் | ஆடி | 56 |
| 18. ஐப்பேசன்- அதிகார நந்தி | பங்குனி | 61 |
| 19. சாவுக்கு ஒப்பாகும் | ஆனி | 13 |
| 20. நாவிலிருந்து | சித்திரை | 12 |
| 21. விரதம் | ஆனி | 52 |
| 22. பிரம்மா, விஷ்னு, உருத்திரன் | சித்திரை | 47 |
| 23. ஹேமாத்திரி | ஆனி | 53 |
| 24. ஆதிசங்கரர் | வைகாசி | 53 |
| 25. கார்த்திகை, விசாகம் | வைகாசி | 04 |

ஞானம் வளர நல்ல ஆசான் வேண்டும்.




**1ஆம் பரிசு** — **சி. மைதிலி**
குச்சம் ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.

**2ஆம் பரிசு** — **திருமதி கலையரசி லோகேஸ்வரன்**
யாமா வளவு,
காசிப்பிள்ளையார் கோவிலடி,
தெல்லிப்பளை.

**3ஆம் பரிசு** — **திருமதி தயாநிதி பாலசுந்தரம்**
$^{48}/_{13}$, 1ம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

## ஆறுதல் பரிசு பெறுவோர் விபரம்

**1. திருமதி ரு. பகீதரன்**
குருநாத சுவாமி கோவில்,
தெல்லிப்பளை.

**2. திருமதி ஏகாம்பரம் ஜெயராணி**
இல.2, புறூடி ஒழுங்கை,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

**3. மகேந்திரராசா சாந்தினிதேவி**
ஊரெழு கிழக்கு,
சுன்னாகம்.

**4. திருமதி அம்பிகாபதி தருமதுரை**
புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
சுன்னாகம்.

**5. அபிஷாஜினி குகராஜன்**
உடுவில்மேற்கு,
சுன்னாகம்.

**6. தி. சுகர்ணலதா**
மாதா கோவிலடி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

**7. திருமதி ந. சந்திரசேகரம்**
சிறுப்பிட்டி தெற்கு,
செல்லப்பிள்ளையார் கோவிலடி,
நீர்வேலி.

**8. செல்வி தசாகினி தவேந்திரன்**
460 (862) ஆஸ்பத்திரி வீதி,
சுண்டிக்குளம்,
யாழ்ப்பாணம்.

**9. வத்சன் சத்தியவாணி**
07- பயணியர் வீதி,
மட்டக்களப்பு.

**10. சி. சிவனருள் கௌரி**
அந்தணத்திடல்,
கரவெட்டி.


**வாசகர் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்கள்**
**மாசிமாத ஞானச்சுடர் வெளியீட்டின்போது (22.02.2013) அன்று வழங்கப்படும்.**

**உன் கண்கள்தான் உன் உடலிற்கு விளக்கு.**

தமிழகத் திருக்கோயில் வரிசை:

# ஸ்ரீ காளஹஸ்தி
# அருள்மிகு காளத்தீஸ்வரர் திருக்கோவில்

-வல்வையூர் அப்பாண்ணா-



## முன்னுரை:

தேவாதி தேவனான ஈஸ்வரன் ஜோதிர்லிங்க வடிவில் பன்னிரண்டு திருத்தலங்களிலும், ஐம்பூத வடிவில் ஐந்து திருத்தலங்களிலும் விசேடமாக எழுந்தருளியுள்ளான். இறைவன் பஞ்சலிங்கமாகத் தோன்றிய ஐந்து திருத்தலங்களுள் ஒன்றே "காளஹஸ்தி" ஆகும். இது தென்கயிலாயம் எனப்படுகிறது. "கயிலாயத்து உச்சியுள்ளான் காளத்தியான்" எனத் தேவாரம் பாடியருளிய திருநாவுக்கரசு சுவாமிகளாலும், "கயிலை பாதி காளத்தி பாதி" அந்தாதி பாடிய நக்கீர தேவரினாலும் நாம் காளத்தியின் பெருமையினை அறிகிறோம். அறிவற்ற உயிர்களாகிய சிலந்தி, பாம்பு, யானை ஆகிய மூன்று உயிர்களும் தங்கள் உயர் பக்தியினால் முத்திபெற்ற ஸ்தலம் இது. இந்த வில்வ வனத்தில் குடிகொண்டுள்ள காளத்திநாதன், பிறவிக் கடலில் கரைகாணாமல் துன்புற்று- அஞ்ஞான இருளில் அகப்பட்டு வருந்தும் நம்மைக் கரையேற்றும் அருளாளன் ஆவான்.

## அமைவிடம்:

காளஹஸ்தி தொண்டை மண்டல ஸ்தலம். தமிழ்நாடு எல்லைக்கு வெளியே- ஆந்திர எல்லையின் உள்ளே திருப்பதியிலிருந்து 40 கி.மீ தூரத்திலும், சென்னையிலிருந்து 110 கி.மீ தூரத்திலும் உள்ளது. சென்னை, காஞ்சீபுரம், வேலூர் போன்ற பெரு நகரங்களிலிருந்தும், ஏனைய நகரங்களிலிருந்தும் அடிக்கடி திருக்காளஹஸ்தி நோக்கி பேருந்துகள் புறப்படுகின்றன. "சுவர்ணமுகி" எனப்படும் "பொன்முகலி" ஆற்றின் கரையில் அமைந்துள்ளது இத்திருக்கோயில். கோயிலை அண்மிக்கும் பேருந்துகள் பொன்முகலி ஆற்றின் மேலாகப் போடப்பட்டிருக்கும் நீண்ட பாலத்தைக் கடந்தே செல்ல வேண்டும்.

## பொது:

பஞ்சபூத ஸ்தலங்களுள் இது வாயுஸ்தலம். இறைவனுக்குக் கண்ணினை அப்பிய திண்ணன் கண்ணப்பனாக முத்திபெற்ற அற்புதத் தலம் இது. வாயிலே பொன்முகலி ஆற்று நீரும், கொண்டையிலே காட்டுப்பூவும், ஒரு கையிலே மென்று ருசிபார்த்த இறைச்சியும்,

அற்ப ஆசை கோடி தவத்தைக் கெடுக்கும்.

மறுகையில் வில்லும் அம்பும் கொண்டு காளத்தி மலைமீதேறி, குடுமித்தேவரைத் தரிசித்து முத்திபெற்ற வரலாறு அனைவரும் அறிந்தது. அதனால் வரலாற்றினை விடுத்து கோயில் அழகினைப் பார்த்து வருவோம்.... வாருங்கள்.

தேவார மூவராலும் பாடப்பெற்ற ஸ்தலம். முசுகுந்தன், சிவகோசரியார், பரத்வாஜ மகரிஷி போன்றவர்கள் க்ாளத்திநாதரை வழிபட்டு முத்திப்பேறு அடைந்தனர். இது "கைலாசகிரி" எனச் சிறப்புப் பெயர் கொண்டு அழைக்கப்படுகிறது. ஸ்ரீ காளஹஸ்தி= ஸ்ரீ + காளம் + அத்தி = சிலந்தி + பாம்பு + யானை மூன்று ஜீவன்களும் காளத்திநாதனை வழிபட்டு முத்திப்பேறடைந்தன. இத்தலம் ராகு + கேது தோச நிவர்த்தி ஷேத்திரமாகையால் இங்கே நவக்கிரகங்கள் கிடையாது.

## காலி கோபுரம்:

ஏற்கனவே நான் குறிப்பிட்ட பொன்முகலி ஆற்றுப் பாலத்தினை அண்மிக்க முன்னரே நீண்டு நெடிதுயர்ந்து நிற்கும் "காலி கோபுரம்" வெள்ளை நிறத்தில் தூரத்திலேயே கண்ணுக்குத் தெரிகிறது. பாலம் தாண்டி கோபுரத்தை நெருங்க நெருங்க கோபுரத்தின் பிரம்மாண்டம் நமக்குப் புரிகிறது. கி.பி. 1516இல் கிருஸ்ணராஜ தேவராஜரினால் கட்டப்பட்ட ஏழு நிலைகள் கொண்ட இக்கோபுரம், கோயில் வளாகத்திற்கு உள்ளமையாது சற்று தள்ளி வெளியேயே உள்ளது. காலி கோபுரம் தாண்டி உள்ளே போனால்....

## பிக்ஷசாலா கோபுரம்:

கோயில் வளாகத்தின் வடகிழக்கு மூலையை நெருக்கியபடி (சரியாகக் கிழக்கில் இல்லை) ஐந்து நிலைகளுடன் கூடிய, ஆனால் 11 கலசம் கொண்ட பிஷசாலா கோபுரம் வருகிறது. இதுவே கோயிலின் பிரதான வாசலாகும். இந்த பிஷசாலா கோபுரமும் ஏனைய சிறு கோபுரங்களும் கி.பி 11ஆம் நூற்றாண்டில் குலோத்துங்க சோழ மன்னனால் கட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது. இக் கோபுரத்தின் இரு மருங்கும் துவார கணபதி, தண்டபாணி . சந்நிதிகள் இடம்மாறிக் காணப்படுகின்றன.

இந்தக் கோபுரத்தினூடாக நாம் உள்ளே சென்றால், மக்கள் அனைவரும் வழமைபோல (வலமாக) இல்லாமல் இடஞ்சுழியாகக் கோயிலை வலம் வருவதைப் பார்த்து நாமும் அவர்கள் பின்னே அப்பிரதட்சணமாக பிரகார வலத்தினை ஆரம்பிக்கிறோம். உண்மையில் நாம் இப்போது நிற்பது வெளிப்பிரகாரத்தின் வடக்குச் சுற்று. அப்பிரதட்சண வலம் ஏன் என்பதற்கு சரியான காரணம் புரியவில்லையாயினும் வடக்கு மற்றும் மேற்கு வெளிப்பிரகாரம் முழுவதும் சந்நிதிகளும், மண்டபங்களும், லிங்க மூர்த்தங்களுமாக நாம் தரிசிக்க வேண்டியவை நிறையவே இருந்தமை ஒரு காரணமாக இருக்கலாம்.

## பாலஞானாம்பிகை கோபுரம்:

காசி விஸ்வநாதர் சந்நிதி தரிசனத்தை முடித்து பால ஞானாம்பிகை கோபுரம் வரை நடக்கிறோம். பாலஞானாம்பிகை கோபுரம் மூன்று நிலைகளுடன் அளவான உயரத்துடன் காணப்படுகிறது. கோபுரத்தின் வலப்பக்கமாக வள்ளி- தெய்வானை சமேத சுப்பிரமணியர் வேல் தாங்கிய திருக்கோலத்தில் உள்ளார். இடது பக்கம் மேற்கு நோக்கியபடி

நின்ற திருக்கோலத்தில் பாலஞானாம்பிகையும், அருகே ஒரு சிவலிங்கமும் காணப்படுகிறது. அடுத்துள்ள பஞ்சமுக விநாயகர் சந்நிதியுடன் ஆங்காங்கே இன்னும் பல சிவலிங்கங்களும் உள்ளன.

**பாதாள விநாயகர்:**

"சிவய்ய கோபுரம்" என அழைக்கப்படுகின்ற வடக்குக் கோபுர வாசலில் நிற்கிறோம். இந்த வழியாகத்தான் வழமையாக சுவாமி புறப்பாடு நிகழ்வதாகக் கூறினார்கள். இன்னும் சற்று முன்னே நகர்ந்ததும் "பாதாள விநாயகர்" சந்நிதி வருகிறது. பாதாள விநாயகர் இந்த ஸ்தலத்தின் முக்கிய மூர்த்தம். காளஹஷ்திக்கு வருபவர்கள் பாதாள விநாயகரைக் கண்டுகொள்ளாமற் போவதேயில்லை. நிலமட்டத்திலிருந்து 35 அடி ஆழத்தில், குறுகலான 20 படிகள் வழியாகக் கீழிறங்கிச் சென்று பாதாள விநாயகரைத் தரிசனம் செய்கிறோம். பொன்முகலி ஆற்றின் மட்டமும், பாதாள விநாயகர் அமர்ந்துள்ள பீடத்தின் மட்டமும் சமமாக உள்ளதாக விபரம் தெரிந்தவர்கள் கூறக் கேட்டோம்.

அருகே இரண்டு மண்டபங்கள். ஒன்று "சிவராத்திரி மண்டபம்". மற்றது "இரண்டு கால் மண்டபம்". இந்த இரண்டு கால் மண்டபம் அனைவரினதும் பேசு பொருளாக இருந்தது. வெளிப் பார்வைக்கு இரண்டு கால்களில் மண்டபம் நிற்பதுபோலத் தெரிந்தாலும் மற்ற இரண்டு கால்களும் உட்புறச் சுவரோடு சேர்த்துக் கட்டப்பட்டிருப்பது கூர்மையாக அவதானித்தாற் புரிகிறது.

**சொக்கப்பானை:**

இப்போது பிரகாரம் மேற்குச் சுற்றில் திரும்புகிறது. ஏறக்குறைய நடுப்பகுதியில் உள்மதிலை ஒட்டியபடி (நமது வலது கைப்புறமாக) ஒரு சிறிய மண்டபம். மண்டபத்தினுள்ளே உள்ள சற்றே பெரிய அளவிலான நந்தி உள் மதிலில் உள்ள சதுர வடிவான சாளரத்தினூடாக கருவறையிலுள்ள குடுமித் தேவரைப் பார்த்தபடி உள்ளார். இந்த இடத்தருகே மண் நிரப்பப்பட்ட சதுரமான பகுதி தென்படுகிறது. கார்த்திகைத் தீபத்தன்று இங்குதான் "சொக்கப்பானை" கொளுத்தப்படுகிறது. வருடாவருடம் இதே இடத்தில் சொக்கப்பானை கொழுத்தப்படுவதால் அந்த மண் தரைப்பகுதி கருமையடைந்து காணப்படுகிறது. "சொக்கப்பானை" எனும் சொல் எங்கள் ஊர்களில் மட்டுமே பேசப்படும் ஒரு சொல் என எண்ணியிருந்த எனக்கு அட்சரம் பிசகாமல் "சொக்கப்பானை" என அவர்கள் உச்சரித்தமை ஆச்சரியமாகவே இருந்தது.

**திருமஞ்சனக் கோபுரம்:**

வலது கைப்பக்கமாக மூலவரைப் பார்க்கும் நந்தியைப் பார்த்தோம். இடது கைப்பக்கமாக "திருமஞ்சனக் கோபுரம்" எனும் மேற்குக் கோபுரம் அருகே வந்து மேற்கு திசையைப் பார்த்தபடி நிற்கிறோம். சற்றுத் தள்ளி நாம் கடந்து வந்த பொன்முகலி ஆற்றின் பாலம் தெரிகிறது. கோபுர வாசலிலிருந்து 27 படிகள் கீழிறங்கினால் பொன்முகலி ஆற்றில் காலை வைக்கலாம். இந்த 27 படிகளும் 27 நட்சத்திரங்களைக் குறிப்பதாக ஐதீகம். இந்தப் படிகள் வழியாகத்தான் குடுமித் தேவருக்கு அபிஷேகநீர் கொண்டு செல்லப்படுகிறது. (கோபுரமோ படிக்கட்டுக்களோ இல்லாமல்) காடு மண்டிக் கிடந்த

**விலையுயர்ந்த பொருள் ஆசையின்மை.**

அந்தக் காலத்தில் திண்ணனார் இந்த வழியாகத்தான் பொன்முகலி ஆற்றுநீரை வாயில் கொண்டு சென்றிருக்க வேண்டும் என்கிறார்கள்.

காசியில் உள்ள புனித கங்கைபோல பொன்முகலி ஆறும் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி ஓடுவதால் "உத்தரவாகினி" எனப்பட்டது. நதிகள் உத்தரவாகினியாகப் பாயும் இடங்களில் பிதிர் கடன் செய்வதும், அஸ்தி கரைப்பதும் விசேடமானது. முனிவர்கள் பலரும் ஸ்வர்ணமுகியில் (பொன்முகலி ஆற்றில்) கிழக்குப் பார்த்தபடி நீராடி நிற்க, அவர்களுக்குக் காட்சி கொடுப்பதற்காகவே காளத்திநாதர் மேற்கு நோக்கி உள்ளதாக ஐதீகம்.

நாமும் திருமஞ்சனக் கோபுர வாசலில் நின்றபடி கிழக்கே பார்த்தால் நந்தியின் பின்புறம் மட்டுமல்ல பல்வேறு மண்டபங்களும் மண்டபங்களில் வீற்றிருக்கும் லிங்க மூர்த்தங்களும் தெரிகிறது. நாற்கால் மண்டபம் ஒன்றின் அருகே அஸ்டோத்தர லிங்கம் உள்ளது. ஒரு பெரிய நூற்றுக்கால் மண்டபமும் அருகில் பஞ்சசந்தி விநாயகர் சந்நிதியும் காணப்படுகிறது. இந்த நூற்றுக்கால் மண்டபத்தில் வாகனங்கள் வரிசையாக வைக்கப்பட்டுள்ளன. எதிரே ஒரு பதினாறு கால் மண்டபம், தேவார மண்டபம், புஸ்ப மண்டபம் எனப் பல மண்டபங்களைப் பார்க்கிறோம். மேற்குப் பிரகாரம் திரும்பி தென் சுற்றுக்கு வருகிறது. மேலே குறிப்பிட்ட நூற்றுக்கால் மண்டபத்திற்கும் தென் கோபுரத்திற்கும் இடையில் பழைய கட்டிடப் பாணியில் காணப்படும் கட்டிடமே தேவஸ்தான அலுவலகமாகும். அருகே உற்சவ மண்டபம். உற்சவ மண்டபம் அருகே ஸ்தல விருட்சமான கல்லால மரம் (விழுதுகள் இல்லாத ஆலமரம்) கிளை பரப்பி நிற்கிறது.

### தசஷிண காலி கோபுரம்:

கல்லால மரத்தினைப் பார்த்தபடியே நடந்துவர "தஷிண காலி கோபுரம்" வருகிறது. இந்தத் தென் கோபுரம் 11ஆம் நூற்றாண்டில் குலோத்துங்கன் ஆட்சியில் கட்டப்பட்டதாகச் சொல்கிறார்கள். தஷிண கோபுரத்தினூடாக உள்ளே வருபவர்கள் நேராக நுழைவு வாசலினூடாக உட்பிரகாரத்திற்கு வந்து விடுவார்கள். நுழைவு வாசல் முன்பாக இரண்டு கொடிமரங்கள் காணப்படுகிறது. ஒன்று கவசமிடப்பட்டுள்ளது. மற்றது 60 அடிவரை உயரம்கொண்ட ஒரே கல்லினாலான கொடிமரம். நாமும் நுழைவு வாசலினூடாக முறைப்படி வலஞ்சுழியாக உட்பிரகாரத்துக்கு வருகிறோம். நேராக தட்சணாமூர்த்தி தரிசனம் (விபரம் பின்னர் வரும்)

இடது பக்கமுள்ள சிறு மண்டபத்தில் "சங்கற்ப கணபதி"யின் தரிசனம் மீண்டும் பிரகார வலத்தினைத் தொடர ஒரு குறித்த இடத்தில் நின்று பார்த்தால் சுவாமியின் விமான கலசமும், அதன் பின்புறமாக கைலாசமலையும் தெரிகிறது. அடுத்து "சரஸ்வதி தீர்த்தம்" என்றழைக்கப்படுகின்ற தீர்த்தக் கிணறு. அடுத்து இடது பக்கமாக செங்கல்வராஜர் (ஆறுமுகர்) சந்நிதி. வள்ளி- தெய்வானை சகிதம் முருகன் அழகுத் தோற்றம் காண்பிக்கிறார்.

அடுத்து உற்சவ அலங்கார மண்டபம். இங்கே காளத்தீஸ்வரர், ஞானப்பூங்கோதை, கண்ணப்பர், வள்ளி தெய்வானையுடன் ஆறுமுகர், பரத்வாஜ மகரிஷி, பிட்சாடனர், அத்தறதேவர், விநாயகர், சிலந்தி- யானை- பாம்பு முதலிய உற்சவத் திருமேனிகள் உள்ளன. அருகேயுள்ள ஒரு மண்டபத்தில் சுந்தர கணபதி- மோட்ச கணபதி- பாலகணபதி என மூன்று கணபதிகளின் தரிசனம் கிடைக்கிறது.

**ஒரு மனத்துடன் ஒழுங்காகச் செய்வதே செயல்.**

**மூலவர் - காளத்தீஸ்வரர்:**

*மூலவர் சந்நிதிக்குள் காலடி வைக்கிறோம். தனி உட்பிரகாரத்தோடு கூடிய சந்நிதி இது. மேற்கே- வெளிப்பிரகாரத்தில் சாளரம் வழியாக கருவறையைப் பார்க்கும் நந்தியின் பின்புறத்தைப் பார்த்தோமே... ஞாபகமிருக்கிறதா? அதே நந்தியின் முற்பக்கத்தை- உட்பிரகாரத்தில்- மூலவருக்கு நேராக இப்போது பார்க்கிறோம். மூலவர் சந்நிதானம் முன்பாக சிறியதொரு இன்னொரு நந்தியும் உள்ளார். அழகிய சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய முன்மண்டபத்தினை ரசித்தபடியே நேராக நிமிர்ந்து பார்த்தால்.... காளத்தியப்பர், காளத்தீஸ்வரர், வாயுலிங்கேஸ்வரர், குடுமித்தேவர், தென்கயிலைநாதர், கணநாதர், ஐங்குடுமித்தேவர் எனவும், இன்னும் பல திருநாமங்களும் கொண்ட இறையனார் சுயம்புவாக அங்கே எழுந்தருளியுள்ளார். கிட்டத்தட்ட நான்கு அடி உயரமான உயர்ந்த லிங்கபாணம். லிங்கபாணத்தின் மேலாக எப்போதும் தங்கக் கவசம் சாத்தப்பட்டிருக்கும். அந்தத் தங்கக் கவசத்தின் மேல் நுனியில் ஐந்து தலை நாகம் படமெடுத்தபடியுள்ள ஒரு தங்கக் கவசமும் உண்டு.*

*தங்கக் கவசத்தின் மேலாக ஒன்பது அடுக்குகளில் (மூன்று- மூன்றாக) 27 நட்சத்திரங்களும் பொறிக்கப்பட்டுள்ளன. ஒரே ஒரு நீண்ட மாலையும், ஒரு உருத்திராக்க மாலையும் மூலவரை அலங்கரிக்கின்றன. லிங்கபாணத்தைச் சுற்றிவர (சற்றே இடைவெளி விட்டு- சட்டவிளக்கு என்று சொல்கிறோமே- அந்த மாதிரி) சுடர் விளக்குகள் எரிந்தபடி உள்ளன. அந்த விளக்கு அலங்காரத்தின் உச்சியில் அழகிய சிறிய பொற்குடை வைக்கப்பட்டுள்ளது. மூலவரின் தரிசனத்திற்காக வரிசை வரிசையாகக் காத்திருக்கும் பக்தர் கூட்டத்தினரின் அர்ச்சனை முதலான காரியங்களைக் கவனிக்க பல அர்ச்சகர்களும் காத்து நிற்கின்றனர்.*

**மூலவரைச் சுற்றியுள்ள சட்டவிளக்கொளி தவிர, இன்னும் பல சுடர் விளக்குகளும் கருவறையின் உள்ளே ஒளிபரப்பிக்கொண்டிருக்கின்றன. ஏனைய விளக்குகளின் சுடர்கள் அனைத்தும் ஆடாமல்- அசையாமல் அப்படியே நிலைத்திருக்க, இரண்டு சுடர்கள் மட்டும்- ஏதோ கடுங்காற்று வீசுவதுபோல வேகமாக அசைந்தாடுகின்றன. (கருவறைக்குள் காற்றுவர வழியேயில்லை) மற்றைய சுடர்கள் நிதானமாக இருக்க இந்த இரண்டு சுடர்களுக்கு மட்டும் இந்த வேகம் எப்படி வருகிறது....?**

**காளஹஸ்தி பஞ்சபூத ஸ்தலங்களுள் வாயுத்தலம். காற்றாகி எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் எழில் தலம் இது. கருவறையில் பரமனார் காற்று வடிவாகி நிறைந்திருப்பதனால் இரண்டு சுடர்களும் எப்போதும் அசைந்தாடிக் கொண்டே இருக்கின்றன.**

*மூலவருக்கான அர்ச்சனை காரியங்களில் மும்முரமாக இருந்த இளம் அர்ச்சகர்கள் பலரையும் விடுத்து, ஒரு ஓரமாக ஒதுங்கியிருந்த வயது முதிர்ந்த அர்ச்சகர் ஒருவரை அணுகி, ஏற்கனவே நாம் அறிந்திருந்த சில விபரங்கள் பற்றி வினாவினோம். அந்த அர்ச்சகர் கூறிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளது:*

**"தங்கக் கவசத்தினுள்ளே உள்ள சுயம்பு லிங்க மூர்த்தம் அடிப்பகுதி பருத்தும், மேற்பகுதி சற்றே ஒடுங்கியும் காணப்படுகிறது. சிலந்தி- யானை- பாம்பு என மூன்று ஜீவன்களின் உடல்ருபங்களையும் காளத்திநாதர் தம் திருமேனியில் தாங்கியுள்ளார்.**

**பண்பில்லாத வாழ்வு பதருக்கு நேராகும்.**

**அடியில் சிலந்தி, நடுவில் யானையின் தந்தங்கள், மேலே நாகத்தின் ஐந்து தலைகள் ஆகியன திருமேனயில் பதிந்துள்ளன. இதைவிட மேலே வலதுபுறம் திண்ணன் கண் அப்பிய வடுவையும் காணலாம். கவசத்தை வைக்கும் போதும் எடுக்கும்போதும் நமது (அர்ச்சகர்களின்) கைகள் திருமேனி தீண்டாமல் மிக அவதானமாக இருப்போம்".**

*குடுமித் தேவரின் இத்தகைய அழகிய இயல்பான திருமேனியைத் தரிசிக்கக் கொடுத்து வைக்கவில்லை நமக்கு. நாம் செய்த "பாவத்தின் பயன்" என நம்மை நாமே நொந்து கொண்டோம்.*

*சிவன் முக்கண்ணன். கோபத்திற்கான நெற்றிக்கண்ணை சாந்தமான நிலையில் அவர் திறப்பதில்லை. காளத்திநாதருக்கோ மற்ற இரண்டு கண்கள்கூட அவருக்குச் சொந்தமில்லை. ஏன் தெரியுமா? ஐயனின் இடப்பாகம் அம்பிகைக்குரியது. அதனால் இடக்கண் அம்பிகையின் கண். வலக்கண்ணோ கண்ணப்பன் அப்பிய கண். ஆகவே இவருக்குக் கண்கள் சொந்தமில்லை. ஆகமொத்தம்.... நெற்றிக் கண்ணில் பாதி மட்டுமே இவருக்குரியது. இதையே காளமேகப் புலவர் "சிவனாருக்கு அரைக்கண்" என நகைச்சுவை ததும்பப் பாடுகிறார்.*

முக்கண்ண னென்றரனை முன்னோர் மொழிந்திடுவர்
அக்கண்ணற் குள்ள தரைக்கண்ணே - மிக்க
உமையாள் கண் ணொன்றரைமற் றூன்வேடன் கண்ணொன்
றமையுமித னாலென் றறி

*காளத்திநாதனைக் காணக் கண்கோடி வேண்டும். எவ்வளவு நேரம் தொழுது மகிழ்ந்தாலும் தெவிட்டாத திவ்விய தரிசனம் இது. இந்த அற்புத தரிசனம் தரும் அமைதியும் சாந்தியும் அளவிடமுடியாது. சந்நிதியில் மூலவருக்குப் பக்கத்திலேயே மனோன்மணி சக்தியின் திருமேனியும், அருகில் கைகூப்பித் தொழும் கண்ணப்பரையும் ஒன்றுசேரத் தரிசிக்கிறோம்.*

*மூலவர் கருவறையைத் தனியாக வலம்வர முடியுமாயினும் கூட்ட நெரிசலைக் கட்டுப்படுத்துவதற்காக கருவறை வலத்தினைத் தடை செய்துள்ளனர். விநாயகர், தட்சணாமூர்த்தி, லிங்கோற்பவர், பிரம்மா, துர்க்கை ஆகியோர் கோஷ்ட மூர்த்தங்களாக உள்ளனர். இது கிரக நிவர்த்தி ஸ்தலம். ராகு காளத்தீஸ்வரரிடத்தில் அடைக்கலமாகியிருக்க, கேதுவை அம்பாள் தன் திருமேனியில் ஒட்டியாணமாக அணிந்துள்ளாள். இதனால் இங்கு நவக்கிரக சந்நிதி இல்லை. சனீஸ்வரனுக்கு மட்டும் தனிச் சந்நிதி உண்டு.*

*காளத்தீஸ்வரர் சந்நிதியில் திருநீறு பிரசாதம் தரும் வழமை இல்லை. கண்ணப்பரால் அபிஷேகிக்கப்பட்ட திருமூர்த்தம் என்பதால் தீர்த்தம் மட்டுமே உண்டு. பச்சைக் கற்பூரத்தைப் பன்னீர்விட்டு அரைத்த தீர்த்தத்தை சங்கு ஒன்றின்மூலம் எமக்குத் தருகிறார்கள். நமக்கு அருகே நின்றிருந்த ஒரு தம்பதியர் கொடுத்த திருநீற்றுப் பொட்டலத்தினை சுவாமி பாதத்தில் வைத்து தீபாராதனையின் பின்னர் மீண்டும் அவர்களிடமே கொடுத்ததைப் பார்த்தோம்.*

**கோயில் பொது அம்சங்கள்:**

*திருக்காளகஸ்தி தோஷ நிவர்த்தி ஸ்தலமாக உள்ளமையால் இராகு கால பூசைகளும் தரிசனமும் இங்கு விசேடமானவை. பகல் உச்சிக்காலப் பூசை முடிய நடை*

சாத்தப்படும் வழமை இங்கில்லை. அதிகாலை முதல் இரவுப் பூசைவரை கோயில் திறந்தே இருக்கும். முறைப்படியான நான்கு காலப்பூசைகள் இங்கு நடைபெறுகின்றன. இங்கு இன்னொரு வித்தியாசமான அம்சமும் நோக்கப்பட வேண்டியது. அர்த்த சாமப்பூசை இங்கில்லை. சாயரட்சைப் பூசை முடிந்து இரவு 8 மணிக்கு சுவாமி- அம்பாளை பள்ளியறைக்கு எடுத்துச் சென்று சேர்த்து விடுவார்கள்.

காளத்தீஸ்வரர் கோயில் அமைப்பு விசேடமானது. ஐயன் சந்நிதியும், அம்பிகையின் சந்நிதியும் அடுத்தடுத்து இணையாக உள்ளது. ஐயன் சந்நிதி மேற்கு நோக்க, அம்பிகையின் சந்நிதி கிழக்குப் பார்க்கிறது. இரண்டையும் சேர்த்தே உட்பிரகாரம் உள்ளது. இதைத்தவிர, இரண்டிற்கும் தனித்தனியாக உள்சுற்றுக்களும் உண்டு. ஆனாலும் ஐயனின் உள்சுற்றினை- சனநெரிசல் காரணமாக- தடுத்திருப்பதுபற்றி ஏற்கனவே குறிப்பிட்டேன். அப்பனுக்கு வலமாக அம்பிகை அமர்ந்திருக்கும் ஒரு சில கோயில்களுள் காளஹஸ்தியும் ஒன்று.

## உட்பிரகாரம் - மேற்குச் சுற்று:

மூலவர் தரிசனத்தை முடித்து பிரகார வலத்தை (மேற்குச் சுற்று) தொடர்ந்தால் பல மண்டபங்களையும் சந்நிதிகளையும் சந்திக்கிறோம். வள்ளி- தெய்வானை சமேத சுப்பிரமணியர், காசி விஸ்வநாதர், ராமேஸ்வர லிங்கேஸ்வரர்: வில்லேந்தியபடி பக்த கண்ணப்பர், வல்லப கணபதி- லட்சுமி கணபதி- சக்தி கணபதி என மூன்று கணபதி மூர்த்தங்கள் தவிர இன்னும் பலப்பல லிங்கங்களும் காணப்படுகின்றன. மேற்குச் சுற்றிலிருந்து வடக்குச் சுற்றுக்குத் திரும்பும் மூலையில் கனகதுர்க்கையம்மன் சந்நிதி. வடக்குச் சுற்றுக்கு வந்தவுடன் நடராஜர் சபை. இரண்டு நடராஜர் திருமேனிகளும், இரண்டு சிவகாமி அம்மை திருமேனிகளும் உள்ளன. கூடவே மாணிக்கவாசகரும் உள்ளார். தொடர்ந்து அறுபத்துமூவர் சந்நிதி. கிழக்குச் சுற்றினுள் நுழைய முன் கால பைரவர். அருகே இருப்பதுதான் "ஞானப்பிரசூனாம்பிகை" எனும் திருநாமம் கொண்ட அம்பிகையின் திருவாசல்.

## அம்பாள் சந்நிதி:

ஞானப்பூங்கோதை, ஞானக்கொழுந்து, ஞானசுந்தரி, ஞானப்பேரொளி, வண்டார் குழலாள் எனப் பலபெயர் கொண்டு அம்பிகையை அழைத்தாலும் "ஞானப்பிரசூனாம்பிகை" எனும் திருநாமமே பிரசித்தமானது. அம்பிகையின் திருவாசலின் உள்ளே நுழையும் இடத்தில் உயரமான அலங்கார விளக்கு. நந்தி இருக்க வேண்டிய இடத்தில் சிம்மம் உள்ளது. ஈசனின் சந்நிதியில் நந்திதேவரை யாரும் தொட்டு வணங்குவதில்லை. ஆனால் இங்கு அனைவரும் சிம்மத்தைத் தொட்டு வணங்கியே செல்கின்றனர்.


இரண்டு திருக்கரங்களுடன் அம்பிகை ஞானப்பிரசூனாம்பிகை நின்ற திருக்கோலத்தில் அருள் பாலிக்கிறாள். அம்பிகையின் இடுப்பில் ஒட்டியாணமாகக் கட்டப்பட்டிருக்கும் கேது. அழகிய சாந்தமான் முகப்பொலிவு. அளவான அலங்காரம். இவளை வணங்கினால் கிரக தோஷங்கள் தீரும் என்கிறார்கள். சந்நிதியைத் தனியாக வலம்வரலாம். கோஷ்ட மூர்த்தங்கள் எதுவுமில்லை. வெள்ளிதோறும் அம்பாளுக்குத் தங்கப்பாவாடை சாத்தப்பட்டு எதிரில் உள்ள மண்டபத்தில் ஊஞ்சல் உற்சவம் நடைபெறுகிறது. சந்நிதிக்கு வெளியே மேல் விதானத்தில் "ராசிச்சக்கரம்" எழுதப்பட்டுள்ளது. அவரவர் ராசிக்கு நேராக நின்றபடி அம்பிகையை நினைத்து வணங்கினால் எண்ணியன யாவும் கைகூடும்.

பிரகார வலத்தினைத் தொடர்ந்தால், நாம் காணும் பல்வேறு லிங்கங்களுள் உயரமாக உள்ள ஒரு லிங்கம் "பிரசன்ன காளத்தீஸ்வரர்" என்றும், ஆதிசங்கரரால் பிரதிஷ்டை செய்யப்பட்ட "ஸ்படிக லிங்கமும்" குறிப்பிடத்தக்கன. அருகிலேயே அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், கூடவே ஒரு வைரவரும் உள்ளனர். திரும்பும் மூலையில், சிலந்தி-யானை- பாம்பு இவற்றுடன் கண்ணப்பர் உருவங்களும் புடைச் சிற்பங்களாகக் காணப்படுகின்றன.


**தட்சணாமூர்த்தி:**

நாம் இப்போது உட்பிரகாரச் சுற்றினை முழுமையாக நிறைவு செய்து (தெற்கு வாசல் எதிரே) மீண்டும் தட்சணாமூர்த்தி அமர்ந்துள்ள இடத்துக்கு வந்துவிட்டோம். கண் கொள்ளாத பேரெழிலுடன் காட்சிதரும் தட்சணாமூர்த்தியின் வலது காலடியில் இருக்கும் முயலகன் லேசாகத் தலைநிமிர்த்திப் பார்க்கிறான். இடது கால் மடித்து வலதுகால்மீது வைக்கப்பட்டுள்ளது. சனகர், சனாதரர், சனந்தரர், சனத்குமாரர் ஆகிய நான்கு முனிவர் களுக்கும் கல்லால மரத்தின்கீழ் தட்சணாமூர்த்தி உபதேசிக்கும் காட்சி இது. இதனால் இத் திருத்தலத்தின் தலமரங்களில் ஒன்று கல்லாலம் (விழுதுகள் இல்லாத ஆலமரம்) எனப்படுகிறது. மற்றையது; மகிழ மரம். கோயிற் பிரகாரத்தின் தெற்குக் கோபுர வாசல் வழியிலே மகிழ மரம் காணப்படுகிறது. சின்முத்திரை காட்டி உபதேசிக்கும் மௌனகுருவின் புன்னகை ததும்பும் பொலிவான திருமுகத்தினை வணங்கித் துதி செய்து தெற்குக் கோபுரம் (தஷிண காலி கோபுரம்) வழியாக நாம் வெளியே வருகிறோம்.

## காலி கோபுரம் இடிந்து வீழ்ந்தது



**16ஆம் நூற்றாண்டில் கிருஷ்ண தேவராஜரால் கட்டப்பட்டது காலிகோபுரம். யான் காளத்தியப்பனைத் தரிசிக்கச் சென்ற போது வெள்ளை நிறத்தில் இக்கோபுரம் பளிச்சிட்டு நின்றது. ஆனால்.... ஆனால், 26.05.2010 புதன்கிழமை நள்ளிரவு இக் கோபுரம் முற்றாக இடிந்து விழுந்தமை உலகம் முழுவதுமுள்ள சைவப் பெருமக்களினை அதிர்ச்சியடையச் செய்தது. கோபுரத்துக்கு முன்பாக நிறுவப்பட்டிருந்த கிருஷ்ணராஜரின் சிலைக்கோ, அல்லது மிக நெருக்க மாக இரு பக்கமும் நிறுவப்பட்டிருந்த கடை வரிசை களுக்கோ சேதமெதுவுமின்றி அல்லது எவருக்காவது உயிரிழப்போ இன்றி அப்படியே இடிந்து விழுந்து மண்மேடாகியது காளத்தியப்பன் கருணையே. அதனை மீண்டும் அதே அமைப்பில் கட்டித் தருவதாக ஆந்திர அரசு சைவ உலகிற்கு உறுதியளித்திருக்கிறது.**



நல்ல அறிவுரை விலைமதிப்பற்றது.

**தஷிண கயிலாய மலை:**

சற்றே முன் புறமாக நிமிர்ந்து பார்த்தால் தெரிவதுதான் "தஷிணகயிலாயமலை". இந்த மலையின் பெயராலேயே "கயிலாய நாதர்" என அழைக்கப்படுகிறார் காளத்தீஸ்வரர். காளத்தி மலையைத் தரிசித்தாலே காளத்தி நாதரைத் தரிசித்த பலன் கிடைக்கும். இதையே நக்கீரதேவர் "கயிலை பாதி காளத்தி பாதி" எனப் பாடினார்.

கண்ணப்பர் மலையென்றே அழைக்கப்படுகின்ற கயிலாய மலைமீது ஏறுவதற்கு வசதியாகப் படிகள் உண்டு. மேலே ஏறிச் சென்றால் கண்ணப்பருக்கு ஒரு சந்நிதி. கண்ணப்பர் வழிபட்ட சிவனாருக்கு ஒரு சந்நிதி. வில்லேந்திய கோலத்தில் கண்ணப்பர் காண்படுகிறார். கண்ணப்பர் மலையிலிருந்து பார்த்தால், கீழே, காளத்தீஸ்வரர் கோயிலும், கோயிலைச் சுற்றியுள்ள ஊர்மனையும் தெளிவாகத் தெரிகின்றன. இந்த அழகுக் காட்சியினைக் காண்பதற்காகவே தினமும் பெருங்கூட்டம் மேலேறிச் செல்கிறது.

**சோமாஸ்கந்த வடிவமைப்பு:**

இம் மலையிலிருந்து வடக்கே பார்த்தால் எதிரே துர்க்காதேவி கோயில் கொண்டிருக்கும் ஒரு மலையும், சற்றே கிழக்காகத் திரும்பினால் முருகன் எழுந்தருளியிருக்கும் குன்று ஒன்றும் தெரிகிறது. வடக்கே துர்க்கையும்- தெற்காக காளத்தீஸ்வரரும்- இடையே முருகனும் இருக்கும் இந்த மூன்று மலைகளுமே சோமஸ்கந்த வடிவில் காட்சி தருகின்றன.

**நிறைவுரை:..**

காளத்தியுள் நுழைந்தாலே முத்தி நிட்சயம் என்பது காலங்காலமாக இருக்கும் அசையாத நம்பிக்கை. ஆகவே, வாழ்க்கையில் ஒரு முறையாவது காளத்திநாதரைக் கண்குளிரக்கண்டு முத்திக்கு வழிதேடுவோம்.

## அறவழியில் பொருளும் இன்பமும்

பொருளுக்குத்தான் உலகில் அதிக மதிப்பு. இதைக்கொண்டு யாரும் தவறான வழியில் செல்வம் திரட்டக்கூடாது. அறத்தின் வழியே பொருள் திரட்ட வேண்டும். பிறர் அழ, அழ பொருளைச் சேர்க்கக்கூடாது. பிறரை அழவைத்துச் சம்பாதித்தால் சம்பாதித்தவன் அழ அழ அவன் கையைவிட்டு அது போய்விடும். அறம் என்றால் தர்மம் செய்வது. அதுவும் அறத்துடன் இருக்கவேண்டும். ஒருவனுக்கு நாலணா கொடுக்கிறோம். அதைப் பெற்றுக்கொண்டவன், ஒரு கத்தரிக்கோல் வாங்கி ஊரார் பையெல்லாம் கத்தரித்துப் பணத்தைத் திருடினால் நாம் கொடுத்ததும் வீணாகிவிடும். ஆகவே தர்மம் செய்வதும் தர்மத்துடன் இருக்கவேண்டும். இன்பம்கூட தாலி கட்டிய மனைவியிடம் பெறுகின்ற இன்பமாக இருக்க வேண்டும். தவறான வழியில் வருகின்ற இன்பமாக இருக்கக் கூடாது.

-அறநெறிச் சிந்தனைகள்-

அழிவுக்கு காரணம் அகந்தையே.

# மாசிமாத வாராந்த நிகழ்வுகள்

**01.02.2013 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் ஒரு நோக்கு"

வழங்குபவர் :- திரு J. சந்திரபிரகாஷ் அவர்கள்

[ஆசிரியர், யாழ்/ மத்திய கல்லூரி]

---

**08.02.2013 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

"இன்னிசை"

வழங்குபவர் :- திரு ச. சசிகுமார் [நுண்கலைமாணி] அவர்கள்

பக்கவாத்தியசகிதம் மிருதங்கம் :- சதா. வேல்மாறன் அவர்கள்

வயலின் :- திரு அ. ஜெயராமன் அவர்கள்

---

**15.02.2013 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "தேவி பாகவதம்" (தொடர்)

வழங்குபவர் :- திரு அ. குமாரவேல் அவர்கள்

[சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்/ கல்லூரி வட்டுக்கோட்டை]

---

**22.02.2013 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில்**

# ஞானச்சுடர் மாசிமாத வெளியீடு

வெளியீட்டுரை :- திருமதி புனிதவதி சண்முகலிங்கம் அவர்கள்

[இளை. ஆசிரியர்]

மதிப்பீட்டுரை :- திருமதி நாச்சியார் செல்வநாயகம் அவர்கள்

[முதுநிலை விரிவுரையாளர், யாழ் பல்கலைக்கழகம்]

**182ஆவது மலர்**

பதிவு இல. QD/25/NEWS/2013

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்

